அனைத்துலக பாட்டாளிகளே ஒன்றுசேருங்கள்!

# தேசிய பிரச்சினைபற்றி மாக்சீசக் கண்ணோட்டத்தில் ஒரு விளக்கம்

தோழர், லயனல் போபகே

'நியமுவா'
வெளியீடு

அனைத்துலக பாட்டாளிகளே ஒன்றுசேருங்கள்!

# தேசிய பிரச்சினைபற்றி மாக்சிசக் கண்ணோட்டத்தில் ஒரு விளக்கம்

தோழர், லயனல் போபகே

"நியமுவா"
வெளியீடு

முதலாம் பதிப்பு: 1978 ஜூன்

பதிப்பு:
மேபெயா பிரின்டர்ஸ்,
33/1, மேபீல்ட் றேட், கொட்டாஞ்சேனை, கொழும்பு-13,

# ஒரு வார்த்தை.....

''தேசியப் பிரச்சினை பற்றி மாக்சிசக் கண்ணோட்டத்தில் ஒரு விளக்கம்'' என்ற தலைப்பில் நாம் வெளியிடும் இக் கட்டுரை, மக்கள் விடுதலை முன்னணியின் தற்காலிக மத்திய கமிட்டியின் அரசியற் குழு உறுப்பினர், தோழர் லயனல் போபகேயினால் எழுதப்பட்டது. அவர் பன்னீராண்டுச் சிறைத் தண்டனையை அனுபவித்துக்கொண்டு புதிய மகஸின் சிறைச்சாலையில் இருக்கும்போது, 1975-ஆம் ஆண்டில் இதனை எழுதினார். அப்போது மக்கள் விடுதலை முன்னணி ஒரு சட்ட விரோத இயக்கமாக இருந்தது. இக்கட்டுரை மக்கள் விடுதலை முன்னணியின் 'போல்ஷேவிக்' என்ற கொள்கை வெளியீட்டின் ஓர் இதழில் பிரசுரமாயிற்று. 'போல்ஷேவிக்' என்ற கொள்கை வெளியீடு அக்காலத்தில் ஓர் கையெழுத்துப் பத்திரிகையாக, மிகச் சொற்ப தொகைப் பிரதிகளே தயாரிக்கப்பட்டு இரகசியமாக விநியோகிக்கப்பட்டு வந்தது. அந்த 'போல்ஷேவிக்' இதழ்களில் வரையப்பட்ட அதிவிசேட முக்கியத்துவம் வாய்ந்த கட்டுரைகளை தமிழில் மொழிபெயர்த்து வெளியிட மக்கள் விடுதலை முன்னணியின் தற்காலிக மத்திய கமிட்டி தீர்மானித்தது. அத்தீர்மானத்துக்கிணங்கப் பாட்டாளி வர்க்கத்தினதும், ஏழை மக்களினதும் ஒடுக்கப்பட்ட மக்களினதும் நலன கருதி நாம் இக்கட்டுரையை வெளியிடுகின்றோம்.

தோழர் லயனல் போபகே மூலக் கட்டுரைக்கு மேலும் புதிய விடயங்களைச் சேர்த்து இதனை மீள அமைத்துள்ளார் என்பதனையும் குறிப்பிட விரும்புகின்றோம்.

வெளியீட்டாளர்.

பாட்டாளி வர்க்க ஆட்சியில் ஒரு நபர் மற்ெறாரு நபரைச் சுரண்டுவதை நிறுத்திக் கொள்ளுமளவுக்கு விகிதாசாரமாக ஓரினத்துக்குள்ளேயிருக்கும் வர்க்கங்களுக்கிடையிலான பகைமையுணர்வு அற்றுப் போகுமளவுக்கு விகிதாசாரமாக ஓரினம் மற்ேறார் இனத்துக்குக் காட்டும் குரோத மனப்பான்மையும் அற்றுப்போகும்.

**மார்க்ஸ் — எங்கல்ஸ்**

# தேசியப் பிரச்சினைபற்றி மாக்சிசக் கண்ணோட்டத்தில் ஒரு விளக்கம்

தமிழ்ப் பேசும் மக்கள் மத்தியில் எழுந்துள்ள பல்வேறு பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளவும், நிலவி வரும் ஒரு சில சூழ்நிலைகளை மாற்றியமைத்துக் கொள்ளவும் தமிழ் மக்கள் கடைப்பிடித்து வந்துள்ள நடைமுறையில் ஒரு திட்டவட்டமான மாற்றம் ஏற்பட்டுக்கொண்டு வருகின்றது. வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் வாழும் தமிழ் மக்கள் மத்தியில் இன்றுள்ள பாதையானது முழுத் தேசத்தினதும் பாட்டாளி வர்க்கத்தின் உழைக்கும் மக்கள் மத்தியில் ஒரு திட்டவட்டமான தாக்கத்தை எற்படுத்துமென்பதிற் ஐயமில்லை. தமிழ்ப் பேசும் மக்கள் மொழி, கல்வி, கலாசாரம், தொழில் வாய்ப்பு ஆகிய துறைகளில் எதிர் நோக்கிய பிரச்சினைகளின் போதும் அவர்கள் எதிர்நோக்கிய சூழ்நிலைகள் தொடர்பாகவும், அவர்களின் உரிமைகள் தொடர்பாகவும் தமிழரசுக் கட்சியினர் தமக்குக் கிடைத்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் சிங்கள முதலாளித்துவப் பிற்போக்குத் சலைவர்களோடு மிகவும் சந்தர்ப்பவாதமாகப் பேரம் பேசுவதில் ஈடுபட்டு வந்துள்ளனர். முதலில் அவர்கள் சமஷ்டி அரசொன்றைக் கோரினர்; பின்னர் தமிழ்க் காங்கிரஸாரோடு கூட்டுச் சேர்ந்து, அவர்கள் தற்போது 'தமிழ் ஈழம்' என்ற தனியான தமிழ் அரசொன்றைக் கேட்கின்றார்கள். 1977-ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் பெரும்பான்மையான தமிழ்ப் பேசும் மக்கள் இத் தனித் தமிழ் அரசுக் கோரிக்கைக்கு அங்கீகாரம் வழங்கியிருப்பதாகத் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் கருத்துத் தெரிவித்துள்ளனர், எனினும், வடக்குக் கிழக்குப் பிரதேசங்களின் தேர்தல் முடிவுகளை மாத்திரம் நாம் ஓர் பொதுப்

படையாக எடுத்துக் கொண்டாலும் தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் கருத்துக்கு முரணான நிலைமையையே பிரதிபலிக்கின்றது. மற்றொரு முக்கியமான அம்சம் யாதெனில், பெரும்பாலான தமிழ் மக்கள் வடக்குக் கிழக்குப் பிரதேசங்களுக்கு வெளியே வாழ்வதாகும். தமிழ்ப் பேசும் மக்களின் சில தொழிற் சங்கங்கள் உட்பட பல்வேறு இயக்கங்கள் இத்தனி நாட்டுக் கோரிக்கைக்குத் தமது வன்மையான எதிர்ப்பைத் தெரிவித்துள்ளன.

பாரம்பரிய, பழைய இடதுசாரி இயக்கம் மென்ஷேவிக்* குட்டையில் மிகமிக ஆழமாகப் புதையுண்டு, அதன் அடிவருடிகளாக வரும் சகல இயக்கங்களையும், சகல நபர்களையும் அதன் சக்தியில் மூழ்கடித்து, முதலாளித்துவ வர்க்கத்துக்குப் பகிரங்கமாகவோ, இரகசியமாகவோ வர்க்க ஒத்துழைப்பு நல்கிப் பாட்டாளி வர்க்கத்தையும் உழைக்கும் மக்களையும் காட்டிக் கொடுக்கின்ற துரோக அரசியற் சித்தாந்தத்தை மிகக் கண்டிப்பாகக் கடைப்பிடித்த போதே இந்நாட்டின் சிறுபான்மையோர் தமது உரிமைகளுக்காகவும் நலன்களுக்காகவும் விடுக்கும் கோரிக்கைகளும் போராட்டங்களும் காட்டிக் கொடுக்கப்பட்டுவிட்டன. சமத்துவக் கொள்கை என்று தொடங்கி, சிங்கள மொழியை அரசாங்க மொழியாக ஏற்றுக்கொண்டு இறுதியாக முதலாளித்துவ வர்க்கத்தோடு பின்னணி அமைத்துக் கொண்ட கூட்டரசியற் கொள்கையின் மூலமாகப் பழைய இடதுசாரி இயக்கம் நேரடியாகவே இனவாத முதலாளித்துவக் கருத்துக்களுக்கும் கோட்பாடுகளுக்கும் பலியாகிவிட்டது. இத்தகைய மென்ஷேவிக் வாதிகளுக்குப் பாராளுமன்ற

---

* மென்ஷேவிக் வாதம் - முதலாளித்துவ வர்க்கத்துக்கு வர்க்க ஒத்துழைப்பு நல்குமாறு போதிக்கும் சிறு முதலாளித்துவக் கொள்கை.

அரசியற் சிறு பான்மையோரிடம் கிடைத்திருந்த சொற்ப ஆதரவும் அற்றுப் போய்விட்டதை 1977-ஆம் ஆண்டில் நிகழ்ந்த பொதுத் தேர்தல் முடிவுகள் எடுத்துக் காட்டுகின்றன. மேலும், மிகச் சொற்ப அளவிலான தொழிற் சங்க அடிப்படையைத் தவிர, வடக்குக் கிழக்குப் பிரதேசங்களுட்பட ஏனைய பிரதேசங்களிலும், தொழிலாளர்களிடத்திலும் இளைஞர்களிடத்திலும் கம்யூனிஸ்ட், சமசமாஜக் கட்சிகளின் செல்வாக்கு அற்றுப் போய் விட்டமை தெளிவாகியுள்ளது. இந்தச் சீர்கெட்ட நிலையிலும், புதிய இடதுசாரிகளாகக் காட்சியளிக்க முற்பட்டுக் கொண்டு, பழைய இடதுசாரிகளின் வாலைக் கெட்டியாகப் பற்றிப் பிடித்துக் கொண்டிருக்கும் சில குழுக்களும், அதே தலைவிதியை எதிர் நோக்க வேண்டியிருக்கும். இவர்களோ, பெரும்பான்மைச் சிங்களவர் வாழும் பிரதேசங்களிலுள்ள தமிழ்ப் பேசும் மக்களைப் பாதுகாக்க, முதலாளித்துவ போலிசுக்கு உதவுவதற்காகக் குழுக்களை நிறுவ வேண்டுமென ஆலோசனை கூறுகிறார்கள். இது, 1971-ஆம் ஆண்டின் எழுச்சியின் போது அவர்கள் கையாண்ட வர்க்கத் துரோக நடவடிக்கைகளைத் தொடர்ச்சியாக மேற்கொள்ள அவர்களுக்குள்ள அவாவினை எடுத்துக் காட்டுகிறதல்லவா?

சிறுபான்மையோரின் உரிமை விடயத்தில் ஏற்பட்ட இத்தோல்வி கம்யூனிஸ்ட், சமசமாஜக் கட்சிகளுக்கு மாத்திரம் ஏற்பட்டதல்ல; தம்மை மார்க்சிசவாதிகளெனப் பெயர் சூட்டிக்கொண்டுள்ள சகல கட்சிகளும், குழுக்களும் தனி நபர்களும் அத்தோல்விக்கு இலக்காகியுள்ளனர். பல்வேறு திரைகளுக்குப் பின்னால் பதுங்கிக்கொள்ளும் இவர்கள், தமிழ்ப் பேசும் மக்களுட்பட ஏனைய சிறுபான்மையோர் தொடர்பான பிரச்சினைகளின்போது மார்க்சிசவாதிகள் கொள்ள வேண்டிய சரியான விஞ்ஞான ரீதியான பாதையிலிருந்து விரண்டோயுள்ளார்கள். "நீங்கள் முன்னேறிச் செல்வதற்கான பாதை இதோ" எனத் தமிழ்ப் பேசும் மக்களுக்குச்

சுட்டிக் காட்டக்கூடிய ஒரு பாதையேனும் அவர்களிடத்தில் இல்லை. * ''சோவியத் - சமூக - ஏகாதிபத்திய''த்துக்கும் அதன் ஆதரவாளர்களுக்கும் எதிராக நிலவுகின்ற அடிப்படையான எதிர்ப்பைச் சமாளிப்பதற்காக, அவர்கள் எப்போதும் பிற்போக்குச் சக்திகளை ஒன்று திரட்டி அச்சக்திகளோடு கூட்டு முன்னணிகளைக் கட்டியெழுப்புவதில் ஈடுபட்டுள்ளனர். இத்தகையோர் கூறக்கூடிய ஒரே பதில் யாதெனில் ''நாம் சோஷலிஸ அமைப்பை நிறுவியவுடனே உங்கள் பிரச்சினைகள் யாவற்றையும் தீர்த்துவிடுவோம். அதுவரை பொறுத்திருங்கள்'' என்பதாகும், மென்ஷேவிக் வாதிகளின் மக்கள் முன்னணி அரசியலின் விளைவாகத், தமிழ்ப் பேசும் மக்களை உறுத்துகின்ற உடனடிப் பிரச்சினைகளுக்கு மாத்திரமன்றி நீண்ட காலப் பிரச்சினைகளுக்கும், பரிகாரமாகச் செயல் திறனுள்ள ஒரு மார்க்கத்தையோ அல்லது ஒரு யதார்த்தமான பதிலையோ கூறமுடியாத பழைய இடதுசாரி இயக்கங்களுக்கும் பிற குழுக்களுக்கும், பிரிவினர்க்கும், பாட்டாளி வர்க்கம் முதலாளி வர்க்கத்துக்கெதிராகத் தொடுத்துள்ள போராட்டத்தோடு, தேசிய சிறுபான்மை மக்கள் தேசிய அடக்குமுறைக்கெதிராகத் தொடுத்துள்ள போராட்டத்தையும் ஒன்றிணைப்பதற்கான வேலைத் திட்டமொன்று இடதுசாரி பழைய தலைவர்களிடத்தில் இல்லை.

கடந்த ஆகஸ்ட் மாதம் 12-ஆம் திகதி தொடக்கம் அண்மைக் காலம் வரையிற் பல்வேறு சந்தர்ப்பவாத, இனவாதக் குழுக்களாலும் நபர்களாலும் உருவாக்கப்பட்ட சம்பவங்கள், தமிழ்ப் பேசும் மக்களினது, குறிப்பாகத் தமிழ் மக்களினது பிரச்சினைகள் இனிமேலும் ஒத்திவைக்கப்பட முடியாத, உடனடித் தீர்வு காண வேண்டிய, சுட்டெரிக்கின்ற

---

* சோவியத் சமூக ஏகாதிபத்தியம் - சோவியத் யூனியன் செங்கொடியைக் கையிலேந்திக்கொண்டு ஓர் ஏகாதிபத்தியத்தை நிறுவியுள்ளதாகச் சீனு கூறுகின்றது.

பிரச்சினை என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. இக்கட்டுரையின் பிரதான குறிக்கோளாவது, அப்பிரச்சினை தொடர்பாக நாம் கொண்டுள்ள கருத்துக்களை எடுத்துக் கூறி, அதனை மார்க்ஸிஸ - லெனினிஸ சித்தாந்த வாயிலாகப் பரிசீலிப்பதாகும்.

## சர்வதேச பாட்டாளி வர்க்கமும் இனவாதமும்.

உலகெங்கிலும் பரவியுள்ள இரு பெரும் வர்க்க முகாம் களோடு ஒப்பிடக் கூடிய இரு கொள்கைகள் அல்லது அகில நோக்குகள் தேசீயப் பிரச்சினை தொடர்பாகவும் வெளியிடப் பட்டுள்ளன. அவை ஒன்றோடொன்று ஒற்றுமைப்படுத்த முடியாத அளவுக்கு எதிரும் புதிருமான இரு சுலோகங்களாக வெளியிடப்பட்டுள்ளன. ஒன்று முதலாளித்துவ இனவாதம்; மற்றையது பாட்டாளி வர்க்கச் சர்வ தேசியமாகும். சமூக அபிவிருத்திக்கும் முற்போக்குப் பயணத்துக்கும் பணிபுரிவது பாட்டாளி வர்க்கச் சர்வ தேசியமன்றி முதலாளித்துவ இன வாதமன்று. முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியால் தீர்க் கப்பட வேண்டிய சிறுபான்மையோர் பிரச்சினையைத் தீர்க்கும் ஆற்றலோ அன்றித் தீர்க்கப்பட வேண்டிய அவசியமோ, தற்கால வரலாற்று நிலைமைகளின் கீழ், முதலாளித்துவ வர்க்கத்துக்கும் குறிப்பாகக் குடியேற்றவாத, நவ குடியேற்ற வாத முதலாளி வர்க்கத்துக்கும் இல்லை. ஆனால், அச்சிறு பான்மையோர் பிரச்சினையை முதலாளி வர்க்கம் தனது குறுகிய நோக்கங்களுக்காகப் பயன்படுத்திக் கொள்கின்றது. ஏகாதிபத்திய வாதிகள் தமது பிரித்தாளும் கொள்கையின் படி, இன பேதங்களைப் பயன்படுத்திக்கொண்டனர். பின்னர், நவ குடியேற்ற வாதத்தின் வாரிசுகளாக வந்த தேசீய முதலாளி வர்க்கமும் அவர்களையே பின்பற்றி இனப்பாகு பாட்டைத் தத்தமது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வ

தற்காகப் பயன்படுத்திக் கொண்டுள்ளது. தற்பொழுதும் அவ்வாறே பயன்படுத்திக் கொண்டு வருகின்றது. இதே யளவு முக்கியத்துவம் வாய்ந்த மற்றோர் அம்சமும் உண்டு. அதாவது தேசிய கலாசாரம் சம்பந்தமான சுலோகங்களை வெளியிட்டுக் கொண்டு அவற்றின் மீது "கலாசார - தேசிய இறைமை" என அழைக்கப்படும் ஓர் பொது அமைப்பை அல்லது செயல் திட்டத்தை நிறுவியமையாகும். இப்பணி யில் மென்ஷேவிக் வாதிகள் தேசிய ரீதியில் மாத்திரமன்றிச் சர்வ தேச ரீதியிலும் முதலாளித்துவ இனவாதிகளின் ஆயுதங் களாகவும் கையாட்களாகவுமே செயல்பட்டு வந்துள்ளனர். அவ்வாறே செயல்பட்டும் வருகின்றனர். பாரம்பரியமான பழைய இடதுசாரியினரின் இத்தகைய ஆதரவு காட்டும் கொள்கையே இலங்கையிற் சிறுபான்மையோர் பிரச்சினையின் வரலாறு முழுவதிலும் இழையோடிக் கொண்டிருக்கின்றது. இத்தகைய கருத்து திட்டவட்டமாகவே தோல்வியடைந்து விடும் என்பது வெள்ளிடை மலையாகும்.

வளர்ந்து வரும் முதலாளித்துவத்தினுள் தேசியப் பிரச்சினையின் வரலாற்றுப் போக்குகள் இரண்டைக் காணலாம். முதலாவதாக, தேசிய எழுச்சியும், தேசிய இயக்கங்களும் புத்துயிர் பெறுதல், எல்லா வகையான தேசிய அடக்குமுறைகளுக்கும் எதிராகப் போராடுதல், தேசிய அரசாங்கங்கள் உருவாதல் என்பனவாகும். இரண்டாவது நோக்கில், எல்லா வகையிலும் சர்வ தேசத் தொடர்புகள் ஏற்பட்டு, அவை வளர்ச்சியடையும். தேசிய முட்டுக்கட்டைகள் தகர்க்கப்படும். பொதுவாக முதலீடு, பொருளாதார விழிப்பு, அரசியல், விஞ்ஞானம் தொழில் நுட்ப அறிவு ஆகிய துறைகளில் சர்வ தேச ஒற்றுமை உருவாகும். இதனாற் தொழிலாளர் தேசிய எல்லைகளைப் புறக்கணித்துவிடும். ஒரு நாட்டின் புவி யியல் எல்லைக்குட் சிறைப்படாத அவ்வர்க்கம் குறுகிய

**தேசிய எல்லைகளுக்குட் தாமாகவே சிறைப்படமாட்டாது.** இவ்விரண்டு போக்குகளும் முதலாளித்துவத்தில் எங்கும் காணப்படுகின்ற தன்மைகளாகும். வளர்ந்து வரும் முதலாளித்துவத்தின் ஆரம்பத்தில் ஆதிக்கம் செலுத்துவது முதலாவது போக்காகும். சோஷலிஸ சமுதாயமாக மாற்றமடைய முற்படும் முதிர்ந்த முதலாளித்துவ பருவத்தில் இரண்டாவது போக்கு ஆதிக்கம் செலுத்தும் மார்க்சிச-லெனினிஸ வாதிகள் அவ்விரு போக்குகளையும் கருத்திற் கொண்டுள்ளனர். எனவே, அவர்களுடைய தேசிய செயல் திட்டங்களில் முதலாவதாக, இனங்களினதும் மொழிகளினதும் சமத்துவம், எந்த ஓரினத்துக்கோ மொழிக்கோ விசேட வரப்பிரசாதங்கள் வழங்காமை. (இக்கட்டுரையின் இறுதியில் விளக்கியுள்ளதுபோல்) **இனங்களின் சுய-நிர்ணய உரிமை என்பவற்றைப் பிரகடனம் செய்கின்றனர்.** இரண்டாவதாக, மிகப் புனிதமான வகையைச் சேர்ந்த முதலாளித்துவ இனவாதமாயினும் சரி, அதனல் பாட்டாளி வர்க்கம் மாசுபடுவதையோ களங்கப்படுவதையோ எதிர்க்கு இடைவழிச் சமாதானமற்ற போராட்டத்தையும் சர்வதேசியக் கொள்கையையும் பிரகடனம் செய்கின்றனர்.

மிகவும் நியாயமானதெனக் கூறுகின்ற மிகப் புனிதமானதெனக் கூறுகின்ற, தூய்மைப்படுத்தப்பட்டிருப்பதாகக் கூறுகின்ற, மிகவும் நாகரீகமானதெனக் கூறுகின்ற இனவாதத்தை மார்க்ஸீயத்தோடு சேர்க்க முடியாது. அத்தகைய இனவாதங்கள் அனைத்தையுமே பாட்டாளி வர்க்கச் சர்வதேசியத்தின் மூலமாக மார்க்சிசம் விரட்டியடித்துவிடும். இவ்வாருக மார்க்சிசம் எல்லா வகையான இனவாதங்களுக்கும் பதிலாகச் சர்வ தேசியத்தைப் பிரஸ்தாபிக்கின்றது. மேலும் தாம் நிறுவுகின்ற சகல சர்வ தேச உறவுகளோடும் நிறுவுகின்ற சகல தொழிலாளர் இயக்கங்களோடும், அதாவது பொருளாதார நடவடிக்கைகளில் மாத்திரமன்றிக் கருத்து, இலட்சியங்கள் ஆகிய துறைகளிலும் சர்வ தேசியமான இயக்கங்களோடும்; எமது கண்ணெதிரிலேயே வளர்ந்து வரும் உயரிய

ஒற்றுமைக்கூடாகவும் இனங்களை ஒன்றிணைக்க முற்படு கின்றது.

சரித்திர வரலாற்று அடிப்படையில் எடுத்துக் கொண் டால், முதலாளித்துவ சமூகத்தில் இனவாதம் பற்றிய கருத்து இன்றியமையாதது. இந்த முதலாளித்துவ சமூகத்தைச் சரியான ஆய்வுக்குட்படுத்தும் மார்க்ஸீயவாதி தேசிய இயக்கத்தின் வரலாற்று நீதியையும் உண்மையையும் ஏற்றுக்கொண்டான். ஆனுல், அதனை இனவாதத்துக்கான ஒரு நியாயமாக ஏற்றுக்கொள்வதைத் தவிர்க்கவும். அவ்வாறு ஏற்றுக்கொள்வதால் பாட்டாளி வர்க்கத்தின் மதி நுட்பத்தை இருளடையச் செய்யக்கூடிய முதலாளித்துவ கொள்கைக்கு வழி வகுக்காமல் இருப்பதற்காகவும், தேசிய இயக்கங்களில் அடங்கியுள்ள முற்போக்கான அம்சங்களுக்கு மாத்திரமே அவ்வேற்றுக் கொள்ளுதலைக் கண்டிப்பாக வரையறுக்க வேண்டும்,

மானிய முறையின் உறக்க நிலையிலிருந்து பொது மக்கள் விழிப்படைவதும், சகலவிதமான அடக்குமுறைகளையும் எதிர்த்து மக்களினதும் இனங்களினதும் இறைமைக்காக வெகு ஜனப் போராட்டம் நடாத்துவதும் முற்போக்கானவை யாகும். எனவே, தேசியப் பிரச்சினையின் சகல பக்கங்களையும் எடுத்துக்கொண்டால். மிகவும் திட்டவட்டமான உறுதி குலையாத ஜனநாயகத்துக்காக வாதாட வேண்டிய ஆழ்ந்த கடமை ஒவ்வொரு மார்க்சிச வாதியின் மீதும் சுமத்தப்பட் டுள்ளது. இப்பணி பெரும்பாலும் வெறுக்கத்தக்க ஒன்ருக விருப்பினும், அப்பணிக்கு அப்பால் இனவாதத்தைப் பலப் படுத்த முயற்சிக்கும் முதலாளித்துவ வர்க்கத்தின் "ஆக்க பூர்வமான" வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்படுவதால், இனவாதத்துக்கு ஒத்துழைப்பு வழங்கிக் கொண்டு பாட்டாளி வர்க்கம் செல்லக்கூடிய மிகத் தூரமான எல்லை அதுவாகும்.

ஓரினம் மற்றுமோர் இனத்தைவிட எவ்வகையிலும் உயர்ந்ததோ தாழ்ந்ததோ அல்ல. ஒன்று மற்றை

யதைவிடக் கூடுதலான சலுகைகளை அனுபவிக்கக் கூடாதென்பதைப் போலவே, பொருளாதாரம், கருத்து வெளிப்பாடு, அரசியல் ஆகிய துறைகளில் ஒன்று மற்றையதைவிட உயர்வான மட்டத்தில் வீற்றிருக்கவும் கூடாது. சகல தேசிய அடக்கு முறைகளையும் எதிர்த்துப் போராட வேண்டும். பொதுவாக எடுத்துக்கொண்டால், எந்த வகையான தேசிய அபிவிருத்தியையும் நாடி ஒரு "தேசிய கலாசாரத்துக்காகப்" போராடக்கூடாது. முதலாளித்துவ இனவாதத்தின் கொள்கை இதுவாகவிருப்பதால், முதலாளித்துவ இனத்தின் தனித்துவத்தின் விளைவாகத் தோன்றும் இனப் பூசல்களுக்கு ஏதாவது, பொதுவாக இன உணர்வின் வளர்ச்சியே. எனினும், எல்லா இனங்களினதும் தேசிய அபிவிருத்தியை உன்னத குறிக்கோளாகக் கொள்வதற்குப் பதிலாக அத்தகைய போலிக் கருத்துக்களை ஏற்றுக் கொள்வதை எதிர்த்துப் பாட்டாளி வர்க்கம் வெகுஜனங்களை எச்சரிக்கின்றது. மேலும், அது முதலாளித்துவத்தோடு தொடர்பு வைத்துக்கொள்வதற்கான பூரண சுதந்திரம் கோரி வாதாடிக்கொண்டு பெற்றுள்ள சலுகைகள், பலவந்தமாக ஏற்படுத்திக்கொண்டுள்ள பிணைப்புக்கள் என்பன தவிர்த்த ஏனைய எல்லா வகையான இன ஒருமைப்பாடுகளையும் ஏற்றுக்கொள்கிறது.

உலகெங்கும் நிலவி வந்துள்ள முதிர்ச்சி அடையாத தேசிய இயக்கங்கள் பற்றியும், அநேக சிறுபான்மை இனத்தவர்கள் வாழ்ந்த இடங்களில் சில சிறுபான்மை இனத்தோர் அழிவின் விளிம்பை அடைந்தது பற்றியும், அல்லது அச்சிறுபான்மைகள் சங்கமமாகிப் பெரும் பான்மையினங்கள் ஆனது பற்றியும் முதலாளித்துவ சமூக - பொருளாதார அபிவிருத்தி எமக்கு உதாரணங்களைக் காட்டியுள்ளது. * பொல்ஷேவிக்

---

* பொல்ஷேவிக் வாதம் உண்மையான பாட்டாளி வர்க்கக் கோட்பாடு.

வாதிகள், அனைவரும் தனித்தனி நபர்களாகவோ, உத்தியோக பூர்வமான கூட்டமைப்புக்களாகவோ. இனங்களை அடக்கி யாளும் கொள்கையையும் இனங்களுக்கிடையிலான ஏற்றத் தாழ்வையும் மாத்திரமன்றி, அத்தகைய அடக்கு முறையை யும் ஏற்றத் தாழ்வுகளையும் பேணிக்கொள்வதாகச் சொற்ப அளவிலாவது வன்முறையைக் கையாள்வதையும் எதிர்த்து மிகவும் திட்டவட்டமான முறையிலும், சந்தேகத்துக்கிட மின்றியும் கண்டனம் தெரிவித்துள்ளனர். போக்குகள், ஏற்றத் தாழ்வுகள், சலுகைகள் ஆகிய அனைத்தையும் நீக்கி விட்டால் ''தேசிய ஒருமைப்பாடு'' என்ற கருத்தில் உண்மை யாகவே என்னதான் மீதமாகவிருக்கும்? ஆம். ஒன்றுமாத் திரம் மீதமாகவிருக்கும். அது, கடந்து செல்லும் ஒவ்வொரு பத்தாண்டுக் காலத்திலும் மிகமிகப் பகிரங்கமாகப் பிரகட னப்படுத்தி வருகின்றதும். முதலாளித்துவத்தைச் சோஷலிஸ மாக மாற்றியமைக்கின்ற உன்னதமான இயக்கச் சக்திகளுள் ஒன்றானதுமான, தேசிய முட்டுக்கட்டைகளைத் தகர்த் தெறிந்து, இன வேற்றுமைகளைக் களைந்தெறிந்து இனங்களை ஒருமைப்பாட்டைத் தோற்றுவிக்க அகிலமெங்கும் முதலாளித் துவத்தின் கீழ்க் காணப்படுகின்ற வரலாற்றுப் போக்காகும்.

முதலாளித்துவ இனவாதிகளும், அவர்களின் கைப் பொம்மைகளான, தம்மைத்தாமே ''மார்க்ஸீயவாதி'' களென அழைத்துக்கொள்ளும் ** தீவிர சமூக இனவாதிகளு மான மென்ஷேவிக் வாதிகளும் தேசிய இலட்சியத்துக்கு முதலிடத்தையும் பாட்டாளி வர்க்க இலட்சியத்துக்கு இரண் டாவது இடத்தையுமே கொடுக்கின்றனர். மனித சிரமத் தினதும் மனிதாபிமானத்தினதும் மாத்திரமன்றி, காலத்தால் அழியாத ஜனநாயக அடிப்படை நலன்களையும் உரிமைகளை யும் பாதுகாத்துக் கொடுப்பது பாட்டாளி வர்க்க இலட்சிய மாகும். ஜனநாயகமின்றி இறைமையும் சுயாதீனமுமுள்ள

---

** தீவிர சமூக இனவாதம் — ஒரு நாட்டு மக்களை மற் றொரு நாட்டு மக்களைவிடச் சிறப்பானவர்களாகக் கருதல்.

ஓரினத்தைப் பற்றிக் கற்பனை செய்யவும் முடியாது. எனவே, பாட்டாளி வர்க்க இலட்சியத்திற்கு முதலிடம் கொடுக்கப் பட வேண்டுமென மார்க்ஸீய - லெனினிஸ வாதிகளும், பொல்ஷேவிக் வாதிகளும் கூறுகின்றார்கள்.

இனங்களினதும் மொழிகளினதும் சமத்துவத்தை ஏற்காதவனும் அந்தச் சமத்துவத்தை வெற்றியடையச் செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்காதவனும், சகலவிதமான தேசிய அடக்குமுறைகளையும் ஏற்றத் தாழ்வுகளையும் எதிர்த்துப் போராடாதவனும் ஒரு மார்க்ஸீய வாதியாகவன்றிக் குறைந்த பட்சம் ஒரு ஜனநாயகவாதியாகவேனும் கணிக்கப்படமுடியாதவன்'' என்றும் 'ஒட்டுவேலை செய்வதற்காக' ஓரினத்தைச் சார்ந்த மார்க்ஸீய வாதியைக் குற்றஞ் சாட்டிப் பரிகாசம் செய்யும் 'மார்க்ஸீயவாதி' இனவாத † பிலிஷ்டைனியன் என்றும் லெனின் கூறுகின்றார்.

தொழிலாளர் வர்க்க இயக்கம் மும்முரமாக வளர்ந்து எழுச்சி பெறும்போதே அதனை அடக்கவோ அன்றிச் சின்னா பின்னப்படுத்தவோ பிரபுக்களோடு கைகோர்த்துக்கொண்டு முதலாளி வர்க்கம் எடுக்கும் முயற்சிகள் கூடியளவு தீவிர மடைகின்றன, தனது வர்க்கத்துக்குச் சொந்தமான அரசியல் அதிகாரத்தை நேரடியாகவோ மறைமுகமாகவோ பிரயோகித்து அடக்குதல், பல்வேறு முதலாளித்துவ செல்வாக்குகளைப் பிரயோகித்து உருக்குலைத்துவிடுதல் என்பன இரண்டும் உலகெங்கிலும் சகல நாடுகளிலும் முதலாளித்துவ வாதிகள் தாராளமாகக் கையாளும் நடைமுறைகளாகும். ஆளும் வர்க்கத்தின் பல்வேறு கட்சிகளும் குழுக்களும் அடிக்கடி அம்

† பிலிஷ்டைனியன் - கீழ்த்தர நடவடிக்கைகளில் ஈடுபடுவோன்.

முறைகளுள் ஒன்றைத் தயாரித்து உபயோகித்து வந்துள்ளன. அதிகாரத்தை வன்முறையாகவும் கொடூரமாகவும் பிரயோகித்து மாத்திரம் பயனளிக்காதென முதலாளி வர்க்கத்தின் செல்வாக்கு மிக்க பிரிவினரும் மதிநுட்பம் மிக்க பிரிவினரும் உணருகின்ற போது, சகல வகையிலும் 'முற்போக்கான' முதலாளித்துவ கட்சிகள் செய்தது யாதெனில், தொழிலாளர் வர்க்கத்தின் போராட்டத்தை நலிவடையச் செய்யும் நோக்கத்தோடு தயாரிக்கப்பட்ட பல்வேறு முதலாளித்துவ எண்ணக் கருத்துக்களையும் போதனைகளையும் பிரச்சாரம் செய்து, தொழிலாளர்களைப் பிரிவினைப்படுத்தக் கூடிய உத்திகளைக் கூடுதலாகக் கையாள்வதாகும். இந்த நடைமுறை அவ்வாறே இன்றுவரையிலும் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

உதாரணமாக, "தேசிய கலாசாரம்", "கலாசார சுதந்திரம்", "தேசிய இறைமை", அல்லது "தேசிய சுதந்திரம்" என்பனவற்றின் நலன்களைப் பேணுதல் என்ற நயவஞ்சகமான, நேர்மையீனமான காரணங்களைக் காட்டிப் பாட்டாளி வர்க்கத்தைப் பிரிவினைப்படுத்துவதற்காகப் போதிக்கப்பட்ட வடிகட்டிய இனவாதம் இத்தகைய எண்ணக் கருத்துக்களுக்கு ஒன்றாகும். வர்க்க உணர்வுள்ள தொழிலாளர்கள், தொழிலாளர்களின் இலட்சியங்களையும் இயக்கங்களையும் இன அடிப்படையிற் பாகுபாடு செய்வது உட்பட, இனங்களின் சமத்துவம் பற்றிப் போதிக்கும் மிகத் தூய்மையான இனவாதம் முதல் கொடூரமான, வன்முறையான, தீவிரமான இனவாதம் வரையுள்ள சகலவிதமான இனவாதங்களையும் எதிர்த்துக் கடுமையாகப் போராடுகின்றார்கள். வர்க்க உணர்வுள்ள தொழிலாளர்கள் இனவாத முதலாளித்துவத்தின் சகல பிரிவுகளுக்கும் முற்றிலும் மாறுபட்டவர்களாக, இனங்களினதும் மொழிகளினதும் சம்பூர்ணமான, நிரந்தரமான, நியாயமான, உறுதியான முற்றிலும் புனிதமான சமத்துவத்திற்காகப் போராடுகிறார்கள். அது மாத்திரமன்றி, எல்லா வகையான தொழிலாளர் வர்க்க ஐக்கிய முன்னணிகளினூடாகவும் வெவ்வேறு இனங்

களைச் சேர்ந்த தொழிலாளர்களை ஒன்றிணைக்கவும் முன் நிற்கின்றார்கள். இதில்தான் மார்க்ஸீய - லெனினிஸ வாதிகளின் தேசிய வேலைத் திட்டத்திலும், மிக முன்னேற்றமடைந்ததாகக் கருதக்கூடிய ஒரு முதலாளி வர்க்கம் இருக்குமாயின், அதன் தேசிய வேலைத் திட்டத்திலும் காணப்படுகின்ற அடிப்படை வித்தியாசம் தங்கியுள்ளது.

இனங்களினதும் மொழிகளினதும் சமத்துவத்தை ஏற்றுக்கொள்வது மார்க்ஸீயவாதிகளுக்கு மிக முக்கியமாகவிருப்பது அவர்கள் அசைக்க முடியாத ஜனநாயக வாதிகளாக இருப்பதனால் மாத்திரமன்று. தொழிலாளர் வர்க்கப் போராட்டத்தில் நிலவுகின்ற சகோதரத்துவத்தினாலும் சகோதரப் பான்மையான ஒற்றுமையினாலும் கிடைக்கக் கூடிய பலாபலன்களின் மூலம் அவர்கள் இனங்களுக்கிடையிலான விசுவாசமின்மை, சண்டை சச்சரவுகள், சந்தேகம், குரோதம் என்பனவற்றின் அறிகுறிகளையே துடைத்தெறியும் நோக்கத்துடன் இனங்களுக்கிடையே பூரண சமத்துவத்தைக் கோரி நிற்பதனாலாகும். இத்தகைய பூரண சமத்துவத்தின் மூலமாகவே, யாதாயினும் ஒரு குறிப்பிட்ட மொழிக்கு வழங்கப்பட்டுள்ள வரப்பிரசாதங்களை ரத்துச் செய்வதும், சகல இனங்களுக்கும் இருக்க வேண்டிய சுயநிர்ணய உரிமைக்கு மதிப்பு அளிப்பதும் உணர்த்தப்படுகிறது,

இலங்கை போன்ற குறைந்த இடப்பரப்பும், குன்றிய அபிவிருத்தியும் கொண்ட ஒரு நாட்டில் ஒரு குறிப்பிட்ட மொழிக்கு விசேட சலுகைகள் வழங்கப்பட வேண்டுமா? அல்லது அவ்வாறு ஒரு குறிப்பிட்ட மொழி முழுமையாகவும் தீவிரமாகவும் அனுபவிக்கும் அத்தகைய சலுகைகளை இயன்றளவு அவசரமாக ரத்துச் செய்ய வேண்டுமா? அவ்வாறு செய்யாமலிருப்பதற்கான காரணமென்ன? நிச்சயமாக அவ்வாறு செய்யுமிடத்து நாட்டில் முதலாளித்துவம் வளர்ச்சியடைய அந்த நடவடிக்கை ஒரு விசேட அனுகூலமாக அமையும். சகல வரப்பிரசாதங்களும் மறைந்து போகுமாயின், அல்லது யாதாயினும் ஒரு மொழியை மட்டும் உபயோகிக்கும்

நடைமுறை நின்றுவிடுமாயின் சிறுபான்மையோர் இலகுவாக வும் விரைவாகவும் ஒருவரையொருவர் புரிந்து கொள்ளக் கற்றுக் கொள்வர். வர்க்க உறவுகளில் கூடிய பயன் பெறுவ தற்குப் பெரும்பான்மையோருக்கு எந்த மொழி உகந்ததென் பது பொருளாதாரக் கொடுக்கல் வாங்கல்களைக் கொண்டே தீர்மானிக்கப்படும். பல்வேறு இனங்களைக் கொண்ட ஒரு சமுதாயம் சுயவிருப்பத்தின் பேரில் ஒரு மொழியைத் தெரிவு செய்து அதனை உபயோகிக்குமாயின் அம்மொழியின் உப யோகம் மிகத் துரிதமாகவும் அர்த்தமுள்ளதாகவும் அமைவ தோடு அதனுல் முதலாளித்துவத்தின் வளர்ச்சியும் மிக வேகமாக நடைபெறும்.

# இனப்பிரச்சினையின் வரலாறு

சிறுபான்மையோர் பிரச்சினை பற்றிப் பேசும் போது அது விரிவடைந்த முறையையும் அதன் வரலாற்றையும் சுருக்க மாகவேனும் நோக்க வேண்டும். பன்னிரண்டாம் நூற்றுண்டு தொடக்கம் நடைபெற்று வந்த வடக்கு இராட்சியம் (தமிழ் அரசர்களின் ஆட்சி) பதின்மூன்ரும் நூற்ருண்டில் வளர்ச்சி யடைந்து, பதினுன்காம் நூற்ருண்டில் அதிகாரத்தின் உச்ச நிலையை அடைந்தது. 1591-ஆம் ஆண்டு வரை நடைபெற்று வந்த அவ்வாட்சி அதே ஆண்டிற் போர்த்துக்கேயராற் கைப் பற்றப்பட்டது. அவர்கள் அப்பிரதேசத்தைச் CEYALO என அழைத்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. தற்பொழுது தமிழர் விடுதலைக் கூட்டணியினர் கோருகின்ற 'தமிழ் ஈழம்' என்ற பிரதேசத்தில் இலங்கையின் கிழக்குப் பிரதேசம் ஒரு போதும் உட்பட்டிருக்கவில்லை. ஆனுல் வெவ்வேறு சந்தர்ப் பங்களில் அந்த வட இராச்சியத்துக்குட்பட்டிருந்த பிரதேசங் கள் வித்தியாசப்பட்டிருந்தன. அப்பிரதேசம் 1620-ஆம் ஆண்டில் போர்த்துக்கேயரின் நேரடியான ஆட்சியின் கீழ் வந்தது. 1948-ல் இலங்கை ஒரு நவ குடியேற்ற நாடாக மாறியது. அதாவது, ஏகாதிபத்திய வாதிகளின் நேரடியான ஆட்சிக்குப் பதிலாகச் சுதேச முதலாளி வர்க்கத்தின் ஆட்சி

ஏற்படுத்தப்பட்டது. அப்போது சிங்கள, தமிழ் முதலாளி வர்க்கத்தினர் தத்தமது வர்க்க நலன்களைப் பேணிக்கொள்ளவும், தத்தமது வர்க்க ஆட்சியை உறுதியாக நிலைநாட்டிக் கொள்ளவும், இலங்கையிலே வரலாற்றுப் பொருளியல் ரீதியாக வெவ்வேறு மக்கட் பிரிவினர் பரம்பியுள்ள ஒழுங்கினைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டனர். 1963-ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட குடிசன மதிப்பின்படி மாவட்ட ரீதியாக வெவ்வேறு இன மக்கள் பரம்பியுள்ள ஒழுங்கைப் பின்வரும் அட்டவணையிலுள்ள புள்ளி விபரங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

| மாவட்டம் | சிங்களம் பேசும் மக்கள் % | தமிழ் பேசும் மக்கள் % |
|---|---|---|
| கொழும்பு | 82.5 | 14.6 |
| களுத்துறை | 87.2 | 12.6 |
| கண்டி | 59.8 | 39.4 |
| மாத்தளை | 72.3 | 27.4 |
| நுவரெலியா | 38.4 | 61.1 |
| காலி | 94.3 | 05.6 |
| மாத்தறை | 94.0 | 06.0 |
| அம்பாந்தோட்டை | 97.0 | 02.0 |
| யாழ்ப்பாணம் | 01.2 | 98.7 |
| மன்னார் | 04.2 | 95.6 |
| வவுனியா | 17.7 | 82.4 |
| மட்டக்களப்பு | 03.4 | 96.4 |
| அம்பாறை | 29.3 | 70.5 |
| திருகோணமலை | 28.8 | 70.5 |
| குருணுகல் | 92.8 | 07.1 |

| மாவட்டம் | சிங்களம் பேசும் மக்கள் % | தமிழ் பேசும் மக்கள் % |
|---|---|---|
| புத்தளம் | 79.9 | 19.7 |
| அனுராதபுரம் | 89.5 | 10.4 |
| பொலனறுவை | 87.2 | 12.6 |
| பதுளை | 55.2 | 44.4 |
| மொனராகல | 87.1 | 12.6 |
| இரத்தினபுரி | 77.8 | 22.1 |
| கேகாலை | 83.5 | 16.3 |

இப்புள்ளி விபரங்களைப் பொதுவாக நோக்குமிடத்துச் சராசரியாக 71.1% சிங்களம் பேசும் மக்களும் 28% தமிழ்ப் பேசும் மக்களும் இருந்தனர். இந்தப் பரம்பல் ஒழுங்கையே சிங்கள, தமிழ் முதலாளி வர்க்கம் தனது வர்க்க நலன்களைப் பேணுவதற்காகப் பயன்படுத்தி வந்துள்ளது. இலங்கை பிரித்தானிய குடியேற்ற நாடாக இருந்த போது, ஏகாதிபத்திய வாதிகள் தமது நிர்வாக அலுவல்களுக்குத் தேவையான அதிகாரிகள், எழுதுவினைஞர்கள், மொழி பெயர்ப்பாளர்கள் முதலானோரை உருவாக்கிக் கொள்ளவும் தமது வர்க்க நலன்களைப் பேணிக் கொள்ளவும் வெவ்வேறு மக்கட் பிரிவினர் இடையே காணப்பட்ட பேதங்களையும் வித்தியாசங்களையும் பயன்படுத்திக் கொண்டார்கள். இதற்கேற்ப, நாட்டின் அரசகரும மொழியாக ஆங்கிலத்தைப் பயன்படுத்தியதோடு தம்து நிர்வாக அலுவல்களுக்குத் தேவையான ஆட்களைத் தமிழ்ப் பேசும் மக்களிலிருந்தே அதிகமாகத் தெரிவு செய்து கொண்டனர். இந்தக் குடியேற்றவாத ஆட்சிக் காலத்தின் போதே சிங்கள மொழி இழந்த அந்தஸ்தை மீண்டும் பெற்றுக் கொள்ள வேண்டுமென்ற கோஷங்கள் எழுப்பப்படலாயின. 1935-ம் ஆண்டில் லங்கா சமசமாஜக் கட்சி ஆரம்பிக்கப்படும் வரை, இந்நாட்டில் ஒரு தேசிய அரசியற் கட்சியோ அல்லது தேசிய சுதந்திரத்துக்கான ஓர் இயக்கமோ

இருக்கவில்லை. அநகாரிக தர்மபாலர், முனிதாஸ குமாரதுங்க, பியதாஸ சிரிசேன, டீ. டப்ளியூ. விக்கிரமாராச்சி, சுவாமி எஸ். மகிந்த முதலியோர் சிங்கள மொழிக்குப் புத்துயிரளிக்கப்பட வேண்டுமெனக் குரலெழுப்பினர். இதற்கிடையில், அரச கருமங்கள் ஆங்கில மொழிக்குப் பதிலாகச் சுயபாஷை மூலம் நடாத்தப்பட வேண்டுமென்ற லங்கா சமசமாஜக் கட்சியின் கொள்கைக்கேற்ப, 1936-ம் ஆண்டில் " பொலீஸில் புகார் செய்யும் மொழியிலேயே அவை பதியப்படவேண்டும் " என்றும் " நகர பொலீஸ் நீதி மன்றங்களில் வழக்குகள் சுய பாஷையிலேயே விசாரிக்கப்பட வேண்டும் " என்றும் பிலிப் குணவர்த்தன சட்டசபையில் பிரேரணைகள் கொண்டு வந்தார். அவை 1939-ம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டன. 1944-இல் " போதிய காலஇடைவெளிக்கூடாக, சிங்களமும் தமிழும் உத்தியோக மொழிகளாக மாற்றப்பட வேண்டும் " என்ற நோக்கத்துடனான பிரேரணையொன்று ஜே. ஆர். ஜயவர்த்தனவால் கொண்டுவரப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது. இப்பிரேரணையில் ஆரம்பத்தில் சிங்களம் மாத்திரமே இடம் பெற்றிருந்தது. பின்னர் அக்காலத்தில் இருந்த தமிழ் உறுப்பினர்களின் தலையீட்டால் அப்பிரேரணையில் தமிழ் மொழியும் சேர்த்துக் கொள்ளப்பட்டது. 1951-ல் பண்டாரநாயக்கா, " சிங்கள மொழியை உடனடியாக அரசாங்க மொழியாக்க வேண்டும் " என் சிங்கள மகா சபையிற் பிரேரணையொன்றைச் சமர்ப்பித்தார். " சிங்களம் மட்டுமே அரசாங்க மொழியாக வேண்டும் " என்ற சுலோகத்தின் தோற்றுவாய் இதுவாகும். டி. எஸ். சேனநாயக்கா அரசாங்கம், சட்ட சபைச் செயற்குழுவின் ஆலோசனைப்படி, ஆங்கில மொழிக்குப் பதிலாகச் சிங்களத்தையும், தமிழையும் உத்தியோக மொழிகளாக மாற்றியமைப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக ' அரசகரும மொழி ஆணைக் குழு ' வொன்றை நியமனம் செய்தது. இவ்வாணைக் குழுவின் இறுதி அறிக்கை 1953-ம் ஆண்டில் வெளியிட்டது. அதிற் காணப்பட்ட சிபாரிசுகளில் ஒன்று " சகல மாவட்டங்களிலும் சிங்களமும் தமிழும் நிர்வாக மொழிகளாக இருக்க

வேண்டும் '' என்பதாகும். இக்கால கட்டத்தில் லங்கா சமசமாஜக் கட்சியும், இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியும் தொழிலாளர் வர்க்கத்தைச் சீரமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்தன. 1951-ம் ஆண்டு ஜூலை மாதம் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலகிய பண்டாரநாயக்கா செப்டம்பர் மாதமளவில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை அமைத்து நாட்டிலுள்ள மத்திய வகுப்பினரையும் கிராமப்புற மக்களையும் அக்கட்சியின்கீழ் ஒன்று திரட்ட ஆரம்பித்தார்.

பாலர் வகுப்பு முதல் உயர் கல்வி வரையில் சுயபாஷை மூலம் கல்வி பெறும் உரிமை இருக்க வேண்டுமென்ற கருத்து 1952-ம் ஆண்டளவில் நிலவியது. 1953-ம் ஆண்டில் சிங்களம், தமிழ், ஆங்கில மொழி மூலம் கல்வி கற்பித்த பாடசாலைகளினதும், ஒவ்வொரு மொழி மூலமும் கல்வி கற்ற மாணவர்களினதும் புள்ளி விபரங்களைக் கீழ்வரும் அட்டவணை காட்டுகின்றது.

| பாடசாலை வகை | | சிங்களம் | தமிழ் | ஆங்கிலம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| அரசாங்க, உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளின் முழுத் தொகை | | 3,778 | 2,055 | 647 | 6,480 |
| ஆசிரியர் கல்லூரிகள் | | 10 | 08 | 01 | 19 |
| மாணவர் தொகை | ஆரம்பப் பிரிவு | 9,32,801 | 2,89,220 | 13,539 | 12,35,560 |
| | இடைநிலைப் பிரிவு | 1,62,671 | 23,503 | 1,37,470 | 3,23,644 |
| | சிரேஷ்ட பிரிவு உயர்தர பாடசாலைத் தராதரப் பரீட்சை | ,,, | ,,, | 5,714 | 5,714 |

நாட்டிலிருந்த சுமார் 7,000 பாடசாலைகளுள் சுமார் 5,000 பாடசாலைகளின் கல்வியூட்டும் மொழி சுயமொழியாக இருந்தாலும் அவற்றுக்கு நாட்டில் உரிய அந்தஸ்து கிடைக்க வில்லை. சுமார் 15,00,000 மாணவர்களுள் 14,90,000 மாண வர்கள் சுயமொழி மூலம் கல்வி கற்றமையால் அவர்களுக்குத் தொழிலுக்கோ ;உயர் கல்விக்கோ வாய்ப்புக் கிடைக்கவில்லை என்பதும், சுமார் 7,000 பாடசாலைகளுள் 600 பாடசாலை களில் மாத்திரமே உயர் கல்விக்கான வசதிகள் இருந்தன என்பதும், சுமார் 15,00,000 மாணவர்களுள் சுமார் 1,50,000 மாணவர்களுக்கு மட்டுமே உயர்கல்வி, தொழில் என்பவற் றுக்கான வாய்ப்புக் கிடைத்ததென்பதும் மேற்படி புள்ளி விபரங்களிலிருந்து, தெரிகின்றன. இந்த நிலைமையை மாற்றி யமைப்பதற்காக, உயர்கல்விக்கான போதனு மொழியும் சுய பாஷைகளாக்கப்பட வேண்டுமென்ற கோஷம் எழுப்பப்பட் டது. இதனுல், கொத்தலாவலை ஆட்சி 1953-ம் ஆண்டில் உயர் கல்வி ஆணைக்குழு வொன்றை நியமனம் செய்தது, அவ்வாணைக் குழு 1956-ம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் அதன் அறிக்கையை வெளியிட்டது. அதில் "1956-ம் ஆண்டு முதல் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையைத் தேசிய மொழிகளில் நடாத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்'' எனவும் "1959-ம் ஆண்டு முதல் உயர்தர பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சை வகுப் பிலும் போதனு மொழி சுயமொழியாக இருக்க வேண்டும்'' என்றும் "இயன்றளவு விரைவில் பல்கலைக் கழகங்களின் போதனு மொழியும் தேசிய மொழிகளாக மாற்றியமைக் கப்பட வேண்டும்'' எனவும் சிபாரிசுகள் செய்யப்பட்டன.

இதற்கிடையில் நாட்டின் கல்வித் திட்டத்தில் சுய மொழியைப் போதனு மொழியாக மாற்றியமைக்கும் பணி கள் சீரமைக்கப்பட வேண்டும் எனவும் சுயபாஷா ஆசிரியர் களின் தொழில் அந்தஸ்து உயர்த்தப்பட வேண்டும் எனவும் ஆசிரிய இயக்கங்கள் கோரியமையால் 1954-ம் ஆண்டில் 'ஜாதிக குரு சங்கமய' உதயமாயிற்று. அரசகரும மொழிப்

பிரச்சினையின் அடிப்படையில் மத்தியதர வகுப்பினர் அனே வரும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் கீழ் அணி திரண்டனர். லங்கா ஜாதிக குரு சங்கமயவும் அகில இலங்கை பௌத்த சம்மேளனமும் 'சிங்களம் அரசாங்க மொழியாக்கப்பட வேண்டும்' என்ற கோஷத்தை நாடெங்கும் எழுப்பினர்.

1955-ம் ஆண்டில் கல்வி அமைச்சர் எம். டி. பண்டாவினல் சிங்களத்தையும் தமிழையும் அரசாங்க மொழிகளாகக் கொள்கையளவில் அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளதெனவும், அம்மொழிகளைப் படிப்படியாகப் போதன மொழிகளாக மாற்றியமைக்க வேண்டுமெனவும். 1957-ம் ஆண்டு சிரேஷ்ட வகுப்பில் விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்களை ஆங்கில மொழி மூலம் கற்பிக்க வசதிகள் இருப்பதோடு, அப்பாடசாலைகளில் சிங்களம், தமிழ் அல்லது ஆங்கில மொழியைப் போதன மொழியாக உபயோகிக்கலாம் எனவும், அப்பாடசாலைகளில் சுயமொழிகளைப் போதன மொழியாக மாற்றியமைத்துக் கொள்வதிற் சிரமங்களிருப்பின் ஆங்கிலத்திலேயே யாதேனும் ஒரு பாடத்தைப் போதிக்க அதிகாரம் வழங்க அமைச்சரால் முடியுமெனவும் அறிவிக்கப்பட்டது. இப்பேச்சை எதிர்க் கட்சி பகிஷ்கரித்தது. அப்பிரேரணையை நிறைவேற்றிக் கொள்ளவும் முடியாமற் போயிற்று.

ஜி. ஜி. பொன்னம்பலம் 'ஐம்பதுக் கைம்பது' இயக்கத்தினை மேற்கொண்டார். எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் சமஷ்டிக் கட்சி, சிங்களம் தமிழ் ஆகிய இரு மொழிகளும் சம அந்தஸ்துள்ள உத்தியோக மொழிகளாக இலங்கை முழுவதிலும் அங்கீகரிக்கப்பட வேண்டுமெனவும், வடக்கும் கிழக்கின் ஒரு பகுதியும் சேர்ந்த ஓர் தமிழ்ச் சமஷ்டி ஆட்சியை நிறுவ வேண்டுமெனவும் பிரச்சாரம் செய்தது. இக்காலத்தில், தமிழரசுக் கட்சி இலங்கையில் ஒரு தமிழரசை நிறுவுவது அதன் நோக்கமென்றும், அது சமஷ்டி முறையில் இலங்கையின் மத்திய அரசோடு தொடர்புள்ள பிராந்திய அரசேயன்றி

இலங்கையிலிருந்து பிரிக்கப்பட்ட ஒரு தனி நாடல்ல வென்றும் கூறியது. இந்தியாவின் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு இணையாகவும் அதனோடு தொடர்புள்ளதாகவும் இலங்கைத் தமிழரசுக் கட்சி செயற்பட்டது. படிப்படியாக அதன் செல்வாக்கு வலுப்பெற்றது.

1948-ம் ஆண்டில் இந்திய வம்சாவளியினரின் குடியுரிமையைப் பறித்துக் கொண்ட டீ. எஸ். சேனநாயக ஆட்சி அவர்களை நாடற்ற பிரஜைகளாகிவிட்டது. 1954-ம் ஆண்டிற் செய்யப்பட்ட நேரு - கொத்தலாவலை ஒப்பந்தத்தின் மூலம் இலங்கையரால் பதிவு செய்யப்படாத இந்திய வம்சாவளித் தோட்டத் தொழிலாளர்களை இந்தியர்களாகப் பதிவு செய்து அவர்களை இந்தியாவுக்குத் திருப்பி அனுப்ப முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன, இந்த நிலைமையைத் தமிழரசுக் கட்சி பயன்படுத்திக் கொண்டு அதன் செல்வாக்கைப் பலப்படுத்திக் கொள்ள முயற்சித்தது. இந்திய வம்சாவளியினரைப் பலவந்தமாக நாடுகடத்துவதை அனுமதிக்க முடியாதெனவும் அது ஒரு மனிதாபிமானமற்ற செயலெனவும் தமிழரசுக் கட்சி கூறியது.

சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளுக்கும் சம அந்தஸ்து வழங்கி அவற்றை அரசகரும மொழிகளாக்குவதாகவும் அதற்கேற்றவாறு அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்தியமைப்பதாகவும் சர் ஜோன் கொத்தலாவலை 1954-ம் ஆண்டில் கொக்குவிலில் பிரகடனம் செய்தார், இதனைப் பயன்படுத்திக் கொண்ட சிங்கள இனவாத இயக்கங்கள் 'சிங்களம் மட்டுமே' அரசாங்க மொழியாக அங்கீகரிக்கப்பட வேண்டுமெனக் கோஷமிடத் தொடங்கின. இதன் விளைவாக பாஷா பெரமுன, சிங்கள ஜாதிக சங்கமய முதலிய இயங்கங்கள் நிறுவப்பட்டன. இதனோடு, நாட்டின் வர்த்தக முயற்சிகளிற் பெரும்பாலானவை தமிழர்களின் கைவசமாக இருப்பது ஒரு தேசியப் பிரச்சினை எனவும் அநீதி என்வும் எடுத்துக் காட்டித் தமிழர்களோடு தொடர்புள்ள அனைத்தையும் பகிஷ்கரிக்க வேண்டுமென்ற ஓரியக்கத்தைக் கொழும்பு வாழ்

சிங்கள முதலாளிமார் ஆரம்பித்தார்கள். எனினும், நாடு முழுவதிலும் சிங்களத்துக்கும் தமிழுக்கும் சம அந்தஸ்து வழங்குவதே தமது கொள்கையென சர் ஜோன் தொடர்ந்தும் கூறி வந்தார்.

இந்த நிலைமைகளில், லங்கா சமசமாஜக் கட்சிக்கும் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் மொழிக் கொள்கை யொன்றை வெளியிட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அவ்விரு கட்சிகளும் இரு மொழிகளுக்கும் சம அந்தஸ்து வழங்கப்பட வேண்டுமென்ற கொள்கையை வெளியிட்டன. இக்கொள்கையைக் கடைப்பிடித்தமைக்காக சமசமாஜ கம்யூனிஸ்ட் கட்சியினர் 'சிங்களம் மட்டும்' கொள்கையைக் கடைப்பிடித்த சிங்கள இனவாதிகளால் அடித்து உதைக்கப்பட்டனர் 1955-ம் ஆண்டு டிஸம்பர் மாதத்தில் ஸ்ரீ ல. சு. க. இரண்டு நாள் கருத்தரங்கொன்றை நடாத்தி "சிறுபான்மையோருக்கு எவ்வித தீங்கும் ஏற்படாத வண்ணம்" 'சிங்களம் மட்டும்' அரசகரும மொழியாக்க வேண்டுமென்று தீர்மானித்துப் பிரகடனம் செய்தது. இதே காலத்தில் அகில இலங்கை முஸ்லிம் லீக்கும் இலங்கைச் சோனகர் சங்கமும் வெளியிட்ட ஒரு கூட்டறிக்கையில், "எமது சங்கங்கள் இரண்டினதும் தீர்மானப்படி சிறுபான்மையோரின் மொழி, மதம், கலாசாரம் ஆகிய அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்படுவதற்கான ஷரத்துக்கள் அரசியலமைப்பிற் சேர்த்துக்கொள்ளப்படுமாயின், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளுக்கு உரிய இடமளித்து சிங்களத்தை மட்டும் அரசாங்க மொழியாக்க வேண்டுமென இச்சம்மேளனம் கருதுகின்றது" எனக் கூறப்பட்டது.

24 மணித்தியாலங்களிற் சிங்களத்தை அரசாங்க மொழியாக்குவதாக பண்டாரநாயக்கா பகிரங்கமாகக் கூறினர். 1956-ல் ஐக்கிய பிக்கு முன்னணியும் 'சிங்களம் மட்டும்'

என்ற கொள்கையைக் கடைப்பிடித்தது. சிங்களத்தை மட்டும் அரசகரும மொழியாக்குவதற்காக அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்தியமைக்க வேண்டுமெனவும், அதனைச் செயற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும், தமிழ் போன்ற சிறுபான்மை மொழிகள் அழிந்து போகாவண்ணம் அவற்றுக்குரிய இடம் அளிக்கப்பட வேண்டுமெனவும் பண்டாரநாயக்காவின் ஸ்ரீ ல. சு. க. வும் பிலிப் குணவர்த்தனவின் புரட்சிவாத சமசமாஜக் கட்சியும் தகநாயக்காவின் பாஷா பெரமுனையும் கூட்டாக அமைத்த மக்கள் ஐக்கிய முன்னணி, 1956-ல் தமது தேர்தல் விஞ்ஞாபனத்திற் கூறியது. 1948-ல் ஐக்கிய தேசியக் கட்சியும் தமிழ் காங்கிரசும் செய்துகொண்ட ஓர் ஒப்பந்தத்தின்படி மந்திரிப் பதவிகளை வகித்த தமிழ் அங்கத்தவர்கள் 1956-ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ஐ. தே. க. விலிருந்து வெளியேறினார்கள். இவ்வாறு வெளியேறியதற்கான காரணம், ஐ. தே. க. சம்மேளனத்துக்கு 'சிங்களம் மட்டும்' என்ற பிரேரணையைக் கொண்டு செல்ல வேண்டாமென விடுக்கப்பட்ட கோரிக்கை நிராகரிக்கப்பட்டமையும், தமிழ் மொழியைப் பாதுகாப்பதற்கும் அடிப்படை உரிமைகளை அரசியல் சாஸனத்தின் மூலம் உறுதிப்படுத்திக் கொள்ளவும் ஓர் ஐக்கிய முன்னணியை அமைக்க வேண்டுமென்ற தமிழ்க் காங்கிரஸின் வேண்டுகோளைத் தமிழரசுக் கட்சி ஏற்றுக் கொண்டமையுமாகும். சம்பூரண சமத்துவமுள்ள, சிங்களவரோடு இணைந்து செல்ல விருப்பமுள்ள தமிழரசொன்றை நிறுவுவதைக் கொள்கையாக ஏற்றுக்கொண்டு அவ்விரு கட்சிகளும் ஒன்று சேர்ந்தன. எனினும் அபேட்சகர் தெரிவின் போது ஏற்பட்ட சச்சரவின் காரணமாக ஆந்த ஐக்கிய முன்னணி ஆரம்பத்திலேயே பிளவுபட்டுவிட்டது, அதுவரை ஐ. தே. க, வின் கொள்கையாக இருந்த ,சிங்கள தமிழ் அரசகரும மொழிக் கொள்கை' 1956-ம் ஆண்டில் நடைபெற்ற களனிச்சம்மேளனத்தில் 'சிங்களத்தை மட்டும்' அரசகரும மொழியாக்கும் கொள்கையாக மாற்றியமைக்கப்பட்டது.

1956-ம் ஆண்டில் பண்டாரநாயக்க அரசாங்கம் சமர்ப்பித்த அரசகரும மொழிக் கட்டளைகள் மசோதாவின்படி 'நாட்டின் ஒரே அரசகரும மொழி சிங்களமாகவும்' உள்ளூராட்சி மன்றங்கள் தத்தமது கருமங்களை நடாத்தவும் அறிக்கைகள் பத்திரங்கள் என்பனவற்றை வைத்துக்கொள்ளவும் அம்மன்றங்கள் தீர்மானிக்கும் மொழியினை உபயோகிக்கலாம்' எனவும் வகை செய்யப்பட்டது. இம்மசோதாவினால் தமிழ்ப் பேசும் மக்களுக்குக் கிடைப்பதாகக் கருதப்பட்ட அதிகாரங்களைப் பகிஷ்கரித்து எப். ஆர். ஜயசூரியா உண்ணாவிரதத்தை மேற்கொண்டார். இதனால் பண்டாரநாயக்காவுக்கு அரசகரும மொழி மசோதாவினை 'மறுபரிசீலனை செய்ய' நேரிட்டது. இந்த நிலையில் தமிழரசுக் கட்சியின் 'சம அந்தஸ்து'க் கோரிக்கை வலுப்பெற்றது. பண்டாரநாயக்கா அரசகரும மொழி மசோதாவைச் சமர்ப்பித்ததோடு நாட்டில் இனக் கலவரங்களும் கொள்ளையடித்தல், தீ வைப்புச் சம்பவங்களும் தலைதூக்கின. மசோதாவைச் சமர்ப்பித்த பண்டாரநாயக்கா 'சிங்கள மொழியை அரசாங்க மொழியாக்குவதோடு தமிழ் மொழியின் நியாயமான உபயோகத்துக்கு இடமளிக்கப்பட வேண்டும்' என்பது தனது கொள்கையெனக் குறிப்பிட்டார். இம்மசோதாவுக்கு ஆதரவாக மக்கள் ஐக்கிய முன்னணியும் ஐ. தே. க. வும் வாக்களித்தன. ல. ச. ச. க., க. க., தமிழரசுக் கட்சி என்பன அதனை எதிர்த்து வாக்களித்தன. 1957-ல் பண்டாரநாயக்கா நிகழ்த்திய ஒரு கொள்கை விளக்க உரையில் "அரசாங்க பாடசாலைகளிலோ உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளிலோ தமிழ் மொழி மூலம் கல்வியூட்டுவதைத் தடை செய்யாதிருத்தல் அரசின் நிரந்தரமான கொள்கையாகவிருக்கும்" என்றார்.

"அவ்வாறே, தமிழ் மொழி மூலம் கல்வி கற்றவர்களுக்கு அம்மொழி மூலமாகவே கல்வியின் மிக உயர்ந்த மட்டத்

துக்குச் செல்லவும் இயல்பாகவே உரிமையுண்டு'' எனவும். ''சிங்களம் தவிர்த்த பிற மொழி மூலம் கல்வி கற்றவர்கள் தாம் கல்வி கற்ற மொழியிலேயே பரீட்சைகளுக்குத் தோற்ற அனுமதி வழங்கப்படும். அவர்களுக்குத் தற்காலிக நியமனங்கள் வழங்கப்படுமிடத்து அப்பதவிகளை நிரந்தரமாக்குவதற்கான கால இடைவெளிக்குள் தமது உத்தியோக அலுவல்களை நடாத்தத் தேவையான அளவுக்கு அரசகரும மொழி அறிவைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்ற நிபந்தனையின்கீழே அத்தகைய நியமனங்கள் வழங்கப்படும். இதுவே அரசின் நடைமுறையாகும்'' எனவும் அவர் குறிப்பிட்டார்.

1957-ம் ஆண்டு ஜூலை மாதம் முதல் கச்சேரி முறையை ஒழித்து மாவட்ட சபைகளை நிறுவ பண்டாரநாயக்கா ஆலோசித்தார். இதனை எதிர்த்து எப். ஆர். ஜயசூரியாவும் கே. எம். பி. ராஜரத்னாவும் உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார்கள். அது பண்டாரநாயக்காவின் 'தமிழ் மொழிக்கு நியாயமான அந்தஸ்து வழங்கும்' கொள்கைக்கு எதிராகவாகும். தமிழரசுக் கட்சி சமஷ்டி முறையைக் கோரியது. பண்டாரநாயக்கா - செல்வநாயகம் ஒப்பந்தமெனப் பெயர் பெற்ற கூட்டறிக்கையில் பின்வருமாறு கூறப்பட்டிருந்தது. ''உத்தேச விதிகளில் தமிழ் மொழியை இலங்கையின் சிறுபான்மையோர்களின் மொழியாக ஏற்றுக்கொள்வதற்கான ஷரத்துக்கள் இடம் பெறவேண்டும். அரசகரும மொழியின் அந்தஸ்துக்குக் குந்தகம் விளையாவண்ணம் வடக்குக் கிழக்குப் பிரதேசங்களின் நிர்வாக மொழியாகத் தமிழ் மொழியை உபயோகிப்பதற்கு வகைசெய்யும் ஷரத்துக்களைப் பிரதம மந்திரியின் நான்கு அம்சத் திட்டத்திற் சேர்த்துக் கொள்ள வேண்டும். வடக்குக் கிழக்குப் பகுதிகளில் வாழும் தமிழ் பேசாத சிறுபான்மையோருக்கான விதிகள் ஆக்கப்பட வேண்டும். இவை பேச்சு வார்த்தை மூலம் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தமாகும்'' மாவட்ட சபைகள் பற்றிய கூட்டறிக்கையில் பின்வரும் அம்சங்கள் இடம் பெற்றிருந்தன,

''(ஆ) வடக்குப் பிரதேசத்தை ஒரே மாவட்ட சபையின் கீழ்க் கொண்டு வருதலும், கிழக்குப் பிரதேசத்தை இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாவட்ட சபைகளின் கீழ் அடங்கும் பிரதேசங்களாகப் பிரித்தலும். (இ) மாகாண எல்லைகளைக் கடந்து இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாவட்ட சபைகள் ஒன்றிணைவதற்கு இடமளிக்கக் கூடிய சரத்துக்களை மசோதாவிற் சேர்த்துக்கொள்ளல், பாராளுமன்ற அங்கீகாரத்தோடு ஒரு மாவட்ட சபைப் பிரதேசத்தைத் தொகுதிகளாகப் பிரிப்பதற்கு இடமளித்தல், பொதுத் தேவைகளுக்காக இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாவட்ட சபைகள் ஒன்றிணைய இடமளிக்கும் சரத்துக்களை ஏற்படுத்தல்'' இந்த அம்சங்கள் சமஷ்டி ஆட்சி முறைக்கு வழிகோலுமென ஒரு சில பிரிவினர் போராடத் தொடங்கினர். பண்டாரநாயக்கா - செல்வநாயகம் ஒப்பந்தத்தை ரத்துச் செய்யும் நோக்கத்துடனேயே 1958-ல் ஜே, ஆர், ஜயவர்த்தன தலைமையில் 'பாத யாத்திரை' ஆரம்பிக்கப் பட்டதெனினும் கம்பஹாவில் அதனைக் கைவிட நேரிட்டமையால் அம்முயற்சி தோல்வியடைந்தது, 1958-ல் வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் *ஸ்ரீ எதிர்ப்பு'ப் போராட்டங்கள் ஆரம்பமாயின. பௌத்த பிக்குகளின் நிர்ப்பந்தத்தின் பேரில் தாம் பண்டாரநாயக்கா – செல்வநாயகம் ஒப்பந்தத்தை ரத்துச் செய்துவிட்டதாக பண்டாரநாயக்கா வானொலி மூலம் அறிக்கை விடுத்தார். இந்தச் சூழ்நிலையில் ''அஹிம்சா முறையிற் சிவில் சட்ட மறுப்பு இயக்கத்தைத் தூண்டிவிடத் தமிழரசுக் கட்சி மும்முரமாக ஈடுபட்டபோது நாடெங்கும் இனக்கலவரங்கள் பரவின.

1958-ல் தமிழ் மொழி (விசேட ஏற்பாடுகள்) மசோதா சமர்ப்பிக்கப்பட்ட போது ல. ச. ச. க., ஐ. தே. க., சோஷலிச மக்கள் முன்னணி, இ. க. க., தமிழ்க் காங்கிரஸ், தமிழரசுக் கட்சி என்பன அவ்விவாதத்திற் பங்கு பற்றவில்லை. இதற்கான காரணங்கள், அவசரகால விதிகளின் கீழ் பொது மக்களுக்குக் கருத்து வெளியிடும் சுதந்திரம் இல்லாமற்

போனமை அநேக தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிறையில் வைக்கப்பட்டு அவர்களின் அரசியல் உரிமை மறுக்கப்பட்டிருந்தமை என்பனவாகும். இங்விவாதத்தில் உரையாற்றிய பண்டாரநாயக்கா "இம்மசோதாவின் ஒவ்வொரு சரத்தும் நாட்டின் அரசகரும மொழியான சிங்கள மொழிக்குரிய அந்தஸ்தை எவ்வகையிலும் பாதிக்காமலிருக்க வேண்டுமென்ற விதிக்கமையவே தயாரிக்கப்பட்டுள்ளன" எனக் கூறினார். "அரசாங்க மொழி என்பதன் கருத்து, ஒரு குறிப்பிட்ட மொழியை உபயோகிக்குமாறு சகலரையும் வற்புறுத்துவதல்ல. 'அரசாங்க மொழி' என்பதன் கருத்தைப் பிழையாக விளங்கிக் கொண்டதன் விளைவாகவே எல்லாச் சிக்கல்களும் ஏற்பட்டுள்ளன" எனவும் அவர் கருத்து வெளியிட்டார். 1959-ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் நீதி மன்ற மொழி மசோதாவொன்று சமர்ப்பிக்கப்பட்டது. இதன் மூலம் வசதியுள்ள சகல நீதி மன்றங்களிலும் சிங்கள மொழியில் வழக்குகளை விசாரிக்க நடவடிக்கை எடுக்க உத்தேசிக்கப்பட்டது. எனினும் அம்மசோதா பாராளுமன்ற அதிகீகாரம் பெறவில்லை. 1959-ம் ஆண்டு மே மாதத்தில் புரட்சிவாத ல. ச. ச. கட்சி மக்கள் ஐக்கிய முன்னணி அரசிலிருந்து வெளியேறியது. 1959-ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் பண்டாரநாயக்கா படுகொலை செய்யப்பட்டார். 1960-ம் ஆண்டு நிகழ்ந்த பொதுத் தேர்தல் முடிவுகளின்படி ஐ. தே. க. போதிய பெரும்பான்மை பலத்தைப் பெறவில்லை. இதனால் கூட்டரசாங்கம் அமைக்க தமிழரசுக் கட்சியை அழைத்த போது, அவர்கள் தமது ஒத்துழைப்பை வழங்குவதற்காகப் பின்வரும் நான்கு நிபந்தனைகளை விதித்தார்கள். அவையாவன: வட, கிழக்குப் பிரதேசங்களில் மாவட்ட சபைகளை நிறுவுதல், அப்பிரதேசங்களில் தமிழ் மொழியை உத்தியோக மொழியாக அங்கீகரிப்பதோடு ஏனைய பிரதேசங்களிலும் அம்மொழியை உபயோகிப்பதற்கான வசதிகளைச் செய்தல், பிரஜாவுரிமைச் சட்டத்தைத் திருத்தியமைத்தல், தேசாதிபதியால் நியமிக்கப்படும் ஆறு நியமன அங்கத்தவர்களுள் ஒருவர் வாக்குரிமையற்ற தமிழ் மக்களின் பிரதிநிதியாக

இருத்தல் என்பனவாகும். இந்த நிபந்தனைகளை ஐ. தே. க. ஏற்றுக்கொள்ள மறுத்தமையால் 1960 ஜுலை மாதத்தில் மீண்டும் பொதுத் தேர்தல் நடைபெற்றது.

1960 டிஸம்பர் மாதத்தில் சிரிமா பண்டாரநாயக்க அரசாங்கம் நீதிமன்ற மொழி மசோதாவை நிறைவேற்றியது. அதில் பின்வரும் அம்சங்கள் இடம் பெற்றன. "2 (1) யாதாயினும் ஒரு நீதிமன்றத்தில் அதன் நடவடிக்கைகளைச் சிங்கள மொழியில் நடாத்துவதற்கான ஊழியர்களும், உபகரணங்களும் இருப்பதாகவும், அவ்வாறு செய்வது நடைமுறையிற் சாத்தியமானதாகவும் நீதி அமைச்சர் கருதுமிடத்து, பிரதம மந்திரியின் ஆலோசனையோடு, அந்த நீதிமன்றத்திற் சாட்சியங்களைப் பதிவு செய்யவும், பதிவுகளை வைத்துக்கொள்ளவும் சிங்கள மொழியை உபயோகிக்கலாமென வர்த்தமானி மூலம் பிரகடனம் செய்ய அமைச்சருக்கு அதிகாரமுண்டு."

"4 (1) (அ) அந்த நீதிமன்றத்தால் (அதாவது உயர் நீதி மன்றத்தால்) வழங்கப்படும் தீர்ப்போ ஆணையோ சிங்களம் அல்லது ஆங்கிலத்தில் வழங்கப்பட வேண்டும். ஆங்கில மொழியில் வழங்குமிடத்து சிங்கள மொழிபெயர்ப்பொன்றும் வழங்கப்பட வேண்டும். ஒரு தீர்ப்பு ஆங்கில மொழி மூலமாக வழங்கப்படுமிடத்து, அதன் சிங்கள மொழி பெயர்ப்பொன்றையும் வாசிப்பதற்கு ஒழுங்கு செய்யப்பட வேண்டும்.

தமிழரக் கட்சி இம்மசோதாவை எதிர்த்து வாக்களித்தது. பீலிக்ஸ் டயஸ், மைத்திரிபால சேனநாயக்கா ஆகியோர் வடக்கில் மேற்கொண்ட உத்தியோக பூர்வமான விஜயத்தின் போது நாட்டிலுள்ள சகலரும் நாட்டின் மொழியைக் கற்றுக்கொள்ள வேண்டியதன் அவசியத்தையும் முக்கியத்துவத்தையும் பற்றி வலியுறுத்தி உரையாற்றினர். 1960-ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் பாராளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பான 13-ம் இலக்க நிரந்தர விதி திருத்தப்பட்டது. அதன்படி "பாராளுமன்ற அலுவல்கள்

சிங்கள மொழி மூலமாகவே நடாத்தப்பட வேண்டும். ஆனால் யாராயினும் ஓர் உறுப்பினர் விரும்பினால் ஆங்கிலம் அல்லது தமிழ் மொழியில் பாராளுமன்றத்தில் உரையாற்றலாம்'' இந்தத் திருத்தத்தை எதிர்த்துத் தமிழரசுக் கட்சியும் ல.ச.ச. கட்சியும் வாக்களித்தன. 1960-ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் தமிழரசுக் கட்சி நீதி மன்ற மொழி மசோதாவை எதிர்த்துப் பின்வரும் பிரேரணையை நிறைவேற்றியது. ''நீதிமன்ற மொழி மசோதா மூலம் ஆங்கில மொழிக்குப் பதிலாகத் தமிழ் மொழியை உபயோகிக்க வகை செய்யப்படாதவிடத்து, இலங்கைவாழ் தமிழ் மக்களின் உரிமைகள் மறுக்கப்படுவதோடு, சிம்மாசனப் பிரசங்கத்தின் மூலம் அரசாங்கம் வெளியிட்ட மொழிக் கொள்கைக்கும் அது முரண்பட்டதாகும். வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் வழக்குகளையும் நீதிமன்ற அலுவல்களையும் தமிழ் மொழி மூலம் நடாத்தக் கூடியவாறு நீதிமன்ற மொழி மசோதாவைத் திருத்தியமைக்காவிட்டால் அரசாங்கத்தோடு மேலும் பேச்சு வார்த்தை நடாத்துவதிற் பயனில்லை'' என்பதே அப்பிரேரணையாகும்.

1960-ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் பாராளுமன்ற நிகழ்ச்சி நிரல் முதன் முறையாகச் சிங்களத்தில் மட்டுமே வெளியிடப்பட்டது. அதைத் தமிழ் மொழியிலும் வெளியிட வேண்டுமெனத் தமிழரசுக் கட்சி கூறியது. தமிழ் மொழி (விசேட ஏற்பாடுகள்) மசோதாவை அமுல் நடத்துவதற்கான 1960-ம் ஆண்டின் தமிழ் மொழி (விசேட ஏற்பாடுகள்) விதிகள் 1960-ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் பாராளுமன்றத்திற் சமர்ப்பிக்கப்பட்டன. அவ்விதிகளின்படி உத்தியோக அலுவல்களுக்காக அரச ஊழியர் ஒருவருக்குத் தமிழ் மொழியில் வரும் கடிதங்களுக்கு அவ்வூழியர் தமிழ் மொழியிலேயே பதில் அனுப்பலாம். இவ்விதிகளால் சிங்களம் மட்டும் சட்டம் நாசமாகிவிடுமென கே. எம். பி. ராஜரத்தினாவின் தேசிய விடுதலை முன்னணி அவ்விதிகளை எதிர்த்தது. வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் உத்தியோக மொழியாகத் தமிழ் மொழியை உபயோகிக்க வேண்டுமென்ற தமது கோரிக்கைக்கு அவ்விதிகள் சிறிதளவாயினும் நெருங்கி

வரவில்லை என்ற காரணத்தினுல் தமிழரசுக் கட்சி அவ்விதிகளை நிராகரித்தது. 1961-ம் ஆண்டு ஜனவரி 30-ந் திகதி தமிழரசுக் கட்சி 'நேரடி நடவடிக்கையில்' இறங்கியது. அப்போராட்டத்தின் நோக்கங்களாவன: (1) சிங்கள மொழியை நிர்வாக மொழியாக உபயோகிக்கும் வடக்குக் கிழக்குப் பிரதேச அலுவலகங்களிற் கடமையாற்றும் சகல ஊழியர்களையும் வேலைக்குச் செல்லாமற் தடுத்தல் (2) சிங்களத்திற் கடமையாற்றும் அரச ஊழியர்களுக்கு எதிராக ஒத்துழையாமை இயக்கத்தை ஆரம்பித்தல். (3) தமிழ் மொழி மூலப் பாடசாலைகளிற் சிங்களம் போதிப்பதைத் தடுத்தல். யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய நகரங்களைக் கேந்திரமாகக் கொண்டு அரசாங்க நிர்வாக இயந்திரத்துக்கு எதிரான கடும் போராட்டமும் சத்தியாக்கிரகமும் வடக்கிலும் கிழக்கிலும் பரவியது. 1961 ஏப்ரல் மாதத்தில் 'தமிழரசுத் தபாற் சேவை' ஒன்றை ஆரம்பித்த தமிழரசுக் கட்சி, அதன் பின்னர் 'பொலிஸ் படை' ஒன்றை அமைக்கவும், காணிகளைத் தமிழ் மக்களிடையே பகிர்ந்தளிக்கவும் நடவடிக்கை எடுத்தது. ஊரடங்குச் சட்டத்தைப் பிரகடனம் செய்து, 15 பாராளுமன்ற உறுப்பினர்களைச் சிறையெடுத்து, ரிச்சர்ட் உடுகமையின் தலைமையில் அனுப்பப்பட்ட இராணுவத்தால் மக்களை அடக்கிய பின்னர் நிலைமை 'சுமுகமாகி விட்டதாக' முதலாளித்துவ அரசு பறைசாற்றியது.

இதற்கிடையில், 1957 யூலை 4-ம் திகதியிடப்பட்டதும் செல்வநாயகம் பண்டாரநாயக்காவுக்கு அனுப்பியதாகவும் கூறப்பட்ட கடிதமொன்றை என். எம். பெரேரா 1966-ம் ஆண்டு ஜனவரி மாதம் பாராளுமன்றத்திற் சமர்ப்பித்தார். அக்கடிதத்தில், ''வட கிழக்கு ஈழம்'' என்ற ஒரு தனி அரசு வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் இருப்பதாகவும், அதற்குப் பின்னரும் அப்பகுதிகளில் மாத்திரம் சட்டமியற்றும் அதிகாரம் இல்லையெனவும், அதற்கான அதிகாரம் இலங்கைப் பாராளுமன்றத்துக்கே உரியதெனவும் கூறப்பட்டிருப்பதாகப் பிரஸ்தாபிக்கப்பட்டது. (1) இலங்கையின் அரசியல் சாஸனம் (2) இலங்கைப் பாராளுமன்றமும் அதற்கான பொதுத்

தேர்தலும் (3) அரசாங்கத்தின் தலைவர் (4) இலங்கை உயர் நீதிமன்றம் (5) உள்நாட்டுப் பாதுகாப்பு (6) வெளிநாட்டு ராஜதந்திர உறவுகளும் வெளிநாட்டு ஒப்பந்தங்களும் (7) யுத்தமும் சமாதானமும் (8) சர்வ தேச வியான சேவை (9) உள்நாட்டு வெளிநாட்டுச் செய்தித் தொடர்பும் போக்குவரத்தும் (10) உள்நாட்டு வெளிநாட்டுத் தபால் சேவை (11) உள்நாட்டு வெளிநாட்டுத் தொலைபேசிச் சேவை (12) வெளிநாட்டவர்கள (13) நோட்டுக்களும் காசுகளும் (14) முத்திரைகள் (15) சுங்க வரி (16) வருமான வரியும் பெருந்தோட்ட வரியும் (17) நிறையும் அளவீடுகளும்.

1961-ம் ஆண்டைச் சிங்கள மொழி மூல நிர்வாகத்துக்கு மாற்றுவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்குமுகயாக 1964 ஜனவரி 2-ம் திகதியைத் தமிழரசுக் கட்சி ஒரு துக்க தினமாகப் பிரகடனம் செய்தது. 1964-ம் ஆண்டு ஜூன் மாதத்திற் சத்தியப் பிரமாணம் செய்த ஸ்ரீ லங்கா சமசமாஜக் கூட்டரசாங்கம், "அரசகரும மொழி மசோதாவையும், தமிழ் மொழியின் நியாயமான உபயோக மசோதாவையும் சிங்கள தமிழ் மக்களாகிய இரு சாராரும் மேலும் ஏற்றுக்கொள்ளக் கூடியவாறு அமுல் நடாத்துவதற்கான விதிகளை வெளியிடுவதற்கு" நடவடிக்கை எடுத்தது. இந்த விதியின் கீழ் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளைத் தவிர அதற்குப் புறம்பாக எதையுமே செய்ய ல. ச. ச. க. எதிர்பார்க்கவில்லை. மொழி பற்றிய அரசாங்கத்தின் தீர்மானங்களை அமுல் நடாத்துவதற்கான பொறுப்பு நிதி அமைச்சர் என். எம். பெரேரா, நீதி அமைச்சர் ஸீ. பீ. டி. சில்வா, கல்வி அமைச்சர் பீ. பீ. ஜீ. கலுகல்ல ஆகியோரைக் கொண்ட ஒரு அமைச்சரவை உப குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது. ல. ச. ச. க. வும் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியும் இதுவரை கையாண்ட லெனினிஸ மொழிக் கொள்கையையும் சிறுபான்மையோர் தொடர்பான ஏனைய கொள்கைகளையும் கைவிட்டுவிட்டு, வெளிப்படையாகவே முதலாளித்துவ இனவாதக் கொள்கைகளுக்குத் தம்மை அடிமையாக்கிக் கொண்டு, சிங்கள முதலாளித்துவ வர்க்கத்தோடு கூட்டணிகள் அமைத்துக்கொண்டு, தமிழ்ப்

பேசும் மக்கட் பிரிவினரதும் ஏனைய சிறுபான்மையோரினதும் நியாயமான உரிமைகளை மிதிப்பதற்குச் சிங்களச் செல்வந்தர்களுக்கு ஆதரவு நல்கும் யுகம் இக்கால கட்டத்தில்தான் ஆரம்பமாகின்றது.

தமிழரசுக் கட்சியின் தலைவர் செல்வநாயகம் விடுத்த அறிக்கையொன்றில், தமிழ் பேசும் குழந்தைகளுக்குச் சிங்கள மொழியைக் கற்பிக்க எடுக்கப்படும் முயற்சிகளைத் தாம் வன்மையாக எதிர்ப்பதாகக் கூறினர். 'தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக 'சிவில் சட்ட மறுப்பு இயக்கமொன்றை ஆரம்பிக்கப் போவதாகவும், தோட்டப் பாடசாலைகளின் போதனு மொழி தமிழாக இருக்க வேண்டுமெனவும் அவர்கள் தீர்மானித்தார்கள். மேலும், இலங்கையிலுள்ள இந்திய வம்சாவளியினரின் பிரச்சினை பற்றி இந்திய அரசாங்கத்தோடன்றி அம்மக்களின் பிரதிநிதிகளுடனேயே பேச்சுவார்த்தை நடத்தித் தீர்வு காணவேண்டுமெனவும் அவர்கள் அரசாங்கத்துக்குக் கூறினுர்கள். இதற்கிடையில் சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம் மூலமாக 'இந்தியாவினுலோ இலங்கையினுலோ பிரஜைகளாக ஏற்றுக்கொள்ளப்படாது இலங்கையில் வசிக்கும் இந்திய வம்சாவளியினர் இலங்கை அலலது இந்தியப் பிரஜைகளாகப் பதிவு செய்து கொள்ள வேண்டும் எனவும் 'ஒப்பந்த தினத்தில் அவர்களின் தொகை சுமார் 9,75,000' எனவும் 'அவர்களுள் 3,00,000 பேருக்கும், அவர்கள் இயற்கைப் பெருக்கத்திற்கும் இலங்கை அரசாங்கம் இலங்கைப் பிரஜாவுரிமை வழங்கும்' எனவும் "5,25,000 பேரையும் அவர்களின் இயற்கைப் பெருக்கத்தோடு இந்தியாவுக்குத் திருப்பி அனுப்புவதாகவும்" எஞ்சிய 1,50,000 பேர் பற்றியும் அவர்களின் எதிர்காலம் பற்றியும் இரு அரசாங்கங்களும் பின்னர் தனியானதொரு உடன்படிக்கை செய்துகொள்வதாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம் தமிழரசுக் கட்சியினதும் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸினதும் பலத்த கண்டனத்துக்குள்ளாகியது. இலங்கைவாழ் இந்திய வம்சாவளியினரின் ஒரு பிரதிநிதியாவது இல்லாது அவர்களைப் பற்றிச் செய்யப்படும் எந்தத் தீர்மானத்

தையும் தம்மால் ஏற்றுக்கொள்ள முடியாதென ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸின் காரியதரிசி ஏ. கே. கந்தசாமி கூறினார். அந்த மக்கள் வேறு எந்த நாட்டின்மீதும் பற்று வைத்தில்லாதபோது அவர்களை நாடு கடத்த மேற்கொள்ளும் எந்த முயற்சியும் அர்த்தமற்றதென அவர் கூறினார். இதற்கிடையில் சிறிமா அரசாங்கம் கவிழ்ந்தது. மீண்டும் டட்லி அரசாங்கம் பதவிக்கு வந்தது.

1948-ல் ஜி.ஜி. பொன்னம்பலம் ஐ.தே.க. வுடன் கூட்டுச் சேர்ந்து அமைச்சர் பதவியைப் பெற்றுக்கொள்ள முன்வந்ததன் பின்பு தமிழரசுக் கட்சி ஒரு கட்சியாக முதலாளித்துவ ஐ தே. க. வுடன் சேர்ந்து கொண்டமை இங்கு விசேடமாக நினைவு கூறவேண்டிய அம்சமாகும். சகல இனவாத முதலாளித்துவக் கட்சிகளிலும் மிகவும் தீவிரமான சிங்கள இனவாதக் கட்சியாகிய தேசிய விடுதலை முன்னணியும், "தமிழர்களின் தோலை உரித்துச் செருப்புத் தைத்து அணிவேன்" எனக் கூறிய அதன் தலைவர் கே. எம். பி ராஜரத்தினவும் தமிழரசு, தமிழ்க் காங்கிரஸ் ஆகிய கட்சிகளோடு கூட்டுச் சேர்ந்து தேசிய அரசாங்கமொன்றை அமைத்தமை மற்றுமொரு விசேட அம்சமாகும். தமிழரசுக் கட்சி டட்லி - செல்வநாயகம் ஒப்பந்தத்திற்கமையவே அரசாங்கத்திற் சேர்ந்தது. அந்த ஒப்பந்தத்தின்படி "வடக்குக் கிழக்குப் பிரதேசங்களின் நிர்வாக மொழியாகவும் ஆவணங்கள் வைக்கும் மொழியாகவும் தமிழ் மொழியை இடம் பெறச் செய்வதற்காகத் தமிழ்மொழி (விசேட ஏற்பாடுகள்) விதிகளின்கீழ் வகை செய்வதற்கான நடவடிக்கைகளை அவசரமாக மேற்கொள்ள வேண்டும்," "தமிழ் பேசும் ஒரு பிரஜைக்கு நாடு முழுவதிலும் தமிழ் மொழி மூலம் கருமமாற்றும் உரிமை இருக்க வேண்டும்", "வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் நீதிமன்ற அலுவல்கள் தமிழ் மொழி மூலம் நடைபெறுவதோடு தமிழ் மொழியிலேயே பதிவேடுகள் வைப்பதற்கான அவகாசமளிக்கும் வகையில் நீதிமன்ற மொழி மசோதாவைத் திருத்தியமைக்க வேண்டும்", "இரு தலைவர்களினதும் பரஸ்பர தீர்மானங்களின்படி அதிகாரம் பொருந்திய

மாவட்ட சபைகளை இலங்கையில் அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். தேசிய தேவைகளை முன்னிட்டு அந்தச் சபைகளுக்குக் கட்டளை பிறப்பிக்கும் அதிகாரம் அரசாங்கத்துக்கு இருக்க வேண்டும்'', ''குடியேற்றத் திட்டங்கள் நிறுவும் முறையில் காணிகளைப் பகிர்ந்தளிக்கையில் அந்தந்தப் பிரதேசங்களில் வாழும் காணியற்றவர்களுக்கே முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்'' என்பன ஏற்றுக்கொள்ளப்பட்டன. தமிழ்க் காங்கிரஸ் தலைவர் பொன்னம்பலம் ''இனவாதத்தால் நாட்டைப் பிரிப்பதற்காக இன்னும் முயற்சித்துக்கொண்டிருக்கின்ற பிற்போக்கு வாத இன விரோத ஏகாதிபத்திய வாதிகளிடமிருந்து நாட்டைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டு''மெனக் கூறினர். உள்ளூராட்சி அமைச்சராக விருந்த திருச்செல்வமோ சமஷ்டி முறையைக் கோரி ஆரம்பிக்கப்பட்ட தமது போராட்டத்தை இன்னும் கைவிட்டுவிடவில்லை எனக் கூறினர்.

1966-ம் ஆண்டு ஜனவரி 8-ந் திகதி விவாதத்துக்கு எடுத்துக்கொள்வதற்காக ஜே. ஆர். ஜயவர்த்தன தமிழ் மொழி (விசேட ஏற்பாடுகள்) சட்டவிதிகளைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார். அக்சட்டவிதிகளின்படி ''1956-ம் ஆண்டின் 33-ம் இலக்க அரசகரும மொழி மசோதாவின் (அதாவது இலங்கையின் ஒரே அரசகரும மொழி சிங்களம் மட்டுமே) நடைமுறைக்குப் பாதகமில்லாமல் வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் ''சகல அரசாங்க அலுவல்களை நிறைவேற்றவும் பொது அறிக்கைகளை வைத்துக்கொள்ளவும்'' உத்தியோகபூர்வமான அலுவல்கள் தவிர்த்த ஏனைய அலுவல்களில் தமிழ் மொழி மூலம் கல்வி கற்றவர்களுக்கும் உத்தியோக பூர்வ அலுவல்களில் ஓர் அதிகாரிக்கும் இடையிலும் அல்லது தமிழ் மொழி மூலம் கருமமாற்றும் வடக்குக் கிழக்குப் பிரதேச அதிகார சபைக்கும் உத்தியோகபூர்வமான அலுவல்களில் ஒரு அதிகாரிக்கும் இடையிலும் நடைபெறும் கடிதத் தொடர்புகளிற் தமிழ் மொழியையும் உபயோகிக்க'' வேண்டும். இது நாட்டைப் பிரிக்கும் நடவடிக்கையின் முதற்படியாகுமென 'அத்த' 'ஜனதின' பத்திரிகைகள் கூறின. விசேடமாகப்

பௌத்த பிக்குகள் இந்த அட்டவணையில் அடங்கியிருந்த அம்சங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். ஸ்ரீ ல. சு. க., ல. ச. ச. க., க. க. ஆகியவற்றின் ஐக்கிய முன்னணி "ஐக்கிய இலங்கை என்ற கருத்தினை மதிக்கும் சகலரும் தமிழ்மொழி விசேட ஏற்பாடுகள் மசோதாவின்கீழ் அரசாங்கம் பிறப்பித்துள்ள விதிகளைப் பகிஷ்கரிப்பதோடு அவற்றை எதிர்க்கவும் வேண்டும்" எனக் கூறியது. 1966-ம் ஆண்டு ஜனவரி 8-ம் திகதியை ஒரு தேசிய துக்க தினமாக அனுஷ்டிக்க ஐக்கிய முன்னணி தீர்மானித்தது. அன்று நடைபெற்ற சிங்களப் பாஷை ஊர்வலத்தின் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. ஊரடங்குச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டு, பத்திரிகைத் தணிக்கையும் அமுல் செய்யப்பட்டது. நீதி அமைச்சராகவிருந்த ஏ. எப். விஜேமான்ன 1966-ம் ஆண்டு பெப்ருவரி 3 ந் திகதி வெளியிட்ட வர்த்தமானி அறிவித்தல் மூலம் தமிழ் மொழி விதிகள் அமுல் செய்யப்பட்டன. சிறிமா அரசாங்கம் சிங்களத் தேர்ச்சியற்ற அரச ஊழியர்களுக்கு விதித்திருந்த விதிகளை நீக்கிவிட்டு அதனால் வேலையிழந்தோருக்கு வேலையும் சம்பளப் பாக்கிப் பணமும் வழங்கப்பட்டன. தமிழ்ப் பிள்ளைகளின் போதனா மொழி தமிழாகவே இருக்கவேண்டுமெனத் தமிழரசுக் கட்சி கூறியது. வடக்குக் கிழக்குப் பிரதேசங்களிலுள்ள தமிழ் மொழி மூலப் பாடசாலைகளுக்குச் சிங்கள ஆசிரியர்களை நியமனம் செய்யாதிருக்க அரசாங்கம் கருதியது. எனினும் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் அதனை எதிர்த்தமையால் முஸ்லிம் பாடசாலைகளுக்கு மாத்திரம் சிங்கள ஆசிரியர்களை நியமனம் செய்ய அரசாங்கம் தீர்மானித்தது. இதன் பின்னர் சிறிமா - சாஸ்திரி ஒப்பந்த (அமுல் நடத்தும்) மசோதாவொன்று சமர்ப்பிக்கப்பட்டது. இது தொடர்பாகத் தமிழரசுக் கட்சியில் ஏற்பட்ட ஒரு கருத்து வேற்றுமையின் காரணமாகக் கட்சியின் பாராளுமன்றக் குழுவிலிருந்து வெளியேறிய நவரத்தினம் பின்வருமாறு கூறினார்: "பத்து லட்சம் இந்திய தோட்டத் தொழிலாளர்களுக்கும் கூறவேண்டிய புத்திமதி யாதெனில் அவர்கள் அனைவரும் இந்தியப் பிரஜாவுரிமைக்கு விண்ணப்

பிக்காமல் இலங்கைப் பிரஜாவுரிமைமக்கே விண்ணப்பிக்க வேண்டும்'' என்பதாகும். தமிழரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுவிலிருந்தும், மத்திய செயற் குழுவிலிருந்தும், பேரவையிலிருந்தும் இராஜினமாச் செய்த செனட் சபை உறுப்பினர் மாணிக்கம் செனட் சபையிற் பின்வருமாறு கூறினர்: ''மார்க்ஸீயவாதிகளிடமிருந்து ஜனநாயகத்தைப் பாதுகாத்துக் கொள்வதைத் தமது கொள்கையாகப் பிரகடனம் செய்துள்ள தமிழரசுக் கட்சியின் ஜனநாயக வழி இது தான்......'' அந்த மசோதாவுக்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆதரவளித்தது,

## கொல்வின் அரசியலமைப்பு

இதன் பின்னர் ஸ்ரீ ல. சு. க., ல. ச. ச. க., இ. க. க. என்பன கூட்டுச் சேர்ந்த ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்தது. எழுச்சி பெற்று வரும் பாட்டாளி வர்க்க இயக்கத்துக்கெதிரான பழிச் சொற்களையும் நிந்தனைகளையும் கூறிக்கொண்டு அதனை மக்களிடமிருந்து பிரித்து வைக்கப் பகிரதப் பிரயத்தனம் செய்த அந்த முதலாளித்துவக் கூட்டரசாங்கம் தமது முயற்சி பலிக்காமற் போகவே 1971-ம் ஆண்டில் தனது நேரடியான ஆயுத பலத்தால் அதனைக் கொடூரமாக அடக்க முற்பட்டது. இக்காலத்தில் தமிழ் மக்களின் சகல பிரச்சினைகளையும் தீர்த்து வைப்பதாகப் பல தடவைகள் வாக்குறுதியளிக்கப்பட்டன. அவசர கால விதிகளின் கீழ் தமிழ் பேசும் மக்களினதும் ஏனைய சிறுபான்மை மக்களிடமும் அபிப்பிராயங்களைக் கேட்டறியாமல் 1972-ம் ஆண்டு மே மாதம் 22-ம் திகதி ''ஸ்ரீ லங்கா அரசியலமைப்புச் சட்டம்'' வெளியிடப்பட்டது.

அந்தச் சட்டத்தின் இரண்டாவது அத்தியாயம் பின்வருமாறு கூறுகின்றது:

" 6. இலங்கைக் குடியரசு புத்த மதத்துக்கு முதன்மை ஸ்தானத்தை வழங்குகின்றது. ஆனல், 18-வது ஷரத்தின் (1) ஆவது உப விதியின் (இ) பிரிவின்படி சகல மதங்களுக்கும் கிடைக்க வேண்டிய உரிமைகள் பாதுகாத்துத் தரப்படுவதோடு அரசாங்கம் புத்த மதத்தைப் போஷித்துக் காப்பாற்ற வேண்டும் ".

இந்த அரசியலமைப்புச் சட்டத்தின் சிற்பி தன்னை ஒரு மார்க்ஸீயவாதி என அழைத்துக்கொள்ளும் கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வாவாகும். பாராளுமன்றத்திலிருந்த தம்மை மார்க்ஸீயவாதிகளெனக் கூறிக்கொள்ளும் சகலரும் இச்சட்டத்தை இதயபூர்வமாக அனுமதித்தனர்.

அச்சட்டத்தின் மூன்ருவது அத்தியாயத்திற் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது :

" 7. இலங்கையின் அரசாங்க மொழி 1956-ம் ஆண்டின் 33-ம் இலக்க அரசாங்க மொழி மசோதாவின்படி சிங்கள மொழியாகும் ".

8. (1) தமிழ் மொழியின் உபயோகம் 1958-ம் ஆண்டின் 28-ம் இலக்கத் தமிழ் மொழி (விசேட ஏற்பாடுகள்) மசோதாவுக்கேற்றதாகவிருக்கும். (2) தமிழ் மொழியின் உபயோகத்துக்காக 1958-ன் 28-ம் இலக்கத் தமிழ் மொழி (விசேட ஏற்பாடுகள்) மசோதாவின் கீழ் இயற்றப்பட்டு அரசியலமைப்புச் சட்டம் அமுலாகும் வரையில் நடைமுறையிலிருந்த யாதாயினுமொரு கட்டளை இருப்பின் அத்தகைய கட்டளை எதனையும் அரசியலமைப்புச் சட்டத்தின் ஏற்பாடுகளாகத் தெரிப்புரைக்கக் கூடாது. அக்கட்டளைகள் 12-வது ஷரத்தின் ஏற்பாடுகளின் கீழ் அமுல் நடத்தப்படும் எழுத்து மூல உப விதிகளாகக் கருதப்பட வேண்டும்.

அதே அத்தியாயத்திற் சட்டமியற்றும் மொழி பற்றிப் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது ;

"9 (1) சகல விதிகளும் உப விதிகளும் சிங்கள மொழியிலேயே இயற்றப்பட வேண்டும். (2) அவ்வாறு இயற்றப்படும் சகல விதிகளுக்கும் தயாரிக்கப்படும் சகல உப விதிகளுக்கும் ஒரு தமிழ் மொழி பெயர்ப்பு இருத்தல் வேண்டும்.

நீதி நிர்வாகத் துறையின் மொழி பற்றிப் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது :

"11. (1) இலங்கை முழுவதிலுமுள்ள நீதி மன்றங்களிலும் நீதிபரிபாலனம் செய்யும் சட்டபூர்வமான அதிகாரம் பெற்ற விசாரணை மன்றங்களிலும், தொழிற் தகராறு சம்பந்தமான மசோதாவின் கீழ் நிறுவப்பட்ட நீதி மன்றங்கள், விசாரணைச் சபைகள், ஏனைய நிறுவனங்கள் என்பவற்றிலும், 1958-ம் ஆண்டின் 10-ம் இலக்கச் சமாதானச் சபை மசோதாவின் கீழ் நிறுவப்பட்டுள்ள சமாதானச் சபைகளிலும் அலுவல்கள் சிங்கள மொழி மூலமாகவே நடாத்தப்பட வேண்டும். அதற்கேற்ப, அந்த நீதி மன்றங்கள் விசாரணை மன்றங்கள், தொழிற் தகராற்று மசோதாவின் கீழ் நிறுவப்பட்ட நீதி மன்றங்கள், பிற நிறுவனங்கள் என்பனவற்றிலும் 1958-ம் ஆண்டின் 10-ம் இலக்கச் சமாதானச் சபைகளிலும் நடைபெறும் அலுவல்கள் முறையீடுகள், வழக்குத் தீர்ப்புகள், ஆணைகள் என்பனவும், நீதி பரிபாலனம், நிறைவேற்றுப் பணிகள் தொடர்பான அறிக்கைகள் என்பனவும் வைத்திருக்க வேண்டிய ஏனைய குறிப்புகள் அனைத்தும் சிங்கள மொழி மூலமாகவே இருக்க வேண்டும்.

"எனினும், வட மாகாணத்திலும், கிழக்கு மாகாணத்திலும் அடிப்படை நீதி பரிபாலன அதிகாரம் பெற்ற தாபனங்கள் தொடர்பாகவும், தொழிற் தகராற்று மசோதாவின் கீழ் நிறுவப்பட்ட நீதி மன்றங்கள் விசாரணை மன்றங்கள் என்பவற்றிலும், வேறு தாபனங்களிலும் தேசிய அரசுப் பேரவையினல் இயற்றப்படும் சட்டத்தினலோ அல்லது தேசிய அரசுப் பேரவையினல் இயற்றப்படும் சட்டமொன்றின் அதிகாரத்தின் கீழோ வேறு ஏற்பாடுகளை அமுல் நடத்தலாம்".

இவை தவிர, தமிழ் பேசும் மக்களுக்குத் "தமது வாதப் பிரதிவாதங்களையும் கோரிக்கைகள், ஆலோசனைகள் என்பவற்றையும் முறைப்பாடுகளையும் தமிழ் மொழி மூலமாகவே செய்வதற்கும்" நீதி பரிபாலனத் துறைகளில் "பங்கு பற்றும் போது "தமிழ் மொழியை உபயோகிப்பதற்கும் உரிமையுண்டு." அவ்வாறு பங்கு பற்றும்போது "சிங்கள மொழியையோ தமிழ் மொழியையோ உபயோகிப்பதற்கும்" அந்தந்தக் காரியங்களில் அரசாங்கத்தால் வழங்கப்படும் சிங்கள அல்லது தமிழ் மொழிபெயர்ப்பொன்றைப் பெறுவதற்கும் உரிமையுண்டு."

இந்த எதேச்சைக் குடியரசுச் சட்டத்தால், அரசியலமைப்புச் சட்டத்தின் மூலமாகவே சட்டபூர்வமாகத் தமிழ் மக்களை இந்த நாட்டின் இரண்டாந்தரப் பிரஜைகளாக்க, முதலாளித்துவத்தின் உயர் தட்டினைப் பிரதிநிதித்துவம் செய்யும் ல. ச. ச. க. வும், இ. க. க. வும் முன்நின்று செயற்பட்டமைக்கு இதைவிட இன்னும் ஆதாரங்கள் அவசியமில்லை.

இதைத் தவிர, முதலாளித்துவ - சிறு முதலாளித்துவ முக்கூட்டு அரசாங்கம் பல்கலைக் கழகங்களுக்கு மாணவரை அனுமதிக்கும்போது, மொழிவாரியாகப் புள்ளிகளைத் தரப்படுத்த ஆரம்பித்தது. நாடெங்கிலும் வசிக்கும் பல்வேறு மக்கட் பிரிவினருக்குத் தேவையான விஞ்ஞானக் கல்வி வசதிகளை அளிக்க, இதுவரை ஆட்சி புரிந்த முதலாளித்துவ அரசாங்கங்களுக்கு இயலாமற் போனதாலும், வைத்திய விஞ்ஞான, பொறியியற் துறைகளுக்கான பாடங்களைக் கற்கப் போதுமான வசதிகள் யாழ்ப்பாணம், கொழும்பு உட்பட வேறு சில நகரங்களில் மாத்திரம் இருந்தமையினாலும், அநீதிக்கும் விரக்திக்கும் ஆளான சகல பிரிவினரதும் பிரச்சினையைத் தீர்ப்பதற்காகப் புள்ளிகளைத் தரப்படுத்தலே பரிகாரமாகக் கொள்ளப்பட்டது. இத்தகைய பாரபட்சமான தரப்படுத்தலை அமுல் நடத்தும் முன்னரும் அதனை அமுல் நடத்திய பின்னரும் தமிழ் பேசும் மக்கட் பிரிவினர் எதிர் நோக்கியுள்ள நிலைமையைப் பின்வரும் புள்ளி விபரங்கள் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றனர்.

| | பொறியியற் பீடம் | | வைத்திய விஞ்ஞானப் பீடம் | |
|---|---|---|---|---|
| | சிங்களம் | தமிழ் | சிங்களம் | தமிழ் |
| 1969-ல் (தரப்படுத்துமுன்) | 51.7% | 58.3% | 50% | 50% |
| 1975-ல் (தரப்படுத்தியபின்) | 83.4% | 16.6% | 81.0% | 19.0% |

இந்தப் பாரபட்சமான தரப்படுத்தல் முறையைப் பீட்டர் கெனமனின் தலைமையில் நியமிக்கப்பட்ட பாராளு மன்றத் தெரிவுக் குழுவினால் மாவட்ட ரீதியில் அமுல் நடாத் துவதற்காகச் சிபாரிசு செய்யப்பட்டது.

முக்கூட்டு அரசாங்கத்திலிருந்து ல. ச. ச. கட்சி விரட்டப் பட்டு, இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியை வெளியேற்ற வழி வகுத்ததன் பின்னர், தமது அரசாங்கத்தைத் தொடர்ந்து நடாத்திச் செல்லும் நோக்கத்துடன் 1977-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 21-ம் திகதி ஸ்ரீ ல. சு. க. சகல தமிழ் பேசும் பிரதிநிதிகளையும் பேச்சு வார்த்தைக்கு அழைத்தது. ''தமிழ் மக்களுக்கென ஒரு தனி நாட்டைப் பெற்றுக் கொள்வது தம்து அடிப்படையானதும் மிக முக்கியமான கோரிக்கையாகவிருப்பினும், அது பற்றிக் கருத்து வெளி யிட்டுத் தாம் அரசாங்கத்தோடு மோதத் தயாரில்லை எனவும், தமிழ் மக்கள் திருப்திப்படக்கூடிய யாதாயினுமொரு தற் காலிக அரசியல் திட்டத்தைக் சமர்ப்பிப்பார்களாயின் அது பற்றி ஆலோசித்துப் பார்க்கத் தாம் தயாராகவிருப்ப தாகவும்'' தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் சிறிமா பண் டாரநாயக்காவுக்கு அறிவித்தல் கொடுத்தார்கள்.

இலங்கை ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் அப்துல் அஸீஸ் ''பதிவுப் பிரஜைகள், வம்சாவளித் தமிழர் கள் ஆகிய பதப் பிரயோகங்கள் உடனடியாக நீக்கப்பட

வேண்டும்'' என்றும், ''இந்தியத் தமிழர் உட்பட சகல தமிழர்களையும் 'இலங்கைத் தமிழர்', 'இலங்கை இந்தியர்கள்' என அழைப்பதைச் சட்டபூர்வமாக்க வேண்டும்'' என்றும், ''உள்ளூராட்சித் தேர்தல்களில் தோட்டத் தொழிலாளரான தமிழர்களுக்கும் வாக்குரிமை வழங்கப்பட வேண்டும்'' எனவும் ''கிராம சபை, நகரசபைத் தேர்தல்களிற் போட்டியிட அவர்களுக்கும் உரிமை இருக்கவேண்டும்'' எனவும், எடுத்துக் காட்டினர். ''தமிழ் பேசும் மக்களுக்கு அனுப்பப்படும் சகல அரசாங்க தஸ்தாவேஜுகளுடனும் அவற்றின் தமிழ் மொழிபெயர்ப்புக்கள் இணைத்து அனுப்பப்பட வேண்டுமெனவும், அரசாங்கம் சுவீகரிக்கும் தோட்டங்கள் பகிர்ந்தளிக்கப்படும்போது தமிழர்கள் புறக்கணிக்கப்படாமல் அவர்களுக்கும் அவை கிடைப்பதற்கான வழிவகைகள் செய்யப்பட வேண்டும்'' எனவும் ''வேலை வாய்ப்புகள் வழங்கும் போது தோட்டத் தொழிலாளரின் படித்த பிள்ளைகளுக்கு 4% கோட்டா முறையில் தொழில் வழங்கப்பட வேண்டும்'' எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். ''கூட்டுறவுத் திட்டம், பிரதேச அபிவிருத்தி மன்றங்கள், கிராம அபிவிருத்தி வேலைத் திட்டங்கள், விவசாயப் பண்ணைகள் ஆகிய வேலைத் திட்டங்களில் இலங்கை வாழ் இந்தியத் தமிழருக்கும் இடமளிக்கப்பட வேண்டும்'' எனவும் ''கலாசாரக் கண்காட்சிகள், தேசிய விளையாட்டுக்கள் என்பனவற்றில் அவர்களும் பங்குபற்ற வசதிகள் செய்யப்படவேண்டும்'' எனவும் ''ஜனவசம, கிராம அபிவிருத்தித் திட்டங்கள் என்பனவற்றில் மலையக இளைஞர்களும் இடம் பெறக்கூடிய திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும்'' எனவும் ''பல்கலைக் கழகப் பிரவேசத்தில் 5% மலையகத் தமிழ் மாணவர்களும் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும்'' எனவும் அவர் கேட்டுக் கொண்டார். இப்பேச்சுவார்த்தைகள் பிரசவ வீட்டிலேயே சமாதி அடைந்துவிட்டன.

1977-ம் ஆண்டு ஜுலை மாதத்தில் நடைபெற்ற பொதுத் தேர்தலின்பின், ஆகஸ்ட் 12-ம் திகதி யாழ்ப்பாணத்தில்

பொலிசாரால் மேற்கொள்ளப்பட்ட மிருசத்தனமான தாக்குதலின் போது, அங்கு நிகழ்ந்த சம்பவங்களை இனவாத சக்திகள் தத்தமது குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்ளப் பயன்படுத்திக்கொண்டன. அச்சம்பவங்களை முன்வைத்துச் சிங்கள இனவாதிகள் வடக்கு கிழக்கு தவிர்த்த ஏனைய மாகாணங்களில் வாழும் தமிழ் பேசும் மக்களைத் தாக்கிச் சிலரைப் படுகொலையும் செய்தார்கள். இதன் பிரதிபலிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழ்ந்த சிங்களவரும் தாக்கப்பட்டார்கள். பல்லாயிரக்கணக்கான மக்கள் அகதிகளானார்கள். இன்றைய வரையிலும், பெரும் பான்மையாகச் சிங்களவர் வாழும் பிரதேசங்களுக்குத் திரும்பி வந்து தமது பாதுகாப்பான உத்தரவாதத்தோடு மீண்டும் குடியேற தமிழ் பேசும் மக்கள் தயங்குகின்றார்கள். இதனால் அவர்கள் மிகவும் பாரதூரமான பிரச்சினையை எதிர்நோக்கியுள்ளார்கள். இச்சம்பவங்களோடு எவ்விதத்திலும் தொடர்பில்லாத மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் தமிழரென்ற ஒரே காரணத்திற்காகக் கொலை, கொள்ளை, கற்பழிப்பு, தீவைப்புச் சம்பவங்களுக்கு இலக்கானார்கள்.

ஜே. ஆர். ஜயவர்த்தன மொழிவாரியான புள்ளித் தரப்படுத்தலை ரத்துச் செய்தார். அதனோடு, சிறுபான்மைப் பிரச்சினை தொடர்பாகப் பல்வேறு இனவாதத் தீர்வுகளின் பட்டியலை வெளியிடுவதும் தெரிகிறது. வடக்கு கிழக்கு மாகாணங்களில் வதியும் சிங்களவர்களுக்கெனத் தனிப்பட்ட குடியேற்றத் திட்டங்களை நிறுவி அவற்றில் அவர்களைக் குடியமர்த்தவும், தமிழர்களைத் தென் இந்தியாவுக்கு அனுப்பவும், தமிழ் சமுதாயத்தை நாடு முழுவதிலும் சிதறிவிடவும் ஆலோசிக்கப்பட்டு வருகின்றது. இத்தகைய இனவாத நடவடிக்கைகளால், தமிழ் பேசும் மக்கட் பிரிவினரின் பிரச்சினைக்கு ஓர் உண்மையான, நிரந்தரமான, சரியான, விஞ்ஞான ரீதியான தீர்வு காணவேண்டிய அவசியம் மேலோங்கியுள்ளது.

மேலே விபரிக்கப்பட்ட வரலாற்றை நோக்குமிடத்து ஒரு விடயம் மிகத் தெளிவாகப் புலப்படுகின்றது. அதாவது, சிங்கள முதலாளி வர்க்கத்தைப் போலவே தமிழ் முதலாளி வர்க்கமும் தத்தமது வர்க்க நலன்களை பேணிக்கொள்ள, சிங்கள - தமிழ் பாட்டாளி வர்க்கத்தினரிடையே முதலாளித்துவ இனவாத உணர்ச்சிகளை விதைத்து அவர்களிடையே பிரிவினையை வளர்த்துள்ளமையாகும்; பிற்போக்குவாதிகள் தமிழ் பேசும் மக்களின் தாங்கொணுத் துயரங்களையும் இன்னல்களையும், வேதனைகளையும் தமக்குச் சாதகமாகப் பயன் படுத்திக் கொண்டுள்ளார்கள்.

தற்போது, தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக ஒரு வட்டமேசை மகாநாடு கூட்ட வேண்டுமென முதலாளித்துவ ஐ. தே. க. கூறுகிறது. ஆனுல் ஜே. ஆர். பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையில் ''போராட்டம் என்ருல் போராட்டம்; சமாதானம் என்ருல் சமாதானம்'' எனக் கூறினுர். இதனுற் சிங்கள இனவாதம் மேலும் தூண்டிவிடப்பட்டது. எந்த ஒரு மக்கட் பிரிவினரும் இரண்டாந்தரப் பிரஜைகளாகக் கணிக்கப்படமாட்டார்கள் என ஐ. தே. க. கூறினுலும். இதுவரை இத்துறையில் உருப்படியான திட்டவட்டமான எந்த ஒரு திட்டமும் வெளியிடப்படவில்லை. அத்தகைய திட்டமொன்றை வெளியிடாமல் வட்டமேசை மகாநாடு பற்றிப் பேசுகின்ருர்கள். மேலும் கடந்த காலச் சம்பவங்களின் பின்னணியில் சோவியத் யூனியன், நடந்த பொதுத் தேர்தலில் தோல்வியடைந்த பல்வேறு அரசியல்வாதிகள் என்போர் செயற்படுவதாகப் பொய்ப் பிரச்சாரம் செய்யப்படுகின்றது. இதன் மூலம் அவர்கள் பிரச்சினையிலிருந்து தப்பிக்கொள்ள முயற்சிக்கலாம். ஆனுல் இக்குற்றச் சாட்டுகள் ஆதாரமற்றவை என இதுவரை நிரூபிக்கப்பட்டுள்ளது. ஐ. தே. க, வின் வரலாற்றை நோக்குமிடத்து அவர்கள் பின்பற்றி வந்துள்ள இனவாதக் கொள்கை தெளிவாகத் தெரிகின்றது. ஸ்ரீ ல. சு. க. வும் அதே வழியிற் செயற்பட்டு வந்துள்ளதை அவர்களின் வரலாறு எமக்குக் காட்டுகின்றது, அவ்விரு முதலாளித்துவக்

கட்சிகளும் சந்தர்ப்பவாதிகளாகத் தமிழ் பேசும் மக்களுக் கெதிராகச் சிங்கள இனவாதத்தைத் தூண்டிவிட்டு அதன் மூலம் தத்தமது வர்க்க நலன்களைப் பேணிக்கொள்ள எத்தனித்துள்ளன.

தமிழ் காங்கிரஸ், தமிழரசுக் கட்சி என்பன தனித்தனி யாகவும் அவை ஒன்றிணைந்து அமைத்த தமிழர் விடுதலைக் கூட்டணியும் தமிழ் முதலாளித்துவ வர்க்கப் பிரிவினருக் காகவே வாதாடுகின்றனவென்பதை எடுத்துக் காட்டலாம். திருக்கோணமலையிலும், கட்டுநாயக்காவிலும் நிறுவியிருந்த இராணுவ முகாம்களை மூடிவிடுமாறு பண்டாரநாயக்கா கேட்டுக்கொண்ட போது, தமிழரசுக் கட்சி அவ்வேண்டு கோளை எதிர்த்து மகாராணிக்கு ஒரு தந்தியை அனுப்பி வைத்தது. நெற்காணிச் சட்டம், துறைமுகம், பஸ் சேவை என்பனவற்றின் 'தேசிய மயம்' ஆகிய நடவடிக்கைகளின் போதும் தமிழரசுக் கட்சி அவற்றை எதிர்த்தது. அவ்விரு கட்சிகளும் சிங்களவர்களுக்கெதிராக இனவாதத்தை விதைப் பதைத் தமது பிரதான கொள்கையாகக் கொண்டுள்ளன. தமிழரிடையே வாழும் தாழ்த்தப்பட்ட இனமாக வகுத்துக் கொண்டுள்ள குலங்களைச் சேர்ந்த, வறிய மக்கள் தீண்டாமை யையும் உயர் குலத்தவரின் அடக்குமுறையையும் எதிர்த்துப் புரட்சிப் பாதையில் பிரவேசித்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவர்கள் உயர் குலத்தவரின் பக்கத்தையே சார்ந்தனர்; அவர்களுக்காகவே வாதாடினர். சந்தர்ப்பம் கிடைத்த போதெல்லாம், அவர்கள் சிங்கள முதலாளி வர்க்கத்தோடு சேர்ந்து தமிழ் மக்களின் உரிமைகளுக்காக மிகவும் சந்தர்ப்ப வாத ரீதியிலே செயற்பட்டு வந்துள்ளார்கள். முதலாளித் துவ ஐ. தே. க., ஸ்ரீ ல. சு. க. ஆகிய கட்சிகளுக்கிடையே சிங்கள மக்கள் பிரிந்து நிற்கும்போது அவ்விரு கட்சிகளுள் ஒன்றோடு சேர்ந்துகொண்டு தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற்றுக்கொள்ளலாமெனத் தமிழ் மக்களிடையே உபதேசம் செய்துகொண்டு, அவர்கள் முதலாளித்துவ அரசாங்கங்களில் அமைச்சர் பதவிகளைப் பெற்றுக் கொண்டார்கள். ஆனால்,

1970, 1977-ம் ஆண்டுகளில் நடைபெற்ற பொதுத் தேர்தல்களில் சிங்கள முதலாளித்துவக் கட்சிகள் போதிய பெரும்பான்மைப் பலத்தை பெற்றுக் கொண்டமையால் அவர்கள் அமைத்துக்கொண்ட தமிழர் விடுதலைக் கூட்டணி மூலமாகத் 'தனித் தமிழ் நாடு' என்ற கருத்தை வெளியிடத் தொடங்கினர்கள். அவர்களுடைய முதலாளி வர்க்க இயல்பையும் இனவாத உருவத்தையும் மூடிமறைக்க முடியாது, 'சோஷலிஸ' அமைப்பை ஏற்படுத்துவது தமது நோக்கமெனக் கூறிக்கொண்டு தமிழர் விடுதலைக் கூட்டணி தமது வர்க்க இயல்பை மூடிமறைத்துக்கொள்ள மேற்கொள்ளும் முயற்சியானது, 'சோஷலிஸ'ப் போர்வையைப் பயன்படுத்திக்கொண்டு முதலாளித்துவ ஐ. தே. க வும் ஸ்ரீ ல. சு. க. வும் தொழிலாளர் வர்க்கத்தையும பாட்டாளி வர்க்கத்தையும் ஏமாற்ற மேற்கொள்ளும் முயற்சியிலும் பார்க்க வித்தியாசமானதன்று.

1966-ம் ஆண்டு ஜனவரி மாதம் 8-ந் திகதி மென்ஷேவிக் வாதிகள் ஸ்ரீ ல. சு. க. வுடன் கூட்டுச் சேர்ந்து கொண்டு, தமிழ் மக்களுக்கு எவ்வித சலுகைகளையும் வழங்க வேண்டாமெனக் கூச்சலிட்டார்கள். இது, இக்காலத்தில் மென்ஷேவிக் வாதிகள் எவ்வளவு கீழ்த்தரமான இனவாதத்துக்குச் சீரழிந்து விட்டார்களென்பதற்குச் சிறந்த ஓர் உதாரணமாகும். மேலும் அவர்கள் பாட்டாளி வர்க்கத்தையும் அந்த இனவாதச் சகதியில் தள்ளிவிட்டார்கள். 1972-ம் ஆண்டின் எதேச்சைக் குடியரசுச் சட்டத்தால் இலங்கைவாழ் தமிழ் மக்களை இரண்டாந்தரப் பிரஜைகளாக்குவதில் முன்நின்று செயற்பட்டவர்களும் சமசமாஜ, கம்யூனிஸ்ட் மென்ஷேவிக் கூட்டமைப்பேயல்லவா? இன்று மக்கள் ஜனநாயகக் கட்சிகளாக முதலாளித்துவ வேடம் பூண்டுள்ளவர்களும் அத்தேசியக் கொடுமையில் மும்முரமாகவும் செயல் ரீதியாகவும் பங்குபற்றியவர்களாகும். தமிழ் மக்கள் தமது கலாசாரப் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ச்சி மகாநாடு நடாத்திய போதும், சலாசாரக் கண்காட்சிகள் நடாத்தியபோதும் முதலாளித்துவ அரசாங்கம் தனது அதிகாரத்தால் அவற்றை

நசுக்கமுற்பட்டது. அப்போது மென்ஷேவிக் வாதிகள் முத லாளித்துவ அரசுக்குத் தமது களங்கமற்ற ஒத்துழைப்பையும் உதவியையும் வழங்கினுர்கள். 1977-ம் ஆண்டு ஆகஸ்ட் சம்பவங்களின்போது இவ்வியக்கத்தின் 'இடதுசார்' எனக் கூறிக்கொண்டவர்கள் வழங்கிய ஆலோசனை என்ன? 1971-ம் ஆண்டிற் செய்ததுபோல முதலாளித்துவப் பொலீஸாருக்கு நாட்டில் 'அமைதியை' நிலைநாட்ட உதவுமுக மாகப் 'பாதுகாப்புக் கமிட்டிகளை' நிறுவ வேண்டும் என் பதே. இந்த விடயங்களைக் கண் இமைக்காமலும், பார்வையை ஒடுக்காமலும் நோக்கும் எவருக்குமே ஒரு விடயம் தெளிவாகப் புரிய வேண்டும். அதாவது, 'தமிழ் ஈழம்' என்ற சுலோகத்தின் கீழ் தமிழ் பேசும் மக்களை அணி திரட்டத் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு வாய்ப்பான சூழ் நிலைகளை அமைத்துக் கொடுத்தவர்கள் வேறு யாருமல்லர்; அவர்கள் ஐ. தே. க., ஸ்ரீ ல. சு. க., சமசமாஜ, கம்யூனிஸ்ட் (தற்போது, இடதுசாரி ஐக்கிய முன்னணி எனத் தம்மை அழைத்துக்கொள்ளும் சந்தர்ப்பவாத மென்ஷேவிக் வாதி களின் குழுக்களும் பிரிவினர்களும் உட்பட) ஆகிய சகல இன வாதக் கட்சிகள், குழுக்கள், சங்கங்கள், தனி நபர்கள் ஆகிய அனைவருமாகும்.

அரசகரும மொழிப் பிரச்சினை, கலாசார - தேசிய இறைமை பற்றிய பிரச்சினை, இனங்களின் சுயநிர்ணய உரிமை பற்றிய பிரச்சினை என்பன எமது விவாதத்திற்குட் பட்டுள்ளவையும், எமது விவாதத்துக்குட்பட வேண்டியவை யுமான பிரச்சினைகளுள் ஒரு சிலவாகும். தமிழர் விடுதலைக் கூட்டணி வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு ஒரு தனி இராச் சியம் கோரும் இவ்வேளையில், இப்பிரச்சினைகள் தொடர்பாக மார்க்ஸீய - லெனினிஸ வாதிகளான நாம் கொண்டுள்ள எண்ணக் கருத்தை விளங்கிக்கொள்வது பொருத்தமான தாகும். அவற்றை ஒவ்வொன்ருக எடுத்து ஆராய்வோம்.

நிலவுகின்ற ஏனைய அரசியற் பிரச்சினைகள் யாவற்றி லிருந்தும் முதலாளி வர்க்கம் எவ்வாறு ஒதுங்கிக்கொள்கின்

றதோ அவ்வாறே அது மொழிப் பிரச்சினையிலிருந்தும் ஒதுங்கிக் கொள்கின்றது. ஒரு கையை வெளிப்படையாக ஜனநாயகத்துக்கும், மறு கையை மறைவாக முப்படைகளுக்கும் பிரபுக்களுக்கும் நீட்டிக்கொண்டு ஒரு தந்திரமான மாயவித்தைக்காரனைப் போலவே முதலாளி வர்க்கம் செயற்படுகின்றது. ''நாம் சலுகைகளை எதிர்க்கின்றோம்'' எனக் கூச்சலிட்ட வண்ணம் சலுகைகளை ஒவ்வொன்றாகப் பெற்றுக் கொள்ள முதலாளி வர்க்கம் பிரபுக்களோடு பேரம் பேசுகின்றது. சகல வகையான மிதவாத முதலாளித்துவ இனவாதிகளினதும் இயல்பு இதுவாகும். உண்மையாகவே, சகல இனங்களையும் சேர்ந்த செல்வந்தர்கள் பின்பற்றி வரும் கொள்கை யாதெனில், 'தேசிய கலாசாரம்' என்ற சுலோகத்தின் பெயரால் பாட்டாளிகளைப் பிரிவினைப்படுத்தியும், ஜனநாயகத்தைக் குற்றுயிராக்கியும், பொது மக்களின் உரிமைகளையும் சுதந்திரத்தையும் விற்று வயிறு வளர்ப்பதும், அவ்வாறு விற்று உண்பதைப் பற்றிப் பிரபுக்களோடு பேரம் பேசுவதுமாகும்.

பாட்டாளி வர்க்க ஜனநாயகத்துக்குரிய சுலோகம் ''தேசிய கலாசாரம்'' அல்ல: ஜனநாயகத்தினதும் உலகளாவிய தொழிலாளர் வர்க்க இயக்கங்களினதும் சர்வதேச கலாசாரமாகும். ''ஆக்கபூர்வமானவை'' எனப்படும் பல்வேறு தேசிய வேலைத் திட்டங்கள் மூலமாக முதலாளி வர்க்கம் பொது மக்களை ஏமாற்ற முயற்சி செய்யட்டும்! இவர்களுக்கு வர்க்க உணர்வுள்ள தொழிலாளர்கள் பின்வருமாறு பதிலளிப்பார்கள். அதாவது ''இலாபம், பூசல்கள், சுரண்டல் என்பனவற்றைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற முதலாளித்துவ உலகில், பொதுவாக ஓரளவுக்காவது தேசியப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஒரே ஒரு வழிதானுண்டு. அது நிலையான ஜனநாயகம் மாத்திரமே!'' என்பதாகும். முதலாளித்துவ ஜனநாயகம் எந்த வகையைச் சேர்ந்ததாகவிருப்பினும் அவை அனைத்துக்கும் முரணான தொழிலாளர் வர்க்க ஜனநாயகம் முன்வைக்கும் கோரிக்கை இதுவாகும். அதாவது, மொழி போன்ற பிரச்சினைகளையொட்டி முதலாளித்துவ அரசியற்

கட்சிகள் உருவாக்கும் தேசியத் தகராறுகளுக்குப் பதிலாக, சகல இனங்களையும் சேர்ந்த தொழிலாளர்களைத் தொழிற் சங்கம், கூட்டுறவுச் சங்கம், நுகர்வோர் சங்கம், கல்விச் சபைகள், மற்றும் சகல வகையான தொழிலாளர் வர்க்க இயக்கங்கள் என்பனவற்றினூடாக எவ்வித நிபந்தனைகளுமின்றி ஐக்கியப்படுத்தி ஒன்றிணைப்பதாகும். அத்தகைய ஓர் ஐக்கியத்தினூலும் ஒருமைப்பாட்டினூலும் மாத்திரமே, ஜனநாயகத்தைச் சிரமேற் தாங்கிக்கொண்டு தற்போது சர்வதேசமயமாகி வரும் மூலதனத்துக்கெதிராகப் பாட்டாளி வர்க்க நலன்களைப் பேணவும், சகல வரப்பிரசாதங்களையும் சுரண்டல்களையும் எதிர்க்கவும், கூடிய ஒரு புதிய வாழ்க்கைத் திட்டத்தை நோக்கி மனித வர்க்கத்தின் முன்னேற்றத்தைத் தூண்டிவிடலாம்.

தேசியப் பிரச்சினை தொடர்பாகப் பொலிஸ் படையிடம் கையேந்தி நிற்கும், மிதவாத முதலாளித்துவ வர்க்கத்தின் உறுதியற்ற தன்மையும், சந்தர்ப்பவாதமும் அரசகரும மொழிப் பிரச்சினையால் உள்ளங்கை நெல்லிக்கனியாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. மிதவாத நலன்களின் அடிப்படைகளால் நோக்கினூலும், மொழிப் பிரச்சினை தவிர்ந்த அதனோடு தொடர்பான அநேக பிரச்சினைகளில் மிதவாத முதலாளித்துவ வர்க்கம் மிகவும் தந்திரமாகவும், வஞ்சகமாகவும் மூடத்தனமாகவுமே செயற்பட்டுள்ளது. இதிலிருந்து எழக்கூடிய முடிவுதான் என்ன? எல்லா மிதவாத முதலாளித்துவ இனவாதங்களாலும் தொழிலாளர்களிடையே இயன்றளவு அதிகமான ஊழல்களை விதைத்துச் சுதந்திரத்தினதும் பாட்டாளி வர்க்கப் போாரட்டத்தினதும் இலட்சியங்களுக்கு பெருமளவிற் தீங்கு விளைவிக்கப்படுகின்றதென்பதே இம்முடிவாகும். 'தேசிய கலாசாரம்' என்ற சுலோகத்தினுல் மறைக்கப்பட்டிருக்கும் அந்த முதலாளித்துவ (முதலாளித்துவ - பிரபுத்துவமும்) போக்கு மிகவும் பயங்கரமானது. சகல இனங்களையும் சேர்ந்த செல்வந்தர்கள் தமது கீழ்தரமான பிற்போக்குவாத நடவடிக்கைகளைச் செய்வது ''தேசிய கலாசாரம்'' என்ற சுலோகத்தின் பின்னுல் மறைந்து கொள்வதனுலாகும்.

மார்க்ஸீய கண்ணோட்ட மெனப்படும் வர்க்கப் போராட்டம் சம்பந்தமான அடிப்படையில் நோக்கும் போதும், அர்த்தமற்ற பொதுக் கொள்கைகள், வியர்த்தமான உச்சாடனங்கள், சொற்றொடர்கள் என்பவற்றோடன்றி வர்க்க நலன்கள், கொள்கைகள் என்பனவற்றோடு ஒப்பிட்டுப் பார்க்குமிடத்தும், தேசிய எழுச்சி பற்றிய உண்மை நிலையைக் காணலாம்.

## அரசகரும மொழி?

பாடசாலைகளிலும் பல்கலைக் கழகங்களிலும் கல்வியூட்டும் மொழியாகவும் போதனு மொழியாகவும் தாய் மொழியை உபயோகிக்கும் உரிமையை ஏற்றுக் கொள்ளுகின்ற மிதவாத முதலாளிகள் தீவிர இனவாதிகளிலிருந்து வேறுபடுகின்றனர். ஆனல் கட்டாய அரசாங்க மொழியொன்று அவசியமென்ற விடயத்தில் அவர்கள் பிற்போக்கு வாதிகளோடு முற்றுக ஒன்றிணைந்துள்ளார்கள். கட்டாய அரசாங்க மொழி என்பதன் கருத்தென்ன? விவாதத்துக்காக என்ன கருத்துக் கூறப்பட்டாலும், நடைமுறையில் அதன் கருத்து ஜனத் தொகையின் ஒரு பகுதியினரின் (பெரும் பான்மையின்) மொழியை எஞ்சிய மக்கட் பிரிவினர் அனைவரின் மீதும் (சிறு பான்மையின்) பலாத்காரமாகத் திணிப்பதல்லவா? எல்லாப் பாடசாலைகளிலும், அரசாங்க மொழியைக் கட்டாயமாகக் கற்பிக்க வேண்டுமென்பதல்லவா? "கலாசாரத்தின்" நலன் கருதியும், "ஐக்கியமான பிளவுபடாத" இலங்கையொன்றின் நலன் கருதியும் சிங்கள மொழியைக் கட்டாய அரசாங்க மொழியாக்க வேண்டுமென முதலாளி வர்க்கம் கூறுகின்றது. எந்த வகையான பாரபட்சமுமின்றி இலங்கையில் வாழ்கின்ற சகல இனங்களையும் சேர்ந்த நசுக்கப்பட்ட வர்க்கங்களிடையே இயன்றளவு நெருக்கமான தொடர்பையும், சகோதரத்துவமான ஐக்கியத்தையும் நிலைநாட்ட மற்றெல்லாரையும்விட பொல்ஷேவிக் வாதிகளான நாம் அதிக

மாக விரும்புகின்றோம். இலங்கையில் வாழ்கின்ற ஒவ்வொரு பிரஜைக்கும் சிங்கள மொழியைக் கற்றுக்கொள்ளும் வாய்ப்பையும் வசதிகளையும் செய்து கொடுப்பதை நாம் ஆதரிக்கின்றோம். ஆனால் எமக்குத் தேவையற்றதும் எமது எதிர்ப்புக்கு இலக்காவதும் அதில் அடங்கியுள்ள அடக்குமுறையின் அடிப்படையே. சிங்களம் மட்டும் மசோதாவினால், ஏராளமான தமிழ் பேசும் அரச ஊழியர்கள் தமது பதவி உயர்வுகளைப் பெறுவதற்காகச் சிங்கள மொழியைக் கற்றுக்கொள்ளுமாறு கட்டாயப்படுத்தப்பட்டுள்ளார்கள். இதனால் அவர்கள் பதவி உயர்வு பெறமுடியாமற் போய்விட்டது. இது அடக்குமுறையல்லவா? ''கையிற் சவுக்கைப் பிடித்துக் கொண்டு மக்களைச் சுவர்க்கத்துக்கு இட்டுச் செல்லும்'' அவசியம் எமக்கில்லை. ஏனெனில் ''கலாசாரம்'' பற்றி எவ்வளவு அழகான வார்த்தைகளை அள்ளிக் கொட்டினாலும், கட்டாய அரசாங்க மொழியால், அடக்குமுறை எனப்படும் சவுக்கு (கசை) பிரயோகிக்கப்படுவதனாலாகும். 'மகத்துவமும் செல்வாக்கும் மிக்க சிங்கள மொழியை' ஒருவருடைய நிர்ப்பந்தத்தின் மூலமாகத்தான் மற்றொருவர் கற்க வேண்டுமென நாம் கருதுவதில்லை. முதலாளித்துவ சமுதாய அமைப்பின் அபிவிருத்தியும், பொதுவாக எடுத்துக்கொண்டால், சமூக எழுச்சியின் பாதை முழுவதும் சகல இனங்களிடையிலும் நெருக்கமான உறவை ஏற்படுத்தவே முனைகின்றதென்பது எமது ஊகமாகும். இலங்கையின் ஒரு முனையான தெவிநுவரையிலிருந்து மறுமுனையான பருத்தித்துறை வரை பல்லாயிரக்கணக்கான மக்கள் அங்குமிங்கும் பிரயாணம் செய்கின்றனர். சனத்தொகையின் பல்வேறு இன மக்கட் பிரிவினர் கலந்த வண்ணமிருக்கின்றார்கள். தனிமையுணர்வும் பாரம்பரிய மரபுகளும் மறைந்து வருகின்றன. அவை மறையவும் வேண்டும். அன்றாட அலுவல்களுக்கும், வாழ்க்கை நிலைமைகளுக்கும் ஏற்ப சிங்கள மொழியைக் கற்றுக்கொள்ளும் அவசியம் யாருக்கு ஏற்படுகிறதோ அவர்கள் அதனை எவ்வித நிர்ப்பந்தமும் இன்றியே கற்றுக்கொள்வார்கள். அடக்குமுறை எனும் சவுக்கினால் ஒரே ஒரு விளைவுதான் ஏற்படும்.

அந்த விளைவு 'மகத்துவமும் செல்வாக்கும் மிக்க சிங்கள மொழி' நாட்டின் ஏனைய மக்களிடையே பரவுவது அந்த அடக்குமுறையால் மாத்திரமே! அதற்கும் மேலாக அவ் வடக்கு முறையானது இனப்பகைமையைக் கூர்மையாக்கி, புதுவகையான பூசல்களை ஆயிரக்கணக்கில் தோற்றுவித்து இனக் குரோதங்களையும் தப்பபிப்பிராயங்களையும் அதிகரிக்கச் செய்துவிடும்.

இத்தகைய பகைமையை வளர்த்துவிடுவது யாருக்கு அவசியம்? இலங்கைவாழ் உழைக்கும் மக்களுக்கு அது அவசியமில்லை. இலங்கைவாழ் ஜனநாயக வாதிகளுக்கும் அது அவசியமில்லை. ''சிங்கள கலாசாரத்தினதும் அரசுரிமையினதும் நலன்'' கருதியும்கூட அவர்கள் எவ்விதமான அடக்குமுறையையும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். இதனாலேயே, கட்டாய அரசாங்க மொழியொன்று அவசியமில்லை; உழைக்கும் மக்களுக்குச் சகல பிராந்திய மொழிகளிலும் கற்பிக்கும் பாடசாலைகளை அமைத்துக் கொடுக்க வேண்டும்; யாதாயினும் ஓரினத்துக்கு உரிமையாக்கப்பட்டுள்ள சகல சலுகைகளையும் ரத்துச் செய்ய வேண்டும்; தேசிய சிறுபான்மைகளின் (சிறுபான்மை இனத்தவர்களின்) உரிமைகள் எவ்வகையிலும் மீறப்பட்டிருப்பின் அத்தகைய மீறல்கள் அனைத்தையும் ரத்துச் செய்ய வேண்டும்; என்பனவற்றைப் பிரகடனப்படுத்துகின்ற அடிப்படைக் கொள்கையொன்றை அரசியலமைப்புச் சட்டத்திற் சேர்த்துக்கொள்ள வேண்டுமென இலங்கைவாழ் பொல்ஷேவிக் வாதிகளான நாம் கூறுகின்றோம்.

## தேசிய கலாசாரமும், சர்வதேசிய கலாசாரமும்.

தேசிய கலாசாரம் பற்றிய சுலோகமானது ஒரு முதலாளித்துவ ஏமாற்று வித்தையாகும். உழைக்கும் மக்களை

வஞ்சிக்கும் கூற்றுகும். உழைக்கும் மக்களை மென்ஷேவிக் சகதியில் மூழ்கடிப்பதாகும். பொல்ஷேவிக் வாதிகளான எம்மு சுலோகமோ ஜனநாயகத்தினதும் உலகத் தொழிலாளர் வர்க்க இயக்கங்களினதும் சர்வதேச கலாசாரம் என்பதாகும். எனினும் சர்வதேச கலாசாரமென்பது தேசிய இயல்பற்ற தல்லவென்பது உண்மை. ஒருவரும் அவ்வாறு கூறுவது மில்லை. யாராயினும் ஒருவர் 'தூய்மையான' கலாசாரம் பற்றி வாதாடுவதில்லை. இதற்கு மாறாகக் கூறுபவர் யாரா யினும் இருப்பின் அவர் பெரும்பாலும் வாசகரின் கவனத் தைத் தம்மால் ஈர்த்து, வார்த்தைகளைத் திரித்து விளை யாட்டுக் காட்டிப் பிரச்சினையை இருட்டடிப்புச் செய்ய எத் தனிப்பவராகவே இருக்கும். ஜனநாயக, சோஷலிஸ கோட் பாடுகள் கட்டாயமாக விதித்துள்ள நிபந்தனைகளை ஏற்றுக் கொள்பவர்களும், சிரமத்தைத் தாரை வார்த்துச் சுரண்ட லுக்குப் பலியாகுபவர்களுமான தொழிலாளர் வர்க்கமும் உழைக்கும் பொது மக்களும் சகல இனங்களிலும் இருக்கின் றார்கள். எனவே, எல்லாத் தேசிய கலாசாரங்களிலும் ஆரம்ப வடிவத்திலாயினும் ஜனநாயக சோஷலிஸ கலாசாரங் களின் அடிப்படை அம்சங்கள் காணப்படுகின்றன. எனினும், அவற்றோடு, வெறும் 'அடிப்படை அம்சங்களாக' மாத்திர மன்றி, ஆதிக்கம் செலுத்துகின்ற கலாசாரத்தின் வடிவத்தில் முதலாளித்துவ கலாசாரமொன்றும் எல்லா இனங்களினதும் சொத்தாகவுள்ளது. அநேக கலாசாரமும் உண்டு. எனவே, பொதுவாகத் ''தேசிய கலாசாரம்'' எனப்படுவது, நிலப் பிரபுக்களினதும், மத குருமார்களினதும், பணக்கார வர்க்கத் தினதும் கலரசாரமன்றி வேறொன்றல்ல. மார்க்ஸீய வாதி களுக்கு அடிப்படையானதும் முதன்மையானதுமான அம்சம் சந்தர்ப்ப வாதிகளினதும் மென்ஷேவிக் வாதிகளினதும் வார்த்தை ஜாலங்களுக்குள் ஒழித்து வைக்கப்பட்டுள்ளது. பாட்டாளி வர்க்கம் உட்பட உழைக்கும் மக்களுக்கு வர்க்க இடைவெளி பற்றியும் வர்க்கபேசம் பற்றியும் தெளிவுபடுத்து வதற்குப் பதிலாகச் சந்தர்ப்பவாதிகள் அவர்களை மென் மேலும் இருளில் மூழ்கடித்துள்ளார்கள். உண்மை நிலையை

எடுத்துக் கொள்வோமாயின், சந்தர்ப்பவாத மென்ஷேவிக் வாதிகள், தமக்கிருக்கும் சகல வரப்பிரசாதங்களையும் வர்க்க நலன்களையும் பயன்படுத்தி வர்க்க ரீதியற்ற, வர்க்கங்களுக்கு மேலான தேசிய கலாசாரத்தின் மீதுள்ள பற்றினைப் பிரபல்யப்படுத்தும் அவாவுள்ள, செல்வந்தர்களைப் போல் செயற்பட்டுள்ளார்கள்.

ஜனநாயகத்தினதும் உலகத் தொழிலாளர் வர்க்க இயக்கத்தினதும் சர்வதேச கலாசாரம் பற்றிய சுலோகத்தை முன் வைக்கையில், நாம் ஒவ்வொரு தேசிய கலாசாரத்திலிருந்தும் அவற்றின் ஜனநாயக, சோஷலிஸ அடிப்படைகளை மாத்திரம் தேர்ந்தெடுத்துக் கொள்கின்றோம். நாம் எடுத்துக்கொள்வது, ஒவ்வோர் இனத்தின் பணக்காரக் கலாசாரத்துக்கும், முதலாளித்துவ இனவாதத்துக்கும் முற்றிலும் முரண்பட்டவையான, அவ்வக் கலாசாரங்களின் ஜனநாயக, சோஷலிஸ அடிப்படைகளை மாத்திரமே. சகல மொழிகளுக்கும் சம அந்தஸ்து இருக்க வேண்டுமென்பதையும், ஒருவருக்குத் தமது தாய் மொழி மூலம் தமது 'தாய்' முதலாளித்துவ வர்க்கத் தோடு வாதாடவும், தமது 'தாய்' விவசாய சமூகத்திலும், சிறு முதலாளித்துவ வர்க்கத்திலும் பிரபுத்துவ விரோத, மதச் சார்பான இறையடிமைத்துவத்துக்கு விரோத, கருத்துக்களை வெளியிடவும் உரிமை இருக்க வேண்டுமென்பதையும் எந்த ஒரு ஜனநாயகவாதியும் மறுக்க முடியாது; நிச்சயமாக எந்தவொரு மார்க்ஸீயவாதியும் இதனை மறுக்கமுடியாது. விவாதத்துக்குட்பட்டுள்ள உண்மையான பிரச்சினையை இருட்டடிப்புச் செய்வதற்காக, விவாதிக்கத் தேவையற்ற இந்த உண்மையைச் சந்தர்ப்பவாதிகள் பயன்படுத்திக்கொண்டுள்ளார்கள். நேரடியாகவோ, சுற்றி வளைத்தோ தேசிய கலாசாரம் எனப்படும் சுலோகத்தை வெளியிடுவதற்கு ஒரு மார்க்ஸீயவாதியை அனுமதிக்க முடியுமா? அல்லது, சகல தேசிய, இன லட்சணங்களிலிருந்தும் தாமாகவே 'விடுபட்டு' தொழிலாளர்களின் சர்வ தேசியமென்ற சுலோகத்தைச் சகல மொழிகளிலும் வெளியிட்டு அதனை எதிர்க்க வேண்டுமா என்பதே கேள்வி!

நசுக்கப்பட்ட சிறுபான்மை இனமான தமிழ் பேசும் மக்களுக்கும் இது அவ்வாறே பொருந்தும். தமிழினத்தின் கலாசாரம் என்பது முதலாளி வர்க்கத்தின் சுலோகமாகும்; அது பாட்டாளி வர்க்கத்தின் வர்க்க விரோதிகளின் சுலோக மாகும். எனினும் குறிப்பாகத் தமிழ்க் கலாசாரத்திலும் பொதுவாகத் தமிழர் வரலாற்றிலும் முக்கியமான அடிப்படை அம்சங்கள் காணப்படுகின்றன. தமிழர்களின் ''தேசிய கலாசாரம்'' பற்றிய சுலோகத்தை நேரடியாகவோ சுற்றி வளைத்தோ வெளியிடுபவர் யாராயிருப்பினும், அவருடைய நல்லெண்ணம் எதுவாகவிருப்பினும் அவர் பாட்டாளி வர்க் கத்தின் எதிரியேயாவார்; தமிழ் மக்களிடையே நிலவும் குல பேதம் தொடர்பான காலங் கடந்த அம்சங்கள் அனைத்தின தும் ஆதரவாளராவார்; முதலாளி வர்க்கத்தின் உதவியாள ராவார். மறுபுறத்தில், மார்க்ஸீய இயக்கத்திலிருக்கும் சிங்களவர் உட்பட ஏனைய இனத்தைச் சேர்ந்த தொழிலாளர் களோடு ஒன்று சேரும் தமிழ் மார்க்ஸீய வாதிகள் தொழி லாளர் வர்க்க இயக்கத்தின் சர்வதேச கலாசாரத்தை உருவாக்குவதில் அவர்களது பங்கை நிறைவேற்றுகின்றார்கள். பலதரப்பட்ட கருத்து வேற்றுமைகள் நிலவியபோதும், ''தேசிய காலாசாரம்'' என்ற சுலோகத்தை எதிர்த்துப் போராடும் அவர்கள் தமிழ்ப் பாட்டாளி வர்க்கத்தின் சிறந்த சம்பிரதாயங்களை மிக உயர்வாகப் போற்றி வருகின்றார்கள்.

அடக்கியாளும் சிங்களவர் மீது கொண்ட பகைமை காரணமாகச் சிங்களம் பேசும் தொழிலாளர்களின் பாட்டாளி வர்க்கக் கலாசாரத்துக்கும் இலட்சியங்களுக்கும் மிகச் சொற்ப அளவிலாவது பகைமை பாராட்டிக் கொண்டு தனக்கெனத் தனிவழி அமைத்துக் கொள்ளும் ஒரு தமிழ்ப் பேசும் மார்க்ஸீயவாதி இருப்பானுயின் அவன் முதலாளித் துவ இனவாதச் சகதியில் மூழ்கடிக்கப்பட்டுவிடுவான். அவ் வாறே, தமிழ் பேசும் மக்கள் ஏனைய இனத்தவர்களோடு பூரண சமத்துவத்தோடு வாழ்வதற்காக விடுக்கும் கோரிக் கையை அல்லது சுயாதீனமான ஓர் அரசை நிறுவிக்கொள்ள அவர்களுக்கிருக்கும் உரிமையை மறுக்கின்ற ஒரு சிங்கள

மார்க்ஸீய்வாதி இருப்பின் அவன் முதலாளித்துவத்தில் மாத்திரமன்றி எல்லையற்ற இனவாதச் சகதியிலே மூழ்கடிக்கப் படுவான். தமிழ், சிங்களம் ஆகிய மொழிகளைப் பேசும் தொழிலாளர்கள் ஒரே அரசின் கீழ் வாழ்கின்ற வரை, பிரச்சார நடவடிக்கைகளுக்கான மொழி பற்றிய பிரச்சினை யில், மிக நெருக்கமான இயக்க ரீதியான ஒற்றுமையுடனும், கருத்தொருமைப்பாட்டுடனும், பாட்டாளி வர்க்கத்தின் பொதுவான கலாசாரத்தை அல்லது சர்வதேச கலாசாரத்தை நோக்கிச் செயற்பட வேண்டும். மார்க்ஸீய வாதிகளின் அவசியமான வேண்டுகோள் இதுவாகும். ஓரினத்தைச் சேர்ந்த தொழிலாளர்களை மற்றோரினத்தைச் சேர்ந்த தொழி லாளர்களிலிருந்து பிரிப்பதற்கான சகல கருத்துரைகளும் மார்க்ஸீய 'ஒருமைப்பாட்டுக்கு' எதிராக விடுக்கப்படும் சகல கண்டனங்களும், பொதுவாக ஓரினக் கலாசாரத்தின் மீது ஒன்றிணைந்ததாகக் கூறப்படும் மற்றொரு கலாசாரத் தைத் திணித்தலும் முதலாளித்துவ இனவாதமாகும் அதனைப் பிரிவின்றி எதிர்த்து இடைவெளிச் சமாதானமற்ற ஒரு போராட்டத்தை ஊக்குவித்தல் அவசியமாகிறது.

''தேசிய கலாசாரம்'' எனப்படும் சுலோகம் சம்பந்த மான பிரச்சினை மார்க்ஸீய வாதிகளுக்கு அதி முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கின்றது. ஏனெனில், முதலாளித்துவப் பிரச்சார நடவடிக்கைகளுக் கெதிராக, தேசியப் பிரச்சினை பற்றி நாம் மேற்கொள்ளும் பிரச்சார நடவடிக்கைகளுக்கும் ஆர்ப்பாட்டங்களுக்கும் சகல அம்சங்களிலுமான கொள்கை வாத அடிப்படையை அது நிர்ணயிப்பதால் மாத்திரமன்றி, கலாசார - தேசிய இறைமை தொடர்பான முழு வேலைத் திட்டத்திலுள்ள பிரதான குறைபாடு யாதெனில் அது மிகத் தூய்மையான, மிகவும் திட்டவட்டமான, மிகக் கூர்மையான இனவாதத்தை அறிமுகஞ் செய்வதில் முன்நிற்பதாகும். அவ்வேலைத் திட்டத்தின் அடித்தளமாக அமையும் நடவடிக் கைகளான, ஒவ்வொரு பிரஜையும் ஒரு விசேட இனத்தைச் சேர்ந்தவர்களெனப் பதிவு செய்து கொள்ளல், ஒவ்வோர் இனத்துக்கும் தமது அங்கத்தவர்மீது கட்டாய வரி விதிக்கும்

உரிமையிருத்தல், தேசியப் பாராளுமன்றம் தேசிய அமைச்சர்கள் என்பனவற்றை உள்ளடக்கிய ஓர் நியாயவாதத்தை ஸ்தாபித்தல் என்பனவாகும்.

கலாசார - தேசிய இறைமையின் கொள்கைவாத அடித்தளமாகவும் அமைவது "நியாயமானதென" வரையறுக்கப்பட்ட தொகுதிக்குள் இனவாதத்தை ஸ்தாபனப்படுத்துதல், "இனவாதத்தைச் சட்டபூர்வமாக்கல்", ஒரு விசேட அரசாங்கப் பொறியினுல் சகல இனங்களையும் பிரித்து வைப்பதைப் பாதுகாத்தல் என்பனவாகும். இந்த எண்ணக் கருத்து முற்றிலும் இனவாதமானது, முற்றிலும் நேர்மையீனமான இனவாதத்துக்கு அர்ப்பணமாகும். எதற்கும் ஆதரவு காட்டவோ ஆதரவு கொடுக்கவோ பாட்டாளி வர்க்கத்துக்கு முடியாது. அதற்கு அடியோடு மாறுபட்ட முறையில், இனவேற்றுமைகளை அழித்தொழிக்கின்ற, தேசிய தடைக்கற்களை அகற்றிவிடுகின்ற பணிகளுக்கு உதவக்கூடிய சகல காரியங்களுக்கும் பாட்டாளி வர்க்கம் தனது ஒத்துழைப்பை நல்கும். இனங்களுக்கிடையில் நிலவும் பிணைப்பை மிக நெருக்கமாக்கின்ற அல்லது இனங்களை ஒன்றிணைப்பதற்குச் சார்பாகவுள்ள அனைத்துக்கும் பாட்டாளி வர்க்கம் ஒத்துழைப்பு நல்கும். இதற்கு மாற்றமான முறையிலோ செயற்படுவது, பிற்போக்குவாத பிலிஸ்டைனிய இனவாதத்தின் பக்கமாகச் சார்வதன்றி வேறெதுவாகவும் கருதப்படமாட்டாது.

பல்வேறு முதலாளித்துவக் கம்பனிகள், திட்டங்கள், குழு முறையிலான ஸ்தாபனங்கள், பல இனங்கள் சேர்ந்த நிறுவனங்கள் என்பனவற்றின் நிர்வாகக் குழுக்களிலும், பணிப்பாளர் குழுக்களிலும் பல்வேறு இனங்களைச் சேர்ந்த முதலாளிமார்கள் முற்றிலும் அனுகூலமாகவும், கருத்தொருமைப்பாட்டுடனும் ஒன்ருக வீற்றிருக்கின்றனர். அவர்கள் ஒன்றுகவே நிர்வாகம் செய்து, கட்டளைகள் பிறப்பித்து, கூட்டுறவோடு தொழிலாளர் வர்க்கத்தைச் சுரண்டும் வெவ்வேறு வழிவகைகளைத் தயாரிப்பதைக் காணலாம். கடந்து

சென்ற முப்பது வருடங்களுக்குச் சற்று அதிகமான கால இடைவெளிக்குள், செல்வநாயகம், பொன்னம்பலம், அஸீஸ், தொண்டமான் போன்றவர்கள் தமிழ் பேசும் மக்கட் பிரிவினர், நீதியான - நியாயபூர்வமான உரிமைகளையும் கோரிக்கைகளையும் வென்றெடுப்பதற்காக நடாத்தும் போராட்டத்தைப் பயன்படுத்திக் கொண்டும் எத்தனை தடவைகள் ஐ. தே. க., ஸ்ரீ ல. சு. க. ஆகிய கட்சிகளோடு கூட்டுச் சேர்ந்தார்கள்? சிங்களம், தமிழ் பேசுகின்ற தொழிலாளர்கள் உட்பட உழைக்கும் மக்களை அடக்கியாள்வதற்கு எத்தனை முறை அவர்களோடு ஒத்துழைத்தார்கள்? பிரஜாவுரிமைச் சட்டத்தின் மூலம் தோட்டத் தொழிலாளர்களின் வாக்குரிமையைப் பறித்துக் கொள்ள அத்தலைவர்கள் சிங்கள முதலாளிமார்களுக்கு ஆதரவு கொடுக்கவில்லையா? பண்டாரநாயக்க - செல்வநாயகம் ஒப்பந்தத்தின் மூலம் தமிழ் மொழிக்கு ''நியாயமான அந்தஸ்து'' வழங்கும் விதிகளையும் கட்டளைகளையும் அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லையா? சிங்களவர், தமிழர் தொழிலாளர்களின் மீதும் உழைக்கும் மக்களின் மீதும் வேலையில்லாப் பிரச்சினை, வரிச்சுமை, விலைவாசி ஏற்றம், மனித, ஜனநாயக உரிமைகள் மீதான கட்டுப்பாடு, பொலிஸ், முப்படைகள் என்பவற்றை ஏவி விட்டு சகல நசுக்கப்பட்ட மக்கள் மீதும் அடக்குமுறையைப் பிரயோகித்தல், ''பொது மக்கள் பாதுகாப்பு'' மசோதாவினால் அடக்குமுறையைப் பிரயோகித்தல் முதலிய நடவடிக்கைகளில் முதலாளித்துவ தமிழ்த் தலைவர்கள் முதலாளித்துவ சிங்களத் தலைவர்களுக்கு அங்கீகாரத்தையும் ஒத்துழைப்பையும் வழங்கவில்லையா? இதற்கிடையில், வெவ்வேறு இனங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் தொழிற்சாலைகளிலும் பிற வேலைத் தளங்களிலும் ஒன்றாக வேலை செய்கின்றார்கள். சுரண்டலுக்கும் அடக்குமுறைக்கும் எதிரான போராட்டத்தில் அவர்கள் ஒன்றாகவே செயற்படுகின்றார்கள். ஒருமித்தே போராடுகின்றார்கள். உண்மையாக யாதாயினுமொரு தீவிரமான ஆழமான அரசியற் பிரச்சினையின் போது அவர்கள் சாரும் பக்கம் இன அடிப்படையிலன்றி வர்க்க அடிப்படையிலேயே தெரிவு செய்யப்படுகின்றது.

# 'கலாசார — தேசிய இறைமை'

இனங்களுக்கும் மொழிகளுக்கும் பரிபூரண சமத்துவத்தைப் பிரகடனம் செய்வதன் மூலம், எல்லா இனங்களையும் சேர்ந்த உறுதிகுலையாத ஜனநாயக வாதிகளான முதலாளித்துவ விரோத வர்க்கத்தினரை வேறுபடுத்தி. அவர்களை இன வாதியாகவன்றி ஒரு முழுமையான சமூக அமைப்பாக முன்னேற்றுவதற்கான, ஆழ்ந்த, நேர்மையான அபிலாசையுடனேயே ஒற்றுமைப்படுத்தப்படும். குறிப்பிட்ட சில நபர்களிடத்திலும் குழுக்களிடத்திலும் அர்த்தமற்ற நோக்கங்கள் இருப்பினும், ''கலாசார - தேசிய இறைமையைப்'' பிரகடனப்படுத்துவதன் மூலம் பூரணமான இன, மொழிச் சமத்துவத்தை வெளியிடுவதற்கு முற்றிலும் மாறுபட்ட முறையில், இனங்களை வேறுபடுத்தி, ஒரு குறிப்பிட்ட இனத்தைச சேர்ந்த தொழிலாளர் வர்க்கத்தையும் முதலாளி வர்க்கத்தையும் உண்மையாகவே கூடிய நெருக்கமுடையவர்களாக்கப்படும்.

எனினும், நடைமுறையில், இனங்களின் சமத்துவத்துக்காக விடுக்கப்படும் கோரிக்கையை முதலாளி வர்க்கம் தேசிய தனித்துவமாகவும் தீவிர இனவாதமாகவுமே நோட்டமிடுகின்றது. இதற்கு அவர்கள் இனப் பிரிவினையையும் இனப் பூசல்களையும் சேர்த்துக் கொள்கின்றார்கள். இனங்களின் சமத்துவம் என்பதை அவர்கள் இனங்கள் தமது தனித்துவத்தைப் பேணிக் கொள்வதற்காக அவர்களுக்கிருக்கும் உரிமை எனவும், இனங்கள் பிரிந்து வேறாகித் தனித்து வாழ்வதற்கான உரிமை எனவும் கருதுகின்றார்கள். இனங்களுக்கிடையே மிக நெருக்கமான உறவை மாத்திரமின்றி, ஐக்கிய பாட்டாளி வர்க்க அழைப்புக்குள், குறிப்பிட்ட ஓர் அரசின் கீழுள்ள சகல இனங்களையும் சேர்ந்த தொழிலாளர்களை ஒன்றிணைப்பதைப் பிரகடனம் செய்யும் பாட்டாளி வர்க்கச் சர்வ தேசியத்தோடு மேற்படி விளக்கத்தை எவ்வகையிலும் ஒப்பிட முடியாது. எதேச்சையான ''கலாசார -

தேசிய இறைமை'' என்ற திட்டத்தினால் கருதப்படுவது, ''தேசிய கலாசாரம்'' என்ற பிரச்சினையில், வெவ்வேறு இனங்களுக்கான தனித்தனி ஆட்சி மன்றங்கள், கல்வி முறைகள், வரவு செலவுத் திட்டங்கள், கல்வி வட்டாரங்கள், கல்வி நிலையங்கள் என்பன இயங்குகின்ற குறிப்பிட்ட ஒரு சம்மேளனத்துக்குள் (Federation) மக்களை இனவாரியாக வேறுபடுத்தி வைப்பதாகும். கல்வி நடவடிக்கைகளை அரசின் பிடியிலிருந்து விடுவித்து அவற்றை அந்தந்த இனங்களிடமே ஒப்படைத்தல் எனப்படும் எதேச்சையான ''கலாசார - தேசிய இறைமை'' மார்க்ஸீய - லெனினிஸ வாதிகள் திட்ட வட்டமாகப் பகிஷ்கரிப்பது இக்காரணத்தினாலேயாகும்.

இது, தொழிலாளர் வர்க்கத்தைக் கூறுபோட்டு அவர்களிடையே ஊழலை ஏற்படுத்தக் கூடிய தூய இனவாதத் திட்டமாகும். பல்வேறு சிறு முதலாளித்துவக் குழுக்களிடையே, மேற்படி திட்டத்துக்குப் பதிலாக, மொழிகளினதும் இனங்களினதும் பரிபூரண சமத்துவம் பற்றிய கொள்கையை முன்வைக்கும் மார்க்ஸீய - லெனினிஸ வாதிகள், அரசாங்க மொழியொன்றின் அவசியத்தையே நிராகரிக்குமளவுக்குச் சென்றுவிடுகின்றார்கள். இதனோடு, அவர்கள் இனங்களுக்கிடையே இயன்றளவு நெருக்கமான உறவு, சகல இனங்களுக்கும் ஒரே சீரான அரச நிறுவனங்கள், ஒரே சீரான பாடசாலைத் தொகுதிகள், ஒரே சீரான கல்விக் கொள்கை என்பனவற்றை முன்வைக்கின்றனர். மேலும், ''தேசிய கலாசாரம்'' என்ற சுலோகத்தின் வடிவில் அப்பாவிகளை ஏமாற்றுவதற்காக விடுக்கப்படும் இனவாதமான சகல இன முதலாளி வர்க்கப் பிரிவினருடைய இனவாதத்துக்கும் எதிராகக் கிளர்ச்சி செய்யும்போது எல்லா இனத்தையும் சேர்ந்த தொழிலாளர்களின் ஐக்கியத்தையும் அவர்கள் வலியுறுத்துகின்றார்கள்.

மார்க்ஸீய - லெனினிஸ வாதிகள் பாடசாலைகளிற் தாய் மொழியையே கல்வியூட்டும் மொழியாகப் பயன்படுத்துகின்ற உரிமையை ஏற்றுக்கொள்வதோடு, அவ்வுரிமையை மற்றெல்

லோரையும்விடத் திட்டவட்டமாகவே அதனை அங்கீகரிக்கின்றார்கள். கட்டாய அரசாங்க மொழியொன்று அவசியமற்றதெனக் கூறும் மார்க்ஸீயவாதிகள் தாய் மொழியை உபயோகிக்கும் உரிமையை மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்கின்றனர். 'தனி அரசொன்றின் கீழ் கல்வி நடவடிக்கைகளை இனவாரியாகப் பிரித்து வைத்தல்'', ''கலாசார - தேசிய இறைமை'', ''கல்வி நடவடிக்கைகளை அரசின் கையிலிருந்து விடுத்தல்'' என்பனவற்றோடு தாய் மொழி மூலம் கல்வியூட்டுதல் என்பதைக் குழப்பிக் கொண்டிருப்பது, வர்க்க மதிநுட்ப குறைபாடும், வர்க்க அறிவின்மையும் தவிர வேறொன்றுமல்ல. மார்க்ஸீய - லெனினிஸ வாதிகள் மட்டுமன்றி, ஜனநாயகவாதிகளும் தாய் மொழி மூலம் கல்வி புகட்டுவதை உலகத்தில் எங்காவது எதிர்த்ததாக இல்லை. அவ்வாறே, உலகத்தில் எங்காவது மார்க்ஸீய வாதிகள் ''கலாசார - தேசிய இறைமை'' என்ற திட்டத்தை அங்கீகரித்ததாகவும் இல்லை.

## புள்ளி அடிப்படையில் தரப்படுத்தல்

க. பொ. த. உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகளை இனத்துவேஷ அடிப்படையிற் தரப்படுத்தி, அத்தரப்படுத்திய புள்ளிகளின் அடிப்படையிலே இலங்கைப் பல்கலைக் கழக வளாகங்களுக்கு மாணவர்கள் அனுமதிக்கப்பட்டனர். இதனால் தகுதி பெற்ற நூற்றுக்கணக்கான தமிழ் பேசும் மாணவர்கள் பல்கலைக் கழகக் கல்விபெறும் வாய்ப்பை இழந்தார்கள். ஓரினத்தின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டியது அவ்வினம் நாட்டின் ஜனத்தொகையின் என்ன விகிதத்தை ஆக்குகின்றதென்ற அடிப்படையிலல்ல. ஓரினம் நாட்டின் ஜனத்தொகையின் எத்தனை சதவீதமாக இருந்தாலும் எல்லா இனங்களுக்கும் சமமான சலுகைகளும், சமமான உரிமைகளும், சம அந்தஸ்தும் இருக்க வேண்டும். போதனு மொழி சிங்களமா, தமிழா என்ற அடிப்படையில் பல்கலைக் கழகப்

பிரவேச உரிமையை வரையறுத்தல், தமிழ் பேசும் மாணவர்களுக்கும் தமிழ் மொழி மூலம் கல்வி கற்ற மாணவர்களுக்கும் தேசிய ரீதியாகக் காட்டப்படும் பாரபட்சமும் இழைக்கப்படும் அநீதியுமாகும். பல்கலைக் கழகத்திற் சேர்ந்துகொள்ள வேண்டிய திறமையான மாணவர்களுக்கு உயர்கல்விக்கான கதவு அடைக்கப்படுவது. தற்செயலாக அவர்களின் பெற்றோர்கள் தமிழ் பேசுபவர்களாக இருந்த "பாவத்திற்காகும்." அவ்வாறு பல்கலைக் கழகப் பிரவேசம் பெறாத மாணவர்களுக்கு வெளிநாடுகளிற் சென்ற கல்வி கற்கவும் அனுமதி கிடைக்கவில்லை. இது, தாய்மொழி மூலம் கல்வி கற்க ஒரு மாணவனுக்குள்ள உரிமை மீது பகிரங்கமாக விடுக்கப்படும் சவாலாகும். இத்தகைய பாரபட்சத்தை உடனடியாக ரத்து செய்யுமாறு மார்க்ஸீய - லெனினிஸ வாதிகள் கூறுகின்றார்கள். ஒருபுறம், தோட்டத் தொழிலாளரின் குழந்தைகளுக்குக் குறைந்த பட்ச உயர் கல்வியைப் பெறுவதற்கான வாய்ப்போ வசதிகளோ இல்லை. மறுபுறம், பிரதான நகரங்கள் தவிர்ந்த ஏனைய நகரங்களிலும் கிராமப் புறங்களிலும் வாழும் தொழிலாளர்களினதும் விவசாயிகளினதும் குழந்தைகளுக்கு விஞ்ஞானத் துறையில் உயர் கல்வி பெறுவதற்கான வாய்ப்போ வசதிகளோ இல்லை. எனவே, போதனு மொழி வாரியாகவோ, மாவட்ட ரீதியாகவோ தரப்படுத்துவதற்குப் பதிலாக எல்லா மக்கட் பிரிவினருக்கும் உயர் கல்வியைப் பெறுவதற்கான வாய்ப்புக்களையும் வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

தமிழர் விடுதலைக் கூட்டணியும் அது பிரதிநிதித்துவம் செய்கின்ற தமிழ் முதலாளி வர்க்கமும், தமிழர்கள் இன்று எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளுக்கான சிறந்த தீர்வு ஒரு தனி அரசை நிறுவுவதுதான் எனக் கூறுகின்றனர். பொதுப்படையாக நோக்குமிடத்து, நாட்டின் தமிழ் பேசும் தொழிலாளர் வர்க்கமும் ஏனைய உழைக்கும் மக்கட் பிரிவினரிற் பெரும் பகுதியும் அக்கோரிக்கைக்கு அங்கீகாரம் அளிக்கவில்லை யென்பது தேர்தல் முடிவுகளிலிருந்து தெளிவாகின்றது. இதுவரை ஆட்சி புரிந்துள்ள எல்லா முதலாளித்துவ

அரசுகளும், அதாவது சேனநாயக்கா அரசாங்கங்களும் பண்டாரநாயக்கா அரசாங்கங்களும், தமிழ் பேசும் மக்கட் பிரிவினரின் மொழியுரிமையையும் ஏனைய உரிமைகளையும் பறித்துக் கொண்டமையும் அவர்களுக்குப் பாரபட்சம் காட்டியிருப்பதும், அவர்கள் ஒரு நசுக்கப்பட்ட சிறுபான்மை யாக இருந்து வந்துள்ளமையும் உண்மையே. எனினும் ஒரு தனித் தமிழ் அரசைப் பெற்றுக் கொண்ட மாத்திரத்தில் அவர்கள் எதிர்நோக்கியுள்ள தேசிய, பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாது. வடக்கு கிழக்கு மாகாணங்களை வேறாக்கி அமைக்கும் உத்தேச தனி அரசில் தமிழ் மக்கள் குறைந்த பட்சம் இன்று அனுபவிக்கும் வாழ்க்கைத் தரத்தையாவது பேணிக் கொள்ளத் தேவை யான இயற்கை வளங்கள் இல்லை. இவ்வாறு நோக்கு மிடத்து, தனி நாடு பெற்றுக்கொள்வதற்காக மேற்கொள் ளும் முயற்சியானது, தமிழ் மக்கள் தற்போது எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளை மேலும் தீவிரமடையச் செய்வதற்கு வழிகோலும். உருவத்தில் எவ்வளவு வித்தியா சங்களிருப்பினும், முதலாளித்துவ கட்டுக்கோப்பில் இருக்கும் வரை அத்தகைய ஒரு தனி நாடு அதன் பொருளாதார அபி விருத்திக்கு ஏகாதிபத்திய முகாமில் தங்கியிருக்க நேரிடுவதிற் சந்தேகமில்லை. இதனால் அத்தனிநாடு தொடர்ந்தும் ஒரு நவ குடியேற்றவாத நாடாக இருக்க வேண்டும்; அல்லது நேரடியாகவே ஒரு ஏகாதிபத்திய நாட்டின் பூரண குடியேற்ற நாடாக மாற வேண்டியிருக்கும். நிலப்பரப்பு குறுகிவிடுவ தால் முதலாளித்துவ வளர்ச்சியும் குன்றிவிடும். கம்போடியா, வியட்நாம், லாவோஸ், ஆகிய நாடுகளிற் படுதோல்வி கண்ட ஏகாதிபத்தியவாதிகள் ஆசிய பிராந்தியத்தில் தமது ஆதிக் கத்தை வலுப்படுத்திக் கொள்ளப் பகீரதப் பிரயத்தனம் செய்துகொண்டுள்ள இக்காலக் கட்டத்தில் அவர்களுடைய தீவிரமான கவனம் பிரிவினைக்குட்பட்ட ஒரு தனித் தமிழ் நாட்டின் மீது ஈர்க்கப்படுமென்பதில் எவ்வித சந்தேகமு மில்லை. தமது வர்க்க நலன்களைப் பேணிக் கொள்வதற்காகச் சுதேச முதலாளி வர்க்கப் பிரிவினரை அரவணைத்துக்கொண்டு

அவர்களைக் கைப்பொம்மைகளாக்கிக் கொண்டுள்ள ஏகாதிபத்திய வாதிகளுக்குத் தமது குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்ள ஒரு தனித் தமிழ் இராச்சியத்தை இலகுவாகப் பயன்படுத்திக் கொள்ளலாம். அமைதியான முறையில் தனி நாடு பெற்றுக் கொள்ள முடியாமற் போகுமிடத்து, ஆயிரக் கணக்கான தமிழ் இளைஞர்களைக் கொண்ட ஒரு படையைத் திரட்டி, பிரித்தானியரிடமும் ஏனைய பொதுநலவரசு நாடுகளிடமும் இராணுவ உதவியைப் பெற்று, ஆயுதப் போராட்டமொன்றை நடாத்தவும் தாம் பின் நிற்பதில்லையெனத் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் அமிர்தலிங்கம் கூறியதாக அண்மையில் உசாவப்பட்டது. ஏகாதிபத்திய வாதிகளினதும் அவர்களின் அடிவருடிகளான சுதேச முதலாளி வர்க்கத்தினதும் தேவைக்கேற்றவாறு தமிழ் பேசும் மக்கட் பிரிவினரைக் காட்டிக் கொடுப்பதாகச் செயற்பட்டு வந்துள்ள தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமைப் பீடம் ஏகாதிபத்திய வாதிகளின் திட்டங்களை நிறைவேற்ற முற்படாதென யார்தான் கூறமுடியும்? வடக்கிலுள்ள மக்களை ''உயர் குலத்தோர்'' என்றும் ''இழி குலத்தோர்'' என்றும் கூறுபோட்டு, ''உயர் குலத்தோர்'' தவிர்த்த ஏனைய 'தாழ்த்தப்பட்ட குலத்தோரை'த் தீண்டத் தகாதவர்களாகவும், அவர்கள் ஆலயங்களுக்குட் பிரவேசிக்கக் கூடாதெனவும் கூறுகின்ற, அத்தகை பேதங்களை எதிர்த்துப் போராடுவதற்குப் பதிலாக அவற்றைப் பாராட்டிக்கொண்டிருக்க வழி வகுக்கின்ற, இந்த முதலாளித்துவ தலைமைப் பீடத்தின் கீழ் நிறுவப்படும் தனி அரசில் தமிழ் மக்களின் தலைவிதியைப் பற்றிக் கூறவும் வேண்டுமா?

## தேசிய இனங்களுக்குரிய சுயநிர்ணய உரிமை

இவ்வாறு கூறுவதைக் கொண்டு, பொல்ஷெவிக் வாதிகளான நாம் ஓரினத்தின் சுய நிர்ணய உரிமையை மறுப்ப

தாகக் கருத வேண்டியதில்லை. இனங்களின் சுயநிர்ணய உரிமை என்பதன் கருத்தென்ன? இது பற்றித் தோழர் லெனின் மிகத் தெளிவானதொரு விளக்கத்தை முன்வைத்துள்ளார். மார்க்ஸீய அடிப்படையிலிருந்து இப்பிரச்சினையை நோக்குமிடத்து, முதலாவதாக எழும் வினு "சுயநிர்ணயம் என்ற சொற்றொடரின் கருத்து யாது"? என்பதாகும். இதற்கு விடை காண வேண்டியது எல்லா வகையிலும் "பொது எண்ணக் கருத்துக்களால்" முடிவு செய்யப்பட்ட நியாயவாத விளக்கங்களின் மூலமாகவா அல்லது தேசிய இயக்கங்கள் பற்றிய வரலாற்றுப் பொருளியல் ஆய்வின் மூலமாகவா என்பதே அக்கேள்வியாகும்.

1896-ம் ஆண்டு லண்டன் சர்வதேச சம்மேளனத்திலும், 1903-ம் ஆண்டு ரஷ்ய வேலைத் திட்டத்திலும் இனங்களின் சுயநிர்ணய உரிமை பற்றி ஆராயப்பட்டது.

மானிய முறையின் தோல்வியோடு முதலாளித்துவம் உலகெங்கும் வெற்றிவாகை சூடிய காலகட்டம் தேசிய இயக்கங்களோடு தொடர்புற்றிருக்கின்றது. விற்பனைப் பொருள்களின் உற்பத்தியிற் பூரண வெற்றி காண்பதற்காக, முதலாளித்துவ வர்க்கம் சுதேச விற்பனைச் சந்தைகளைக் கைப்பற்ற வேண்டும்; ஒரே மொழியைப் பேசுகின்ற, அரசியல் ரீதியாக ஐக்கியமான மக்களாலான நிலப் பிரதேசங்கள் இருக்க வேண்டும்; அம்மொழியின் வளர்ச்சிக்கும், அது இலக்கியங்களில் வேரூன்றவும் என்னென்ன தடைகளிருக்கின்றனவோ அவை யாவும் நீக்கப்படவேண்டும் தேசிய இயக்கங்களின் பொருளாதார அடிப்படை இதில் தான் தங்கியுள்ளது. மனித உறவுகளை வைத்துக்கொள்வதற்கான மிக முக்கிய சாதனம் மொழியாகும். நவீன முதலாளித்துவத்தோடு நிகரான அளவுக்குப் பூரணமான சுதந்திரமடைந்ததும் விஸ்தீரணமடைந்ததுமான வர்த்தகத்துக்கும், பல்வேறு வர்க்கங்களுக்கிடையே சுதந்திரமாகவும் பரவலாகவும் குழுக்களாகப் பிரிந்து கொள்ளவும், இறுதியாக விற்பனைச் சந்தைக்கும் சகல சிறிய பெரிய சொத்துரிமையாளர்களுக்கிடையிலும், விற்பனையாளருக்கும் கொள்வனவு செய்வோருக்கும் இடையிலும் நெருக்கமான உறவை ஸ்தா

பிக்கவும் மிக முக்கியமான நிபந்தனைகளாக இருப்பவை மொழியின் வளர்ச்சியும் அதன் ஒருமையும் ஆகும். நவீன முதலாளித்துவத்தின் இத்தேவைகளை நன்முகப் பூர்த்தி செய்வதற்காகத் தேசிய அரசாங்கங்களை அமைப்பதே சகல தேசிய இயக்கங்களினதும் போக்காகவுள்ளது. இந்த இலக்கை நோக்கி ஆழமான பொருளியற் காரணிகள் இழை யோடிக் கொண்டிருக்கின்றமையினால், முதலாளித்துவ யுகத் தில் தேசிய அரசுகள் முழு நாகரீக உலகுக்கும் முன்மாதிரி யாகவும் பொதுவானதாகவும் அமையும். எனவே, இனங் களின் சுயநிர்ணய உரிமை பற்றி எண்ணக் கருத்தைக் கிரகிக்க வேண்டுமானால், நியாயவாத வரைவிலக்கணங்கள் பற்றிப் பொய்களை ஒப்புவிப்பதாலோ அல்லது அசாத்திய மான விளக்கங்களைக் 'கண்டு பிடித்தல்' மூலமாகவோ அன்றி, தேசிய இயக்கங்களின் வரலாற்றுப் பொருளியல் நிலைமைகளை அலசிப்பார்ப்பதன் மூலமே பின்வரும் முடிபுக்கு வரவேண்டும். அம்முடிபு யாதெனில், இனங்களின் சுய நிர்ணய உரிமை என்பதன் கருத்து, அவ்வினங்கள் தமக்கு எதிரான இனங்களின் நிறுவனங்களிலிருந்து அரசியல் ரீதி யாகப் பிரிந்து சுயாதீனமான ஒரு தேசிய அரசை நிறுவுதல் என்பதாகும்.

சுயநிர்ணய உரிமை எனப்படுவது ஒரு தனி அரசாக இயங்குவதற்கான உரிமையன்றி வேறு எதுவுமல்ல. தேசிய அரசு எனப்படுவது முதலாளித்துவ ஆட்சி முறையாகும். பெரும்பான்மை ஆட்சி அபிவிருத்தியின்மையைப் பிரதிபலிக் கும். இதற்கு மாறாக இருப்பது ஒரு புற நடையாகும். இனங்களுக்கிடையிலான உறவு பற்றிய கண்ணோட்டத்தில் நோக்குமிடத்து, ஒரு தேசிய அரசாங்கமே முதலாளித்துவத் தின் வளர்ச்சிக்கு வாய்ப்பான நிலைமைகளை உருவாக்குமென் பதிற் சந்தேகமில்லை. முதலாளித்துவ உறவுகளை அடிப் படையாகக் கொண்ட அத்தகைய ஓர் அரசாங்கத்தால் இனங்கள் சுரண்டப்படுவதையும், நசுக்கப்படுவதையும் அகற்றலாமென்பது இதன் கருத்தல்ல; இதன் கருத்து யாதெனில், தேசிய அரசாங்கங்களை நிறுவுவதற்கான தீவிர

மான அபிலாஷைகள் தோற்றுவிக்கும் வலுவான பொருளியற் காரணிகள் மார்க்ஸீய - லெனினிஸ வாதிகளின் பார்வையிலிருந்து தப்பிவிடுவதில்லை என்பதாகும். இதன் கருத்தாவது, வரலாற்றுப் பொருளியற் கண்ணோட்டத்தில் நோக்குமிடத்து, மார்க்ஸீய - லெனினிஸ வாதிகளின் வேலைத் திட்டத்தில் அடங்கியுள்ள ''சுயநிர்ணய உரிமை'' என்பதன் கருத்து, அரசியற் சுயநிர்ணயம், அரசாளும் சுதந்திரம், தேசிய அரசாங்கமொன்றை நிறுவுதல் என்பனவன்றி வேறு எதுவுமல்ல.

## வரலாற்று சார்புத்துவக் கொள்கை

மார்க்ஸீய - லெனினிஸ சித்தாந்தத்தின் மிக முக்கியமான தேவை யாதெனில், யாதாயினுமொரு சமூகப் பிரச்சினையை ஆராயும்போது வரலாற்றுச் சார்புத்துவக் கொள்கையைப் பிரயோகித்தலாகும். அதாவது, அப்பிரச்சினை ஒரு குறிப்பிட்ட வரலாற்று எல்லைக்குள், அப்பிரச்சினை எழுகின்ற வரலாற்று நிலைமைகளுக்குச் சார்பாக எடுத்து ஆராய வேண்டுமென்பதாகும்; அப்பிரச்சினை ஒரு குறிப்பிட் நாட்டோடு தொடர்புள்ளதாயின் அந்த நாடு அந்தக் குறிப்பிட்ட வரலாற்று யுகத்திலேயே ஏனைய நாடுகளிலிருந்து வேறுபட்டதாகத் தோற்றமளிக்கும் அதிவிசேட சிறப்பியல்புகளைக் கருத்திற்கொள்ள வேண்டுமென்பதாகும்.

மேற்படி சித்தாந்தத்தை நாம் தற்போது கலந்துரையாடும் தேசியப் பிரச்சினைக்குப் பிரயோகிக்கும் போது, மார்க்ஸீய - லெனினிஸ கோட்பாடுகளின் நியாயவாதத் தேவைகளால் உணர்த்தப்படுவது யாது? தேசிய இயக்கம் தொடர்பாகக் கலந்துரையாடும் போது, அடிப்படையில் ஒன்றுக்கொன்று வித்தியாசமான முதலாளித்துவ காலங்கள் இரண்டுக்குமிடையிலான தெளிவான வித்தியாசமொன்றைக் காண வேண்டுமென்பது அதன் மூலம் பிரதானமாக உணர்த்

தப்படுகின்றது. ஒருபுறம் மானிய முறையும் கொடுங்கோன்மையும் வீழ்ச்சியடையும் காலமாகும். அதாவது முதன் முறையாகத் தேசிய இயக்கங்கள் வெகுஜன இயக்கங்களாக மாற்றமடையும் காலமாகும். இக்காலத்தே பிரதிநிதித்துவ சபைகளிற் பங்குபற்றுவதனுலும், புதினப் பத்திரிகைகள் முதலியவற்றின் வாயிலாகவும் மக்கள் தொகையின் சகல சமூக வர்க்கங்களும் ஏதாவதொரு வகையில் அரசியலின்பால் ஈர்க்கப்பட்டு அவர்கள் முதலாளித்துவ - ஜனநாயக சமூகத்தையும் அரசாங்கத்தையும் உருவாக்குவார்கள். மறு புறத்தில், சர்வாதிகார ஆட்சியையும், பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளி வர்ச்கத்துக்கும் இடையே மிக உயர்வான பகைமையுணர்ச்சியோடு அமைக்கப்பட்ட முதலாளித்துவ அரசாங்கங்களையும் கொண்ட காலமாகும். அதாவது, இக்காலத்தை முதலாளித்துவம் வீழ்ச்சியடையும் காலமாகக் கருதலாம்.

முதற் குறிப்பிடப்பட்ட கால கட்டத்தின் விசேட இயல்புகள், தேசிய இயக்கங்கள் விழிப்படைதல், பொதுவாக அரசியற் சுதந்திரத்துக்காகவும் விசேடமாக இனங்களின் உரிமைகளுக்காகவும் நடாத்தப்படும் போராட்டங்களில் ஜனத்தொகையின் பெரும் பகுதியான பாமர விவசாயிகளையும் சேர்த்துக் கொள்ளுதல் என்பனவாகும். இரண்டாவதாகக் குறிப்பிட்ட கால கட்டத்தின் விசேட இயல்புகள், வெகுஜன முதலாளித்துவ - ஜனநாயக இயக்கங்கள் மறைந்துவிடுதல், அதுவரையில் வர்த்தக உறவுகளால் முற்ருக ஈர்க்கப்பட்டிருந்த இனங்களை மேலும் நெருக்கமடையச் செய்வதற்கும் அவ்வினங்களை அதிகம்திகமாகக் கலக்க வழிவகுப்பதற்கும், வளர்ச்சியடைந்த முதலாளித்துவம் சர்வதேச ரீதியில் ஒன்றிணைந்த முதலீட்டுக்கும் சர்வதேசத் தொழிலாளர் வர்க்க இயக்கத்துக்கும் இடையிலான பகைமையை முன்வைத்தலாகும். உண்மையிலே, இவ்விரு காலக் கட்டங்களும் சீன மதிலொன்றினுற் பிரிக்கப்பட்டவையல்ல. வெவ்வேறு பரம்பற் பிணைப்புக்களால், அதாவது தேசிய அபிவிருத்தியின் வேகம், தேசிய ரீதியில் ஜனத் தொகை ஆக்கப்பட்டுள்ள

விதம், ஜனத்தொகை விருத்தி, என்பனவற்றுக்கேற்ப ஒன்றுக்கொன்று வித்தியாசமான நாடுகளால் அக்காலக் கட்டங்கள் இணைக்கப்பட்டுள்ளன. இத்தகைய பொதுவான வரலாற்றுத் தீர்க்கதரிசன அரசாங்க நிலைமைகளைக் கருத்திற் கொள்ளாமல் ஒரு குறிப்பிட்ட நாட்டின் தேசிய வேலைத் திட்டம் தயாரிக்கப்படுமாயின். அந்நாட்டில் மார்க்ஸீய - லெனினிஸ வாதிகள் பற்றிய பிரச்சினை எழுவதில்லை. உலகாயத அடிப்படையில், அதாவது மார்க்ஸீய கருத்தின்படி கருத்து வேற்றுமைக் கெதிரான, வெறுமையான அசாத்தியக் கூறுகளை வன்மையாகப் புறக்கணிக்கின்ற ஒருவரிடமிருந்து ஒரு பிரச்சினைபற்றிய வரலாற்றுத் - தீர்க்கதரிசன பகுத்தாய்வொன்றை எவ்வாறு செய்யலாமென்பதற்கு உதாரணமொன்றை எதிர்ப்பார்ப்பது இயற்கையே. எழுந்துள்ள பிரச்சினை யாதெனில், குறிப்பிட்ட ஒரு நாடாகிய இலங்கையில், குறிப்பிட்ட ஒரு காலக் கட்டமான ஏகாதிபத்தியத்தியம் சுற்றுயிராகிக் கொண்டிருக்கும் யுகத்திலே மார்க்ஸீய - லெனினிஸ வாதத்தின் தேசிய வேலைத் திட்டமாகும். பிற்போக்குவாத முதலாளித்துவ வளர்ச்சியைக் காட்டும் இலங்கை ஒரு நவ குடியேற்றவாத சமுதாயமாகும். எனினும், மென்ஷேவிக் வாதிகள் இலங்கை என்ன வரலாற்றுக் காலத்தினூடாகச் சென்று கொண்டிருக்கின்றதெனவோ, அல்லது அவ்விசேடமான காலக்கட்டத்திலே அக்குறிப்பிட்ட நாட்டின் தேசிய பிரச்சினையினதும் தேசிய இயக்கங்களினதும் எதிர்காலச் சிறப்பியல்புகள் யாவை என்பனபற்றியோ வினு எழுப்புவதில்லை. நிச்சயமாக அவைபற்றி அக்கறை கொள்வதுமில்லை.

மார்க்ஸ், எங்கல்ஸ், லெனின் முதலானோர் தனித்தனி நாடுகளின் தீர்க்கதரிசன - வரலாற்றுப் பிரச்சினைகளைப் பகுத்தாய்வதில் எவ்வாறு எச்சரிக்கையாக இருந்துள்ளார்களென நோக்குவது எவ்விடத்திலும் பயனளிக்கக் கூடியதாகும்.

வெவ்வேறு காலக்கட்டங்களில், வெவ்வேறு நாடுகளின் தேசியப் பிரச்சினை பற்றித் தீர்க்கதரிசன - வரலாற்றுப்

பகுத்தாய்வொன்று செய்ய வேண்டிய அவசியத்தை மூர்க்கத் தனமாகவும் பகைமையுணர்வோடும் போதிக்கின்ற சந்தர்ப்ப வாதிகள், விசேடமாகத் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைப் பீடம், இருபதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் இலங்கை முதலாளித்துவ வளர்ச்சியின் எந்த வரலாற்றுப் படியினைக் கடந்து சென்று கொண்டிருக்கின்றதெனக் கூறவோ, இந்நாட்டின் தேசியப் பிரச்சினையின் அதிவிசேட சிறப்பியல்புகள் எவையெனக் கூறவோ சடுகளவும் முயற்சி செய்வதில்லை. எனினும் பிறர் இப்பிரச்சினையை எவ்வாறு மார்க்ஸீய நடையில் ஆராய்ந்துள்ளார்களென்பதை எடுத்துக் காட்டுகின்றார்கள். மார்க்ஸீய கண்ணோட்டத்தில் வெவ்வேறு நாடுகளின் அரசியல், பொருளாதார அபிவிருத்தியை மாத்திரமன்றி அந்தந்த நாடுகளின் மார்க்ஸீய - லெனினிஸ வேலைத் திட்டங்களையும் ஒப்பிட்டுப் பார்த்தல் அதிமுக்கியம் வாய்ந்ததாகும். ஏனெனில், நவீன அரசுகள் அனைத்தும் அநேகமாக முதலாளித்துவ இயல்பைக் கொண்டிருப்பதிலும், எனவே அவை ஒரு பொது விதிக்குட்பட்டிருப்பதிலும் எவ்வித சந்தேகமும் இருக்க முடியாதென்பதனாலாகும். எனினும். அத்தகைய ஒப்பீடுகள் அர்த்தமுள்ளவையாக இருத்தல் வேண்டும். அத்தகைய ஒப்பீட்டின் முதல் நிபந்தனை சம்பந்தப்பட்ட நாடுகளின் அபிவிருத்தியினது வரலாற்றுக் கால சட்டங்கள் எவ்வகையிலும் ஒப்பிடக்கூடியனவா என்பதைக் கண்டு பிடித்துக் கொள்வதாகும். ரோஸா லக்ஸம்பர்க் என்பவர் ரஷ்யாவையும் அவுஸ்திரேலியாவையும் ஒப்பிட்ட முறையினை விமர்சித்த லெனின் அவ்விரு நாடுகளையும் அவ்வாறு ஒப்பிட முடியாதென்பதைச் சுட்டிக்காட்டினார்.

நாம் தற்போது கடந்து சென்று கொண்டிருப்பது முதலாளித்துவம் வீழ்ச்சியடையும் யுகத்தினூடாகவாகும். பிற்போக்கவாக முதலாளித்துவம் அபிவிருத்தியைக் காட்டும் இலங்கையில், சிங்கள தமிழ் மக்கட் பிரிவினர் சுயேச்சையாக உருவாக்கிக் கொள்ளும் சுமுகமான கருத்தொருமைப்பாட்டின் மீதே ஒரு தேசிய அரசாங்கத்தின்கீழ் ஒன்று சேர்ந்து வாழமுடியும்! ஓர் அரசின்கீழ் ஒரு சிறுபான்மை இனத்தை பலாத்காரமாகத் தங்கியிருக்கச் செய்வதானது,

புரட்சிவாதத் தொழிலாளர் வர்க்க இயக்கத்தினுல் நிராகரிக்கப்படுகின்ற தேசிய அடக்குமுறையின் ஒரு வடிவமாகும். சிறுபான்மையோர் மீது நட்புறவு பாராட்டி அவர்களைப் புரிந்துகொள்ளும் தன்மையோடு அணுகினுலன்றி அவர்களின் நம்பிக்கையை வெற்றி கொள்ள முடியாது. அவர்களுடைய சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொள்ளாது ஒற்றுமையையும் சகோதரத்துவத்தையும் பற்றிப் பேசும் வார்த்தைகள் வெறும் வார்த்தைகள் மாத்திரமே. இறுதித் தீர்மானம் எதுவாயினும் அதனை முடிவு செய்யும் உரிமை சிறுபான்மையோருக்கு உண்டென்பதை ஏற்றுக்கொள்ள மறுப்பவர்கள் ஒற்றுமையைப் பற்றிப் பேசுவதில் அர்த்தமில்லை. இரண்டாவதாக, தமிழ் மக்களைப் பார்த்துப் பிரிந்து செல்லுங்களென் நாம் கூறவுமில்லை; அவர்களுக்கு புத்திம்திகளோ எச்சரிக்கைகளோ கூறவும் நாம் முற்படவில்லை. இறுதி முடிவை எடுப்பதற்குத் தமிழ் மக்களுக்கிருக்கும் உரிமையையும் சுதந்திரத்தையும் ஏற்றுக்கொள்ளும் நாம் அத்துடனே மற்றென்றையும் செய்ய வேண்டியவர்களாக உள்ளோம். அதாவது சமூக, பொருளாதார, அரசியல் ரீதியில் பிரிவினையானது இரு இனங்களையும் வரலாற்றுப் பயணத்தில் வெகு தூரம் பின் தள்ளி விடுமென்பதை எடுத்துக் காட்டுவதற்காகத் தமிழ் மக்களிடையே பொறுமையோடு ஓரியக்கத்தை நடாத்த வேண்டியவர்களாகவும் இருக்கின்றேம். இனங்களின் ஜனநாயக ரீதியான சுயநிர்ணய உரிமைக்காக இடைவழிச் சமாதானமற்ற போராட்டம் நடாத்திய லெனின், சிரேஷ்ட சோவியத் சோஷலிஸப் புரட்சியின் பின்னரும்கூட, சுயேச்சையாகச் சோவியத் சோஷலிஸக் குடியரசிற் சேர்ந்து கொண்டுள்ள சகல இனங்களுக்கும் பிரிந்து செல்வதற்கான உரிமையை சோவியத் யாப்பிலேயே குறிப்பிட்டுள்ளார்.

பாட்டாளி வர்க்கம் தாம் சோஷலிஸத்துக்காக நடாத்தும் போராட்டத்தின் நலன் கருதியே ஒரு பரந்த மத்திய அரசுக்காக வாதாடுகின்றது. ''முதலாளித்துவத்தை விஸ்தரிக்க இயன்றளவு பரந்த ஓர் மத்திய அரசு தேவை'' என்ற எளிய காரணத்துக்காக மார்க்ஸீய வாதிகள் சமஷ்டி முறை

யையும், பன்முகப்படுத்தலையும் எதிர்க்கின்றனர். ஏனைய நிலைமைகள் சமமாக இருக்கும் போது வர்க்க உணர்வுள்ள பாட்டாளி வர்க்கம் எப்போதும் மிகப் பரந்த அரசுகளை நிறுவவே முன் நிற்கின்றது. பாட்டாளி வர்க்கம் எப்போதும் மத்திய காலப் பிராந்திய வாதத்தை எதிர்த்துப் போராடுவதோடு, முதலாளித்துவத்துக் கெதிரான அதன் போராட்டம் பயன்தரக் கூடிய வாய்ப்பினை ஏற்படுத்துவதற்காக, பரந்த பிரதேசங்கள் பொருளாதார ரீதியில் இயன்றளவுக்கு நெருங்கி ஒன்றிணைவதைப் பாட்டாளி வர்க்கம் எப்போதும் வரவேற்கும்'' என லெனின் எழுதியுள்ளார். முதலாளி வர்க்கம் அதன் எதிர் முனைவான பாட்டாளி வர்க்கத்தோடு சேர்ந்து பழைய, மத்திய கால, குல, பிராந்திய, சிறுபான்மை, சமய, பிற முட்டுக் கட்டைகளைத் துடைத்தெறிய வேண்டுமாயின், அரசியல் ரீதியில் இறுக்கமாகப் பிணைந்த ஒற்றுமை நிலவுகின்ற பூமிப் பரம்புக்களுக்குள் மாத்திரமே அது சாத்தியமாகும். எனவே முதலாளித்துவத்தின்கீழ் உற்பத்திச் சக்திகள் விரிவடைந்த, விரைவடைந்த அபிவிருத்திக்கு அத்தகைய பிரதேசங்கள் தேவைப்படும்.

மார்க்ஸீய - லெனினிஸ வாதிகள் இனங்களுக்குரிய சுய நிர்ணய உரிமையை, அதாவது பிரிந்து சென்று தனி அரசுகளை நிறுவிக்கொள்ள இனங்களுக்கிருக்கும் உரிமையை ஏற்றுக் கொள்கிறார்கள். எனினும், அவ்வாறு வெவ்வேறு இனங்கள் தனி அரசுகளை நிறுவும் போதும் நிறுவுகின்ற வரையிலும் எப்போதும் எந்த நிலைமைகளின் கீழும் சமஷ்டி முறையையோ அல்லது பன்முகப்படுத்திய ஆட்சியையோ அனுமதிப்பதில்லை. மத்திய ஆட்சியுடைய பெரிய அரசுகள் என்பன மத்திய கால நெருக்கடி நிலைமை முதல் அனைத்துலக எதிர்கால சோஷலிஸ சமுதாய அமைப்பு வரையில் முன் வைக்கப்பட்டுள்ள பாரிய வரலாற்றுப் படியாகும். முதலாளித்துவத்தோடு பிரிக்க முடியாதவாறு பிணைக்கப்பட்டுள்ள அத்தகைய ஓர் அரசுக்கூடாக மாத்திரமே சோஷலிஸத்தை நோக்கிச் செல்லக்கூடிய பாதை அமைந்திருக்க முடியும்,

எனினும் மத்திய அரசு என நாம் கருதுவது ஜனநாயக ரீதியில் ஒருமுகப்படுத்தப்பட்ட மத்திய அரசையே என்பதை நினைவில் நிறுத்திக்கொள்ள வேண்டும்.

இதிலிருந்து விளங்குவது யாதெனில், ஒரு குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் நியாயமான காரணங்களுக்காகத் தமது சுய நிர்ணய உரிமைக்காக ஓரினம் வாதாடாமலிருக்கையிலுங் கூட, யாதாயினிமொரு முதலாளித்துவ அரசின் கீழ் தொடர்ந்தும் இராமல் பிரிந்து செல்ல விரும்பும் இனங்களுக்கு அவ்வுரிமை இருக்க வேண்டுமென்பதை மார்க்ஸீய - லெனினிஸ வாதிகள் ஏற்றுக்கொள்கின்றார்கள். அவர்கள், அவ்வாறு செய்யாதவிடத்து, நாடுகளைப் பலவந்தமாக ஒன்றிணைத்து வைத்துக் கொள்வதற்கான அடிப்படை அம்சத்திலே உதவி புரிந்தவர்களாவர். தனி அரசுக் கோரிக்கையை நிராகரிப்போரும் அதனை ஒரு குற்றச் செயலாகக் கருதுவோருமான மென்ஷேவிக் வாதிகள் சிங்கள முதலாளித்துவ இனவாதிகளின் கைப்பொம்மைகளன்றி வேறு யாருமல்லர்.

1896-ம் ஆண்டில் நிகழ்ந்த லண்டன் சர்வதேச காங்கிரஸ் சம்மேளனத்தின் பிரேரணை யொன்றிற் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது: ''சகல இனங்களினதும் பூரண சுயநிர்ணய உரிமைக்காக வாதாடும் இச்சம்மேளனம், தேசிய அல்லது எதேச்சாதிகாரக் கொடுங்கோலின் கீழ் நசுக்கப்படுகின்ற சகல நாடுகளினதும் பாட்டாளி வர்க்கத்துக்கும் தனது நேசக் கரத்தை நீட்டுகின்றது. சமூக - ஜனநாயகத்தின் இலட்சியங்களை நிறைவேற்றிக் கொள்ளவும், அனைத்துலக முதலாளித்துவத்தைத் தோல்வியடையச் செய்யவும் கூட்டாகப் போராட்டம் நடாத்துவதற்காக, உலகெங்கும் வாழ்கின்ற வர்க்க உணர்வுள்ள (தமது வர்க்க நலன்களைப் புரிந்து கொண்டுள்ள) தொழிலாளர் அணிகளோடு சேர்ந்துகொள்ளுமாறு இந்நாடுகள் அனைத்திலும் வாழும் தொழிலாளர்களுக்கு இச்சம்மேளனம் வேண்டுகோள் விடுக்கின்றது.'' ஒரு புறம் சகல இனங்களினதும் பூரண சுயநிர்ணய உரிமையைத் திட்ட

வட்டமாகவும் நேரடியாகவும் தெளிவாகவும் ஏற்றுக்கொள்வதும், மறு புறத்தில் வர்க்கப் போராட்டத்தில் அனைத்துலக ஒற்றுமைக்காகத் தொழிலாளர்களிடம் விடுக்கப்படும் அதேயளவு தெளிவான வேண்டுகோளும் மிகவும் இன்றியமையாத அடிப்படைக் காரணிகளெனச் சர்வதேச சம்மேளனத்தின் பிரேரணை மூலம் மீள வலியுறுத்தப்படுகின்றன. தேசிய பிரச்சினை பற்றிய பாட்டாளி வர்க்கக் கொள்கைக்குச் சரியான ஒரே வழி காட்டுதலை இந்தப் பிரேரணை வழங்குகின்றதெனவும் அது நிச்சயமாகச் சரியானதெனவும் நாம் கருதுகின்றோம்.

எனினும் எமது இந்த ஆலோசனை செற்படுத்த முடியாததொன்றெனத் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் சிலர் குற்றஞ் சாட்டியுள்ளார்கள். எதிர்காலத்திலும் அவ்வாறு குற்றஞ் சாட்டக்கூடும். தேசியப் பிரச்சினையின் நடைமுறைச் சாத்தியக்கூறுகள் மூன்றைக் குறிப்பிடலாம். அவை, சகல தேசிய உணர்வுகளுக்கும் ஆதரவளித்தல், ஓரினம் பிரிந்து செல்வது சம்பந்தமான பிரச்சினைக்கு ''ஆம்'' அல்லது ''இல்லை'' எனப் பதிலளித்தல், பொதுவாகத் தேசிய கோரிக்கைகளை உடனடியாகச் செயற்படுத்தல் என்பனவாகும். இவற்றைச் சுருக்கமாக ஆராய்வோம்.

ஆரம்பத்திலேயே, சகல தேசிய இயக்கங்களினதும் தலைமைப் பீடத்தை இயல்பாகவே தம் வசமாக்கிக்கொள்ளும் முதலாளித்துவ வர்க்கம், சகல தேசிய உணர்வுகளுக்கும் ஆதரவு வழங்குவது நடைமுறையில் சாத்தியமானதெனக் கூறுகிறது. எனினும் மற்றெல்லாப் பிரச்சினைகளிலும் போலவே தேசிய பிரச்சினையிலும் ஒரு குறிப்பிட்ட திசையில் மாத்திரம் முதலாளித்துவ வர்க்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்குவதைப் பாட்டாளி வர்க்கம் தனது கொள்கையாகக் கொண்டுள்ளது. எனினும் அக்கொள்கை ஒருபோதும் முதலாளித்துக் கொள்கையை ஒத்ததாக இராது. தொழிலாளர் வர்க்கம் முதலாளி வர்க்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்குவது (முதலாளி வர்க்கத்துக்கு அறவே உருவாக்க முடியாததும், பூரண

ஜனநாயகத்தினுல் மாத்திரம் அடையக் கூடியதுமான) தேசிய ஒற்றுமையைப் பாதுகாப்பதற்கும், தமது உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ளவும், வர்க்கப் போராட்டத்துக்கு மிகச் சாதகமான சூழ்நிலைகளை உருவாக்கிக் கொள்வதற்குமாகும். எனவே, தேசியப் பிரச்சினையில் பாட்டாளி வர்க்கம் வெளியிடும் கொள்கையானது முதலாளித்துவத்தின் நடைமுறைக்கு முரணுனதாகும். பாட்டாளி வர்க்கம் எப்போதும் நிபந்தனைக்குட்பட்ட ஒத்துழைப்பையே முதலாளி வர்க்கத்துக்கு அளிக்கும். ஒரு தேசியப் பிரச்சினையின்போது சகல முதலாளி வர்க்கங்களும் தமது இனத்துக்கு விசேட சலுகைகளைப் பெற்றுக் கொள்ளவோ அல்லது தமது இனத்துக்கு விசேட இலாபங்களைப் பெற்றுக்கொள்ளவோ எத்தனிக்கின்றன. இது செயல் ரீதியானதென அவர்கள் கூறுகின்றுர்கள். பாட்டாளி வர்க்கமோ சகல வரப்பிரசாதங்களையும், சகல சலுகைகளையும், சகல விசேடத்துவங்களையும் எதிர்க்கின்றது. இவ்வாறு நோக்குமிடத்து செயல் ரீதியான தன்மை என்பதனுற் கருதப்படுவது முதலாளித்துவத் தலைமைத்துவத்தைப் பின்பற்றிச் சென்று சந்தர்ப்பவாதத்துக்குப் பலியாவதாகும்.

அரசாங்க சேவையிலும் அரச கூட்டத்தாபனங்களிலும் தொழில் வழங்குதல், பல்கலைக் கழக வளாகங்களுக்கு மாணவரை அனுமதித்தல், சிங்களம் மட்டும் மசோதாவின் அடிப்படையில் தமிழ் அரசாங்க ஊழியர்களுக்குப் பதவி உயர்வு வழங்குதல் ஆகிய நடவடிக்கைகள் சிங்கள முதலாளித்துவ வர்க்கத்தின் செயற்றிறனை எடுத்துக்காட்டுகின்றன. தமிழ்த் தோட்டத் தொழிலாளருக்கு வழங்கியுள்ள கல்வி வசதிகள், தோட்டத்தொழிலாளர் உட்பட்டிருக்கும் அடக்குமுறையும் சுரண்டலும், காணிச் சீர்திருத்த நடவடிக்கைகளின் கீழ் இந்திய வம்சாவளித் தோட்டத் தொழிலாளர் தொழில்களிலிருந்து நீக்கப்பட்டு அவ்விடங்களிற் சிங்களத் தொழிலாளர்களை வேலைக்கமர்த்தல், அரசியல் இலாபம் கருதியும் தேசிய அரசுப் பேரவை ஆசனங்களை வென்றெடுப்பதற்காகவும் பெரும் பான்மையாகச் சிங்களவர் வாழும் பிரதேசங்களில்

ஐ. தே. க., ஸ்ரீ ல. சு. க. ஆகியவற்றின் முதலாளித்துவத் தலைவர்கள் தமிழர் விரோத உணர்ச்சிகளையும் நடவடிக்கைகளையும் பயன்படுத்திக் கொள்ளல், வடக்கு கிழக்குப் பிரதேசங்களுக்குச் சிங்கள இராணுவத்தை அனுப்பி நிலைகொள்ளச் செய்தல், அப்பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றத் திட்டங்களை நிறுவுதல் சம்பந்தமான ஆலோசனைகள் என்பனவற்றை நோக்குமிடத்தும் அந்தச் செயல் ரீதியான இயல்பு தெளிவாகப் புலப்படுகின்றது. ஆரம்பத்தில் சமஷ்டி அரசையும் தற்போது தனித் தமிழ் நாட்டையும் கோருகின்ற சுலோகங்களால் தமிழ் மக்களிடையே சிங்கள விரோத உணர்ச்சிகளை மூட்டிவிட்டுள்ள தமிழ்க் காங்கிரஸ், தமிழரசுக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகிய முதலாளித்துவ தமிழ் அரசியற் கட்சிகளின் செயற்றிறமையும் அவ்வாறே தெளிவாகப் புலப்படுகின்றது. இச்செயற் றிறமைக்கு ல. ச. ச. க., ல, க. க , ம. ஐ. மு. என்பன பகிரங்கமாகப் பலியாகி வெகு காலமாகிவிட்டன.

எந்தவோர் இனத்தை எடுத்துக் கொண்டாலும் அவ்வினம் பிரிந்து செல்வதற்கான பிரச்சினைக்கு ‘ஆம்’ அல்லது ‘இல்லை, என்ற பதிலை எதிர்பார்ப்பது மிகவும் செயற்றிறமையானதாகத் தோற்றலாம். யதார்த்த ரீதியில் இது ஒரு கேலிக்கூத்தாகவும், நியாயப்படி உலகாயதமாகவும் உள்ள இக்கோரிக்கை பிரயோகத்தில் முதலாளித்துவக் கொள்கைக்குப் பாட்டாளி வர்க்கத்தை அடிமைப்படுத்திவிட வழிகோலும். முதலாளி வர்க்கம் எப்போதும் தமது தேசியக் கோரிக்கைகளுக்கே முதலிடம் அளிப்பது திண்ணம். ஆனல் பாட்டாளி வர்க்கமோ தமது வர்க்க நலன்களுக்கு முதலிடமும் அக்கோரிக்கைகளுக்கு இரண்டாவது இடத்தையுமே வழங்கும். நியாய அடிப்படையில் எடுத்துக் கொண்டால் ஓரினம் மற்றோர் இனத்திலிருந்து பிரிந்து வேருகல், அல்லது ஓரினம் மற்றோர் இனத்தோடு சமத்துவமடைதல் என்பவற்ருல் முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சி முற்றுப் பெறுமெனக் கூறமுடியாது. இவ்விரு சந்தர்ப்பங்களிலும் தமது வர்க்க வளர்ச்சியை உறுதிப்படுத்திக் கொள்வது பாட்டாளி

வர்க்கத்துக்கு மிக முக்கியமானதாகும். பாட்டாளி வர்க்க இலட்சியங்களுக்கு முன்னால் 'தமது' இனத்தின் இலட்சியங்களைத் தள்ளிவிட்டு அந்த வளர்ச்சியைத் தடைப்படுத்தல் முதலாளி வர்க்கத்துக்கு மிக முக்கியமாகும். இதனாலேயே ஓரினத்துக்கு வாக்குறுதிகளை அளிக்காமலும், மற்றோர் இனத்துக்குத் தீங்கு அல்லது நட்டம் ஏற்படுத்துவதன் மூலம் யாதொன்றையும் வழங்கப் பொறுப்பேற்றுக் கொள்ளாமலும் சுயநிர்ணய உரிமையை அச்சீகரிப்பதற்குப் பாட்டாளி வர்க்கம் தம்மை வரையறுத்துக் கொண்டுள்ளது.

இது செயற்றிறமை அற்றதாகவிருக்கலாம். எனினும் எனினும் வெளியிடக் கூடிய சகல தீர்வுகளிலும் மிகவும் ஜனநாயக ரீதியான கோரிக்கைகளை அடைவதற்கான சிறந்த உத்தரவாதம் அதுவாகும். பாட்டாளி வர்க்கத்துக்கு அத்தகைய உதரவாதம் மட்டுமே அவசியமாகிறது. எனினும் எல்லா இனங்களையும் சேர்ந்த முதலாளி வர்க்கத்துக்கு ஏனைய இனங்களின் அந்தஸ்தையும் அவர்களுக்கு ஏற்படக்கூடிய நட்டத்தையும் பற்றிய அக்கறை இல்லாத, தமது வர்க்க நலன்களுக்கான உத்தரவாதம் அவசியமாகின்றது. முதலாளி வர்க்கம் அதிக அக்கறை கொள்வது ஒரு குறிப்பிட்ட கோரிக்கையைச் 'செயற்படுத்தும் திறன்' பற்றியாகும். இதனால் ஏனைய இனங்களைச் சேர்ந்த முதலாளி வர்க்கத்தோடு உடன்படிக்கைகள் செய்யும் கொள்கை உருவாகும். எனினும் முதலாளித்துவ வர்க்கத்துக் கெதிராகத் தமது வர்க்கத்தைப் பேணிக்கொள்வதே பாட்டாளி வர்க்கதுக்கு அவசியமாகிறது. நிரந்தர ஜனநாயகத்தோடு சோஷலிஸத்தின் உயிர்ப் பண்புகளைக் கொண்ட கல்வியைப் பொதுமக்களுக்கு ஊட்டவேண்டும். இது சந்தர்ப்பவாதிகளுக்குச் செயற்றிறன் அற்றதாகவிருக்கலாம். ஆனால் அதுவே உண்மையான உத்தரவாதமாகும். முதலாளி வர்க்கமும் பிரபுத்துவ நிலச்சுவான்தார்களும் இருப்பினும் கூடிய தேசிய சமத்துத்துக்கும் சமாதனத்துக்கும் அதுவே உத்தரவாதமாகும்.

பாட்டாளிகள் சகல வகையான இனவாதங்களையும் எதிர்க்கின்றார்கள். அதேயளவுக்கு இனங்களின் பூரண சமத்துவத்தைக் கோருகின்றார்கள். சலுகைகள் எவ்வளவு அற்பமானவையாயினும் அவை தேவையற்றவை என்பதை கொள்கை ரீதியாகவே கேட்டுக் கொள்கின்றார்கள். எனவே, சகல இனங்களையும் சேர்ந்த முதலாளி வர்க்கத்தினரின் கண்ணோட்டத்தில் தேசியப் பிரச்சினைகளில் பாட்டாளிகளின் பணி முற்றிலும் செயற்றிறமையற்றதாகும். தமது கோரிக்கைகள் செயற்றிறமை யுள்ளவையாகையால் நிபந்தனைகளின்றித் உணர்ச்சிகளுக்கு ஆதரவு தருமாறு முதலாளி வர்க்கம் பாட்டாளி வர்க்கத்திடம் வேண்டுகோள் விடுக்கின்றது. சகல இனங்களினதும் பிரிந்து செல்வதற்கான உரிமைக்கு ஆதரவளிப்பதிலும் பார்க்க ஒரு குறிப்பிட்ட இனம் பிரிந்து செல்வதை ஆதரித்து குறைந்த பட்சம் "ஆம்" எனக் கூறுவது மிகவும் செயற்றிறனுள்ள செயலாகும்!

பாட்டாளி வர்க்கம் அத்தகைய ஒருசெயற்றிறமையை எதிர்க்கின்றது. பிரதானமாக, சகல இனங்களையும் சார்ந்த பாட்டாளிகளின் இயக்கத்தை மதித்து முன்னிறுத்தும் பாட்டாளி வர்க்கம் யாதாயினுமொரு தேசிய கோரிக்கையைத் தொழிலாளர் வர்க்கப் போராட்டக் கண்ணோட்டத்திலேயே மதிப்பீடு செய்கின்றது. செயற்றிறமை பற்றி விடுக்கும் இவ்வேண்டுகோளானது உண்மையாக எடுத்துக் கொண்டால், குறைந்தபட்சம் முதலாளி வர்க்க உணர்வுகளை விமர்சிக்காமல் ஏற்கும்படி விடுக்கப்படும் வேண்டுகோளாகும்.

பிரிவினை உரிமையை ஏற்றுக் கொள்வதனாலும் அதற்கு ஆதரவு நல்குவதனாலும் நசுக்கப்பட்ட இனங்களின் முதலாளித்துவ இனவாதத்தை நாம் ஆதரிப்பதாகக் குற்றஞ்சாட்டப்படலாம். இக்குற்றச்சாட்டுக்கு நாம் அளிக்கும் பதில் இதுதான் : இப்பிரச்சினைக்குச் செயற்றிறனுள்ள ஒரு தீர்ப்பு முக்கியத்துவம் பெறுவது முதலாளித்துவ வர்க்கத்துக்கே; தொழிலாளர்

களுக்கு முக்கியத்துவம் பெறுவது இரு கோட்பாடு களினதும் கொள்கைகளை வெவ்வேருக இனங் கண்டு கொள்வதாகும். நாம் அடக்குமுறையை வன்மையா கவும் உறுதியோடும் எதிப்பதனுல் நசுக்கப்பட்ட இனத்தின் முதலாளி வர்க்கம் அடக்கியாள்பவர் களோடு போராடிக்கொண்டிருக்கும் வரையில், சகல சந்தர்ப்பங்களிலும் நாம் மற்றெல்லாரையும் விட அவர் கள் பக்கமாகவே நிற்போம். ஆனுல் நசுக்ப்பட்ட இனத்தின் முதலாளி வர்க்கம் தமது இனவாதத்துக் காகப் போராட்டம் நடாத்தும் வரையில் நாம் அவர்களை எதிர்ப்பவர்களாகவே இருப்பபோம். அடக்கியாள்பவர் களின் வன்முறைகளையும் சலுகைகளையும் எதிர்த்துப் போராடும் நாம், அடக்கப்பட்ட இனம் எந்த வகையான சலுகையும் பெற எடுக்கும் முயற்சியை மன்னிக்க மாட்டோம்.

நாம் நடத்தும் ஆர்ப்பாட்டத்தில் இனங்களின் பிரிந்து செல்வதற்கான உரிமை பற்றிய சுலோகத்தை முன்வைக்கவோ வெளியிடவோ தவறிவிடுவோமாயின் நாம் முதலாளி வர்க்கத்தினது மாத்திரமின்றிப் பிரபுத்துவ நிலச் சுவான்தார்களினதும், அடக்கி யாள்பவர்களினது எதேச்சாதிகாரத்துக்கு வாய்ப் பான முறையிற் செயற்படுபவர்களாவோம். தொழி லாளர் வர்க்கம் தேசிய பிரச்சினையைப் பூஜிக்க வேண்டிய பிரச்சினையாக்கிக் கொள்வதில்லை. முதலாளித்துவவளர்ச்சியே அப்பிரச்சினையை அவ்வாறு போற்றுகிறது. ஏனெனில் நிச்சய மாக முதலாளித்துவம் சகல இனங்களும் சுயாதீன எழுச்சியின் பால் புத்துயிர் பெறுவதைத் தடுக்கின்றது. எனினும் வெகுஜன தேசிய இயக்கங்கள் உருவாகும்போது, அவற்றைத் தூக்கி எறிந்துவிட்டு அவற்றில் அடங்கியுள்ள முற்போக்

கான அம்சங்களுக்கு ஆதரவு நல்காமையிலிருந்து புலப்படுவது யாதெனில், உண்மையாகவே அவர்கள் தீவிர இனவாதிகளை தமது தோளில் போட்டுக் கொள்வதாகும், தம்து இனத்தை 'ஒரு முன்மாதிரியான' இனமென ஏற்றுக்கொள்வதாகும். அடக்கப்பட்ட ஓரினத்தின் முதலாளித்துவ இனவாதம் எதுவாயினும், அடக்குமுறைக் கெதிரான ஜனநாயகம் அகப்பொருளொன்று அந்த இனவாதத்தில் அடங்கியிருக்கும். அந்த அகப்பொருளுக்கே எமது நிபந்தனையற்ற ஆதரவை வழங்குகின்றோம். எனினும் அதனை நாம் இனங்களின் தனித்தவத்துக்கான போக்கிலிருந்து தெளிவாகப் பிரித்தறிந்து கொள்ள வேண்டியவர்களாயுமுள்ளோம். முதலாளித்துவ வாதிகளினதும் பிலிஸ்டைனியர்களினது கண்ணோட்டத்தில் இது செயற்றிறன் அற்றதாகவிருப்பினும், செயற்றிற னுள்ளதும், கொள்கை அடிப்படையானதும், ஜனநாயகம் சுதந்திரம், பாட்டாளி வர்க்க ஐக்கியம் என்பன வற்றை உண்மையாகவே அபிவிருத்தி செய்யக்கூடி யதுமான தேசியப் பிரச்சினை பற்றிய ஒரே கொள்கை அதுவாகும். அதாவது, சகல இனங்களுக்கும் பிரிந்து செல்வதற்குள்ள உரிமையை அங்கீகரித்தல், சகல ஏற்றத்தாழ்வுகள், சகல சலுகைகள், சகல சிறப்பு ரிமைகள் என்பனவற்றையும் அகற்றுதல், ஆகிய கண்ணோட்டத்தில் நோக்கிப் பிரிவினை சம்பந்தமான சகல தீர்க்கதரிசனமான பிரச்சினைகளையும் மதிப்பீடு செய்வதாகும். தோழர் லெனின் பாட்டாளி வர்க் கத்துக்குத் தெளிவாகக் காட்டியுள்ள பாதை இதுவாகும்.

பாட்டாளிகளான நாம் எந்த வகையான வரப்பி ரசாதங்களையும் பாதுகாக்க மாட்டோம், ஏன், சிங்கள வர்களின் வரப்பிரசாதங்களையும் கூடப் பாதுகாக்க மாட்டோம். ஒரு குறிப்பிட்ட அரசின் அடிப்படையில்

நாம் போராடுகின்றோம்; அவ்வரசின் கீழ் வாழும் சகல இனங்களையும் சேர்ந்த தொழிலாளர்களை ஐக்கியப்படுத்துகின்றோம். செல்லக்கூடிய சகல வழிகளாலும் நாம் எமது வர்க்க இலக்கை நோக்கிச் சென்று கொண்டிருப்பதால் தேசிய அபிவிருத்தியில் ஒருகுறிப்பிட்ட வழி பற்றி எம்மாற் பொறுப்பேற்க முடியாது. எனினும் சகல இனவாதங்களையும் எதிர்த்துப் போராடி, இனங்களின் சமத்துவத்தை உயர்வாகப் போற்றுவிட்டால் நாம் எமது வர்க்க இலக்கை அடைய முடியாது. பிரிந்து செல்வதற்கான உரிமையை கௌரவிக்கும் நாம் ஓரினத்துக்குச் சார்பாக மற்றோர் இனம் அனுபவிக்கும் வரப்பிரசாதங்களையும் உயர்வாகக் கொள்ள மாட்டோம். பிரிவினைக்கான உரிமையை அங்கீகரித்தல் ஓரினத்துக்கு வழங்கப்பட்டுள்ள அரசாங்க சலுகைகளை நிராகரித்தல் ஆகிய உயர் பண்புகளைக் கொண்ட நாம் வெகுஜனங்களுக்குக் கல்வியை ஊட்டுவோம். இதுவே எமது சகல பிரசார, ஆர்ப்பாட்ட நடவடிக்கைகளுக்கும் வழிகாட்டியாக அமையும். சமத்துவ அடிப்படையில் சகல இனங்களையும் சார்ந்த சகல பாட்டாளிகளின் இயக்கத்தையும், ஜனநாயகத்தின் நலன்களையும் பாதுகாக்க உள்ள ஒரே வழி இதுவாகவிருப்பதால் இதுவே தேசியப் பிரச்சினையில் எமக்குள்ள பிரதான பணியாக அமையும்.

மேலே விபரிக்கப்பட்ட எமது வாத விவாதங்களை அலசிப் பார்ப்பதற்குள்ள சிறந்த வழி, வெவ்வேறு சமூக வர்க்கங்கள் இப்பிரச்சினை தொடர்பாகக் கொண்டுள்ள மனப்பாங்குகளை ஆராய்வதாகும். நாம் கருத்தை மையமாகக் கொண்டே முன்செல்ல வேண்டும். இப்பிரச்சினை தொடர்பாக வர்க்கங்களுக்கிடையிலான உறவுகளைப் பரிசோதித்துப் பார்க்க வேண்

டும். இவ்வாறு செய்யத் தவறுமிடத்து உலகாயத மூடநம்பிக்கைகளுக்கு இரையான குற்றத்துக்கு ஆளாக நேரிடும்.

'சுய - நிர்ணயம்' என்ற வார்த்தை தெளிவற்றதெனவும் மார்க்ஸீயவாதிகள் அதனை மனம்போன போக்கில் சிக்கலாக்கியுள்ளார்களெனவும் கூறிக்கொண்டு முதலாளித்துவ வர்க்கம் எழுப்புகின்ற ஒப்பாரியானது பிரச்சினையைச் சிக்கலாக்கவும் உலகளாவ நிறுவப்பட்டுள்ள அடிப்படைக் கோட்பாடுகளுள் ஒன்றை ஏற்றுக்கொள்ளாது தவிர்த்துக் கொள்ளவும் அவர்கள் எடுக்கும் முயற்சியுமேயன்றி வேறெதுவுமன்று.

இனங்கள் பிரிந்து செல்வதற்கான உரிமையை ஏற்றுக்கொள்வது அரசுகள் சின்னுபின்னமாகும் ஆபத்தை அதிகரிக்குமென்ற குற்றச்சாட்டுக்குத் தோழர் லெனின் பதிலளித்துள்ளார். அவர் ஜனநாயகக் கண்ணேட்டத்தில் நோக்குமிடத்து அது உண்மையல்லவென்றும், பிரிவினை உரிமையை அங்கீகரிப்பதால் அரசு சின்னுபின்னப்படும் ஆபத்துக் குறைக்கப்படுமெனவும் கூறியுள்ளார் பிரிவினை உரிமையிலும் பார்க்க சுயாதீன தேசிய அரசொன்றை நிறுவுவதற்கான சுதந்திரத்திலும் பார்க்க ஓரினத்துக்கு மிகப் பெரிய சுதந்திரமொன்று இருக்க முடியுமா?

முதலாளி வர்க்கமும் அவர்களை முற்றுகப் பின்பற்றுமவுக்கு வழிதவறிச் சென்றுள்ள ஒரு சிலரும் சிக்கலாக்கியுள்ள இப்பிரச்சினையைத் தெளிவுபடுத்த லெனின் மிக எளிய ஓர் உதாரணத்தை முன்வைக்கின்றூர்.

விவாகரத்துப் பிரச்சினையை எடுத்துக் கொள்வோம். விவாக ரத்துக்கான சுதந்திரத்தை வழங்கப் பிற்போக்கு வாதிகள் மறுக்கின்றார்கள். இப்பிரச்சினையை மிகக் கவனமாகக் கையாள வேண்டுமெனவும் அவர்கள் கூறுகிறார்கள். விவாக ரத்துக்கரன் சுதந்திரம் வழங்குவதாற் குடும்பங்கள் சின்ன பின்னமாகிவிடுமெனக் கூசசலிடுகின்றார்கள். பிற்போக்கு வாதிகள் கபடர்களெனவும் அவர்கள் உண்மையிலே போலிஸி னதும் அதிகார வர்க்கத்தினதும் சர்வாதிகாரத்தால் ஆண் அல்லது பெண் வர்க்கத்தின் வரப்பிரசாதங்களையும் பெண் களை அடக்கியாள்வதையும் பாதுகாக்கின்றார்களெனவும் ஜனநாயகவாதிகள் நம்புகின்றனர். உண்மை நிலை யாதெ னில், விவாக ரத்துச் செய்வதற்கான சுதந்திரத்தை வழங்கு வதால் குடும்பங்கள் சிதறிப் போகும் அபாயம் ஏற்படுவ தில்லையெனவும், அதற்கு மாறாக நாகரீக சமூகத்தில் உருவா கக் கூடியதும் நீடிக்கக்கூடியதுமான ஒரே அடிப்படையான ஜனநாயக அடிப்படையொன்றின் மீது அக்குடும்பங்கள் உறுதியாக அமையுமெனவும் அவர்கள் நம்புகின்றார்கள்.

சுய நிர்ணயத்துக்கான சுதந்திரத்தை, அதாவது பிரிந்து செல்வதற்கான சுதந்திரத்தை ஆதரிப்பவர் களைப் பிரிவினை வாதத்தைத் தூண்டுபவர்களாகக் குற்றஞ்சாட்டுவது சரியாக விவாகரத்துக்கான சுதந் திரத்தை வழங்கவேண்டு மென்பவர்க க் குடும் பங்கள் சிதறிப்போவதை ஊக்குவிப்பவர்களெனக் குற்றஞ்சாட்டுவது போன்ற கபடத்தனமும் முட்டாள் தனமுமாகுமென லெனின் கூறுகிறார். முதலாளித் துவ சமூகத்தில் செல்வந்தர்களின் விவாக உறவு என்னென்ன சலுகைகளின் மீதும் ஊழல்களின் மீதும் நிலைத்து நிற்கின்

றதோ அந்தச் சலுகைகளையும் ஊழல்களையும் பாதுகாப்பவர்களே விவாகரத்துக்கான சுதந்திரத்தை எதிர்க்கின்றார்கள். அவ்வாறே முதலாளித்துவ சமுதாயத்தில் சுயநிர்ணய உரிமையை அதாவது இனங்கள் பிரிந்து வாழ்வதற்கான சுதந்திரத்தைநிராகரித்தலானது ஜனநாயக நடைமுறைகளுக்கு மாறாக அந்த நடைமுறைகளுக்கு ஊறு விளைவிக்கக் கூடியவாறு, ஆட்சிபுரியும் பொலிஸ் முறையயும், பெரும்பான்மை இனத்தவர்களின் வரப்பிசாதங்களையும் பாதுகாப்பதன்றி வேறு எதுவுமன்று.

முதலாளித்துவ சமுதாயத்தில் நிலவும் சகல உறவுகளுக்கூடாகவும் எழுகின்ற அரசியல் ஏமாற்றுவித்தையின் காரணமாக, ஓரினத்தின் பிரிவினை சம்பந்தமாக அர்த்தமற்ற கேலிக்கிடமான விதண்டாவாதங்களை உளறிக்கொட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் பத்திரிகை எழுத்தாளர்களுக்கும்வசதிகள் ஏற்பட்டுள்ளன. அதுபற்றிச் சந்தேகமில்லை. அத்தகைய கட்டுக்கதைகளால் பயமுறுத்தப்படுபவர்களும் இன்றேல் பயந்தவர்கள் போல் நடிப்பவர்களும் பிற்போக்குவாதிகள் மட்டுமே. ஜனநாயகக் கொள்கைகளை ஏற்றுக் கொள்பவர்கள், அதாவது அரசின் பிரச்சினைகளை மக்கட் சமூகமே தீர்மானிக்க வேண்டுமென்பதில் ஆழ்ந்த அக்கறையுள்ளவர்கள், அரசியல்வாதிகள் வாயில் வந்தபடி உளறிக் கொட்டுவனவற்றிற்கும் மக்கள் தீர்மானிப்பவற்றுக்கும் இடையே அகன்ற இடைவெளி யிருப்பதை நன்கறிவார்கள். புவியியல் ரீதியான, பொருளியல் ரீதியான பிணைப்புக்களின் பெறுமதியையும், விசாலமான விற்பனைச் சந்தையினதும் பெரிய ஓர் அரசினதும் நன்மைகளையும் வெகுஜன சமூகமானது தனது அன்றாட அனுபவத்தின் மூலம் அறிந்துள்ளது. எனவே தேசிய அடக்குமுறை பற்றியும் நெருக்கடியும் சமூக கூட்டுறவைப் பேணிக்கொண்டிருக்க முடியாத அளவுக்கு உக்கிரமடைந்து சகல பொருளாதார

தொடர்புகளையும் துண்டிக்குமளவுக்குச் சென்றுவிடுமாயின் மட்டுமே அவர்கள் பிரிவினையை பயன்படுத்த முன்வருவர். அத்தகைய சந்தர்ப்பத்தில், முதலாளித்துவ வளர்ச்சிக்கும் வர்க்கப் போராட்டச் சுதந்திரத்தின் நலன்களுக்கும் சிறப்பாகப் பணிபுரியப் பிரிவினையினால் மாத்திரமே முடியும்.

முதலாளி வர்க்கத்துக்குள்ள பணம் பலத்துக்கு அடிபணிந்து, பணத்தின் அடிவருடிகளாக மாறி, அவர்களின் வர்க்க வரப்பிரசாதங்களைப் பொதுவாகவும் அரசாங்க சலுகைகளைக் குறிப்பாகவும் பாதுகாத்துக் கொடுக்கும் சிறு முதலாளித்துவ மென்ஷேவிக் வாதிகள், அரசுகள் சின்னாபின்னமாகுமென்ற கட்டுக்கதைகளால் சிறு முதலாளி வர்க்கத்தையும் விவசாயிகளையும் பயமுறுத்தியும், வரலாற்றுச் சம்பிரதாயங்களால் பொது மக்கள் சுதந்திரத்தை பாதுகாத்தல் தொடர்பான சொற்றொடர்களால் அவர்களை ஏமாற்றியும் முதலாளித்துவ முறையின் மீது மென்மேலும் நம்பிக்கை ஏற்படுத்துகின்றனர்.

தொழிலாளர் வர்க்க நலன்களாலும் முதலாளித்துவ வர்க்கத்துக்கெதிராக அவர்கள் நடத்திச் செல்லும் போராட்டத்தின் நலன்களாலும் சகல இனங்களையும் சேர்ந்த தொழிலாளர்களின் பூரண ஒத்துழைப்பும், மிக நெருக்கமானஒற்றுமையும் கோரப்படுகின்றன; சகல இனங்களையும் சார்ந்த முதலாளித்துவ இனவாதக் கொள்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்குமாறும் வேண்டப்படுகின்றன எனவே இனங்களின் சுயநிர்ணய உரிமையை அதாவது, அடக்கப்படும் ஓரினம் பிரிந்து செல்வதற்கான உரிமையை நிராகரிப்போர்கள் அல்லது அடக்கப்பட்ட இனத்தின் முதலாளிமார்களின் சகல கோரிக்கைகளுக்கு ஆதரவு கொடுப்போர்கள் இருப்பார்களாயின் அவர்கள் மாக்சிய-லெனினிஸ வாதத்தினாலும், பாட்டாளி வர்க்கக் கொள்

கையினுலும் நிராகரிக்கப்படுவது மாத்திரமன்றி முதலாளித்துவக் கொள்கைகளுக்குப் பாட்டாளி வர்க்கத்தை அடிமைப் படுத்தியவர்களுமாவர். தன்னை அதிகமாகச் சுரண்டி வாழ்பவன் சிங்கள முதலாளியா அல்லது தமிழ் முதலாளியா என்பதையிட்டுத் தொழிலாளர் வர்க்கம் வித்தியாசம் பாராட்டுவதில்லை. தனது வர்க்க நலன்களைப் புரிந்து கொண்டுள்ள தொழிலாளி சிங்கள முதலாளிமார்களின் அரசாங்கச் சலுகைகள் பற்றியோ, அரசாங்கச் சலுகை கிடைத்தபோது 'தமிழ் ஈழம்' என்ற சுவர்க்க லோகத்தை அமைப்பதாகத் தமிழ் முதலாளிமார் கொடுக்கும் சத்தியவாக்குகளைப் பற்றியோ அதேயளவுக்கு அக்கறை கொள்வதில்லை. கலப்புச் சனத்தொகையுள்ள ஓர் ஒன்றிணைந்த அரசின் கீழும் வெவ்வேறு இனங்களின் தனித்தனி அரசுகளின் கீழும் முதலாளித்துவம் வளர்ச்சியடையும்; எதிர்காலத்திலும் வளரக்கூடும். எவ்வாருயினும் தொழிலாளி சுரண்டப்படுவது ஓயாது நிகழும். சுரண்டலுக்கு எதிரான வெற்றிகரமான போராட்டத்திலும், வெவ்வேறு இனங்களைச் சேர்ந்த முதலாளித்துவம் வர்க்கப் பிரிவினரிடையே உயர்ந்த அந்தஸ்தொன்றைப் பெறுவதற்காக நடத்தப்படும் போராட்டத்திலும், பாட்டாளி வர்க்கம் இனவாதத்திலிருந்து விடுதலையாக வேண்டுமென்றும், திட்டவட்டமாக ஒரு மத்திய அரசின் கீழ் ஒன்றுபட வேண்டுமென்றும் எதிர்பார்க்கப்படுகின்றன. ஓரினத்தைச் சேர்ந்த பாட்டாளி வர்க்கம் 'தனது' இனத்தைச் சேர்ந்த முதலாளி வர்க்கத்தின் வரப்பிரசாதங்களுக்குச் சொற்ப அளவிலாவது ஒத்துழைப்பு வழங்குமாயின், அத்தகைய ஒத்துழைப்பு பிற இனங்களைச் சேர்ந்த பாட்டாளி வர்க்கத்துக்கிடையில் சந்தேகத்தைத் தோற்றுவிப்பது தவிர்க்க முடியாததாகிவிடும். அத்தகைய ஒத்துழைப்பினுல் முதலாளி வர்க்கம் மகிழ்ச்சியில் திளைத்துவிடுமாயினும், அது அனைத்துலகப் பாட்டாளி வர்க்கக் கூட்டுறவைப் பலவீனப் படுத்தி அவர்களிடையே பிரிவினையை ஏற்படுத்திவிடும். சுயநிர்ணய உரிமையை ஆட்சேபிப்பதானது நடை

முறையில் திட்டவட்டமாகவே ஆளும் வர்க்கத்தின் வரப்பிரசாதங்களுக்கு ஆதரவளிப்பதாகும். இதனாலேயே தொழிலாளர் வர்க்கம் சகல வரப்பிரசாதங்களையும் எதிர்ப்பதோடு இனங்களின் சுயநிர்ணய உரிமையை மிக உயர்வாகப் போற்றுகின்றது. இலங்கையில் வாழ்கின்ற சகல இனங்களையும் சார்ந்த குடிமக்கள் நீதியின் முன்னிலையில் சமமாக மதிக்கப்பட வேண்டும். பால் வித்தியாசம் மத வேறுபாடு என்பனவற்றைக் கருதியோ, பிறப்பு, இனம் ஆகிய அடிப்படையிலோ இலங்கையின் எந்த ஒரு பிரஜையதும் அரசியல் உரிமைகளும் பிற உரிமைகளும் வரையறுக்கப்படக் கூடாது. ஒரு விசேடஇனமோ அன்றி ஒரு மொழியோ அனுபவிக்கும் சகல சலுகைகளும் நிராகரிப்பதோடு அவை சட்ட விரோதமானவை எனவும் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஒரு குறிப்பிட்ட பிரதேசத்துக்குள் சிறுபான்மையோரின் கலாசாரக் கல்வித் தேவைகளுக்காகச் செலவிடப்படும் விகிதாசார நிதி ஒதுக்கீடானது, அக்குறிப்பிட்ட பிரதேசத்துக்குள் வாழும் முழுச் சனத்தொகையின் சிறுபான்மையோரது விகிதாசாரத்துக்குக் குறைந்ததாக இருக்கக் கூடாது.

[நிலச் சுவான்தாரர்களான பிரபுத்துவ இனவாதிகள் தொழிலாளர் வர்க்கத்தைப் பிளவுபடுத்திச் சீரழிக்கக் கங்கணம் கட்டியுள்ளார்கள். இனங்களை அடக்கு முறைக்கு உட்படுத்தும் கொள்கையானது இனங்களைப் பிரித்து வேறுக்குவதற்கும் அத்தேடு அது மக்களின் உள்ளங்களைப் படிப்படியாக மாசுபடுத்தும் கொள்கையுமாகும். தீவிர இனவாதிகள் திட்டம் தீட்டுவது, வெவ்வேறு இனங்களிடையே குரோத மனப்பான்மையை வளர்த்து பாமரர்களான மிகவும் அப்பாவிகளான மக்களின் உள்ளங்களிலே நச்சுத்தன்மையை வேரூன்றச் செய்வதாகும். எந்தவொரு தினசரிச் சிங்களப் பத்திரிகையையும் எடுத்துக்

கொள்ளுங்கள். அல்லது சிங்கள ஒலிபரப்புச் சேவையைக் கேளுங்கள். ''இச்சிங்கள நாடு நம்து நாடு'' ''வீர தீர சிங்களவர்'' எனும் பொருள்படும் உரைகளாலும் பாடல்களாலும் சிறுபான்மையோரின் மனம் புண்படுத்தப்படுகின்றன. இவற்றின் மூலம் இனங்களிடையே பரஸ்பர அவநம்பிக்கையும் சந்தேகமும் தூவப்படுகின்றன. இவ்வாறு எம்து பொதுசனத் தொடர்புச் சாதனங்கள் இனவாதக் கோஷங்களால் நிரம்பி வழியவில்லையா ?எனினும் தொழிலாளர் வர்க்கத்துக்குத் தேவையானது ஒற்றுமையன்றி பிரிவினையல்ல. எனவே, நடைமுறையில் வர்க்க உணர்வுள்ள தொழிலாளர்கள் சகல இனங்களையும் சேர்ந்த தொழிலாளர்களின் பூரண சமத்துவத்தையும் ஒற்றுமையையும் வலியுறுத்துவதன் மூலம் இனவாதிகளுக்குப் பதிலடி கொடுக்கின்றனர். தொழிலாளர் வர்க்க விரோதிகளால் பாமரப் பொது மக்களிடையே தூவப்படும் கீழ்தரமான மிதவாதங்களையும் மூடநம்பிக்கைகளையும் பார்க்கக் கொடிய எதிரியொன்று வேறில்லை.

மார்க்ஸீய - லெனினிஸ வாதிகளும் பொல்ஷெவிக் வாதிகளுமான நாம் சகலவிதமான இனவாதங்களையும் எதிர்க்கின்றோம். ஜனநாயக மத்திய அரசு வாதத்தை வலியுறுத்துகின்றோம். சிறப்புரிமைகளை எதிர்க்கின்ற நாம் ஏனைய சகல அம்சங்களிலும் சமத்துவம் நிலவுமிடத்து, பொருளாதார முன்னேற்றத்தினதும், பாட்டாளி வர்க்க முதலாளி வர்க்கங்களுக்கிடையிலான போராட்டத்தினதும் பிரச்சினைகளை பயனுள்ள முறையில் தீர்க்க சிறு அரசிலும் பார்க்க பெரிய அரசினால்தான் சாத்தியமாகுமென்பதை நாம் உணர்ந்துள்ளோம். எனினும் நாம் நிர்பந்திக்கப்பட்ட பிணைப்புகளை ஆதரிப்பதில்லை சுயேச்சையாக ஏற்படுத்திக் கொள்ளும் பிணைப்புக்களையே நாம் மதிக்கின்றோம். நிர்ப்பந்தமான பிணைப்புக்கள் நிலவும் இடங்களிலெல்லாம் இனங்கள் தனித்தனியாகப் பிரிந்து சென்றுவிட வேண்டுமென நாம் ஒருபோதும் வலியுறுத்துவதில்லை; அரசியல் ரீதியாக சுயநிர்ணய உரிமையை அதாவது சகல இனங்களுக்கும் இருக்க வேண்டிய பிரிந்து செல்வதற்கான உரிமையை நாம் திட்டவட்டமாகவும் வன்மையாகவும் வலியுறுத்துகின்றோம். வர்க்க உணர்வுள்ள தொழிலாளர்கள் பிரிவினை கோருவ

தில்லை. பெரிய அரசொன்றையும் பெரிய தொழிலாளர் இயக்கமொன்றையும் ஒன்றிணைப்பதாற் கிடைக்கும் நன்மையினை அவர்கள் நன்கறிவார்கள். எனினும் இனங்களுக் கிடையே முழுமையான சமத்துவம் இருந்தால் மாத்திரமே பெரிய ஒரு அரசு ஜனநாயக அரசாக இருக்க முடியும். இந்தச் சமத்துவத்தில் இனங்களின் பிரிவினை உரிமையும் உள்ளடங்கும். தேசிய அடக்குமுறைக்கும் தேசிய வரப்பிர சாதங்களுக்கும் எதிரான போராட்டம் பிரிவினை உரிமையைப் பாதுகாப்பதோடு பிரிக்கமுடியாதவாறு பின்னிப் பிணைந் துள்ளது. இவ்வுரிமையை வற்புறுத்திக் கூறுதல், வெளியிடு தல், ஏற்றுக்கொள்ளுதல் என்பனவற்றின் மூலமாக இனங் களுக்கிடையிலான சமத்துவத்தை வலியுறுத்துகின்றோம்; அவற்றுக்கிடையிலான நிர்பந்தப்பட்ட பிணைப்புக்களை ஏற் காது நிராகரிக்கின்றோம்; குறிப்பிட்ட ஓரினத்துக்கு வழங் படும் சகல விதமான அரச சலுகைகளையும் எதிர்க்கின் றோம்; சகல இனங்களையும் சேர்ந்த தொழிலாளர்கள் மத்தி யில் வர்க்க ஒத்துழைப்பு எனும் உயர் பண்பை முற்றாக வளர்க்கின்றோம். கட்டாய மானியமுறைப் பிணைப்புக்களையும் இராணுவ முறையிலான பிணைப்புக்களையும் ஒதுக்கி அவற் றுக்குப் பதிலாக சுயேச்சையான பிணைப்புக்களைப் பிரதியீடு செய்வதனால் வெவ்வேறு இனங்களையும் சார்ந்த தொழிலா ளர்களின் வர்க்க சகோதரத்துவம் வலுப்படுத்தப்படுகின்றது. தேசியப் பிரச்சினை தொடர்பான எமது கொள்கை இதுவே!

## எமது நோக்கம்

இதனால், தமிழ் பேசும் மக்கள் நடத்தும் போராட்டம் பற்றி எமக்குப் பின்வருமாறு கூறலாம். பிரிவினை பற்றிப் பேசுதல், அதனை ஆதரித்துப் பிரசாரம் செய்தல் என்பன வற்றை முதலாளித்துவ சட்டங்கள் தடை செய்யலாம். குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டையும் பொதுவாக அகில

இலங்கையையும் பொலிஸ், இராணுவ ஆணைக்குக் கீழும் நிர் வாகத்தின் கீழும் கொண்டுவரலாம். எனினும், பொலிஸாரின் கொடூரமான மோசமான அடக்குமுறையாலும் இந்த நிலை மையை மாற்ற முடியாது. தேசிய அபிவிருத்தித் திட்டங்க ளிலும் வேலை வாய்ப்பு வழங்குவ்திலும், கல்வி கலாசார வசதிகள் வழங்குவதிலும் மற்றும் அநேக துறைகளி லும் சிறுபான்மை இனமான தமிழினத்தை அடக்கியாள் வது அரசின் கொள்கையாகவிருக்கின்றது. விவசாய, வர்த்தக நடவடிக்கைகளிலும், வடக்குப் பிரதேச விவசாயி களுக்குச் சொற்ப சலுகையே கிடைக்கின்றது. மறு புறத்தில் தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையாகவுள்ள பிரதேசங் களில் வாழும் '' தாழ்த்தப்பட்ட வகுப்பைச் '' சேர்ந்த தமிழ் மக்கள் கேவலமான மனிதப் பண்பிற்கு எதிரான முறையில் அடக்கி ஆளப்படுகின்றனர். இன்றும்கூட, தாழ்த்தப்பட்ட வகுப்பினராக வகுத்துக் கொண்டுள்ள தமிழ் மக்கள்மீது காட்டுமிராண்டித்தனமாகப் பாரபட்சம் காட்ட இடமளிக் கப்பட்டுள்ளது; இவையனைத்தையும் கவனமாக மறுபரி சீலனை செய்து பார்க்கின் தமிழ்மக்களின் உண்மையான எதிரி யைத் தெளிவாக இனங்கண்டு கொள்ளலாம், இந்த எதிரி, தமிழர் விடுதலைக் கூட்டணியினர் கூறுவதுபோல் சாதாரண உழைக்கும் சிங்கள மக்களல்ல. சரியான - உண்மையான நிலைமை யாதெனில் இந்தத் தேசத்தின் சகல மக்களையும் பண்பு கெட்ட நிலைக்குத் தள்ளும் முதலாளித்துவவாதிகளான ஜே. ஆர். களும், சேனநாயக்காக்களும், சிறிமாவோக்களும், செல்வநாயகங்களும், அமிர்தலிங்கங்களுமாவர். இவர்கள் அனைவருமே தலைமை தாங்கும் முதலாளித்துவ வாதிகளாவர். நிலையாதெனில், ஜே. ஆர். அல்லது சிறிமா அல்லது அமிர்த லிங்கம் ஆகிய எவராயிருப்பினும் அவர்கள் யாவரும் தலைமை தாங்கும் முதலாளி வர்க்கமே உண்மையான எதிரியாகும். பழைய மென்ஷேவிக் வாதிகளும், புதிய இடதுசாரி எனத் தம்மை அழைத்துக் கொள்ளும் மென்ஷேவிக் சிதறல்களும் நாற்றமெடுக்கும் முதலாளி வர்க்கத்தின் அடிவருடிகளாக மாறியுள்ளனர். உழுத்துப்போன கேடுகெட்ட வரட்டு

முதலாளித்துவ வர்க்கமொன்றுள்ள ஒரு நாட்டில் ஆழமான நீதியான முதலாளித்துவ புரட்சியொன்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற ஒரு கால கட்டத்தில் இத்தேசத்தின் தமிழினம் தனது உண்மையான எதிரிகளைச் சரியாக மதிப்பீடு செய்து கொள்வது கட்டாயமாகவும் அத்தியாவசியமாகவும் இருக்கின்றது. தமிழர்களாக இருக்கட்டும்; சிங்களவர் களாக இருக்கட்டும்; அல்லது வேறெந்த இனத்தைச் சார்ந்த வர்களாகவும் இருக்கட்டும்; அவ்வினங்களைச் சேர்ந்த தொழிலாளர் வர்க்கப் பிரிவினர் நடாத்தும் போராட்டத் தின்போது அவ்வினங்களின் செல்வந்தர்கள் ஒன்றுகூடி, வர்க்கக் கண்ணோட்டத்தினுல் பார்த்து, தத்தமது சொத்துக் களையும் வர்க்க ஆட்சியையும் பாதுகாத்துக்கொள்ள அந்தத் தொழிலாளர்களை அடக்க முற்படுவார்கள். இந்த நிலைமை களின் கீழ் முதலாளித்துவ அமைப்பினுள் தேசிய பிரச்சினைக்கு முழுமையான விஞ்ஞான ரீதியான தீர்வொன்று காண்பது அரிதாகும். எனவே, இப்பிரச்சினையை முதலாளித்துவ விரோத சோஷலிஸ சமுதாயப் புரட்சியொன்ருல் மாத்திரமே தீர்க்க முடியும்; ஆட்சிக்கு வரும் பாட்டாளி வர்க்கத்தினுல் மாத்திரமே முடியும். சோஷலிஸக் குடியரசொன்றின் கீழ், நாட்டை இரு கூறிடுவதும் எதேச்சாதிகார ஒருமுகப்படுத்த லும் கண்டிக்கப்படும். உண்மையான சமத்துவ அடிப்படை யிலும், பல்வேறு சிறுபான்மையோருக்குச் சுயாட்சி வழங்கும் அடிப்படையிலும், நாட்டின் தேசியஒருமைப்பாடு பேணிப் பாதுகாத்து வரப்படும். மொழிபற்றி எடுத்துக்கொண்டால், சகல அரசாங்க நிறுவனங்களிலும் பணியாற்றும் மக்கள் பிரதி நிதிகள் நாட்டின் சகல தேசிய மொழிகளையும் பேசக்கூடிய வர்களாகவிருப்பர், சகல தேசிய மொழிகளிலும் சமகால மொழி பெயர்ப்புக்கள் வழங்கப்படும். சகல சட்டங்களும் அரச ஆணைகளும், ஆலோசனைகளும் எல்லாத் தேசிய மொழி களிலும் வெளியிடப்படும். கல்வி நிலையங்களில் தத்தமது தாய்மொழியிலோ அல்லது தாம் தெரிவு செய்துகொள்ளும் எந்தவொரு தேசிய மொழியிலோ கல்விப் போதனையைப் பெறும் உரிமை அங்கீகரிக்கப்படும். அரசாங்கத்தோடு தத் தமது தாய்மொழி மூலமாகவோ அல்லது தாம் விரும்பிய ஒரு

தேசிய மொழியிலோ தொடர்பு வைத்துக் கொள்ளும் உரிமைக்கு அங்கிகாரம் அளிக்கப்படும். மொழி வேறுபாடு காரணமாக சமூக - பொருளாதார - அரசியல் துறைகளிலும் மற்றும் சகலவிதமான துறைகளிலும் எந்த வகையான பார பட்சமும் எந்தவொரு பிரஜைக்கும் காட்டப்படமாட்டாது. எல்லாப் பிரஜைகளும் தேசிய மொழிகளை உபயோகிப்பதில் சம உரிமைகளை அனுபவிப்பர். எல்லாப் பிரஜைகளும் சம உரிமைகளை அனுபவிப்பதோடு, சமய, பால், குல, இன, மொழி பேதங்களின்றி சம வேலைக்குச் சம ஊதியம் உறுதிப் படுத்தப்படும். ஓரினம் மற்றோர் இனத்தைச் சமூக ரீதியிற் துன்புறுத்துவதையும் ஒழித்துக்கட்டுவதோடு, அதை மீறு வோர் சட்டப்படி தண்டிக்கவும் படுவார்கள். இந்திய வம்சாவளித் தோட்டத் தொழிலாளர் இந்தியாவுக்குத் திரும்பிச் செல்வதோ அன்றி இலங்கைப் பிரஜாவுரிமை கோருவதோ அவர்களின் சொந்த விருப்பத்துக்கு விடப்படும், இலங்கைப் பிரஜாவுரிமை பெற்றுள்ள இந்திய வம்சாவளி யினருக்கும் ஏனைய இலங்கைப் பிரஜைகள் பெற்றுள்ள சகல உரிமைகளும் உறுதிப்படுத்தப்படும். அரசாங்கத்தினதும் நாட்டினதும் அரசியல் விவகாரங்களில் மத ஸ்தாபனங்கள் தலையிடுவது தடை செய்யப்படும். ஒவ்வொருவரும் தாம் விரும்பிய ஒரு மதத்தை அனுஷ்டிக்கும் உரிமைக்கு உத்தர வாதமளிக்கப்படும். மத அடிப்படையிற் பாரபட்சம் காட்டு தல் தடை செய்யப்படும். கல்வியை முற்றாகவே அரசாங்கம் பொறுப்பேற்பதோடு அதன் உலகாயதத் தன்மை உறுதிப் படுத்தப்படும். சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று தேசிய மொழிகளையும் கற்றுக்கொள்ள சகலருக்கும் தேவை யான சகல வசதிகளும் செய்து கொடுக்கப்படும். சகல பிரஜைகளுக்கும் எவ்வித பாரபட்சமுமற்ற சமமான கல்வித் திட்டமொன்றுக்கான உத்தரவாத மளிக்கப்படும். தொழி லாளர் வர்க்கம் சோஷலிஸ அமைப்பின் கீழ் தேசியப் பிரச்சினை யைத் தீர்த்து, அதனை ஒழித்துவிடும் முறை இதுவாகும்.

தமிழ் பேசும் மக்கட் பிரிவினருக்குள்ள முன்னேற்றப் பாதை யாதெனில், சிங்கள இனத்தோடு சமத்துவமாக

வாழத் தேவையான சம உரிமைகளுக்குப் போராடும் அதே வேளையில், சிங்களம் பேசும் தொழிலாளர் வர்க்கத்தோடும் நசுக்கப்பட்டுள்ள பிற வர்க்கங்களைச் சேர்ந்த மக்கட் பிரிவினரோடும் கைகோர்த்துக் கொண்டு, ஏகாதிபத்தியத்தையும் முதலாளித்துவத்தையும் எதிர்த்துப் போராடி இந்த நாட்டில் முதலாளித்துவ அமைப்பைத் தகர்த்தெறிந்து சோஷலிஸப் புரட்சியை வெற்றிவாகை சூடச் செய்வதாகும். தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளைத் தமிழ் பேசும் மக்கள் தனித்து மேற்கொள்ளும் நடவடிக்கைகளால் மாத்திரம் தீர்த்துக்கொள்ள முயற்சிப்பது நிச்சயமாகவே தோல்வியடைந்துவிடும்.

தமிழர் விடுதலைக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் சுபீட்சம் நாடுவோர்களே! உங்கள் கடமை இதுதான்! களங்கமற்ற நியாயங்களை ஆயுதங்களாகத் தாங்கி முதலாளித்துவ தேசிய இயக்கங்களிலிருந்து வெளியேறி முன்னோக்கி வீறு நடை போடுங்கள்! இதற்காகத் தத்தமது வேலைத் திட்டங்களினதும் இயக்கங்களினதும் இயல்புகளை ஆராய்வதனுலும் பகுத்தாய்வு செய்வதனுலும் பாரிய பங்கினை நிறைவேற்ற முடியும். தேசிய இயக்கங்களிலுள்ள சுபீட்ச விரும்பிகள் பொதுப் புரட்சி இயக்கத்தை முன்னோக்கிச் செலுத்துவதோடு தமக்கேயுரித்தான தேசியக் கோரிக்கைகளையும் முன்னேக்கிச் செலுத்தக் கற்றுக்கொள்ள வேண்டும். முதலாளித்துவத்தைப் பாதுகாக்கும் தேவையற்றவர்களும், சனத் தொகையின் மிக வறிய தரங்களிலிருந்து வருபவர்களுமான அநேக நேர்மையான புரட்சிவாதிகள் தமிழினத்தின் தேசிய இயங்கங்களிலும் இளைஞர் இயக்கங்களிலும் இருப்பதை நாமறிவோம். அவர்களை முதலாளித்துவ விரோதப் போராட்டத்தின் முக்கிய பங்காளிகளாக மாற்றிக்கொள்வதன் மூலமாகவே தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைத்துவத்திலிருந்து தமிழ் மக்களை விடுவிக்கலாம்.

சிங்களத் தொழிலாளர்களும் உழைக்கும் மக்களும் முதலாளித்துவத்தை எதிர்த்து நடத்திச் செல்லும் போராட்டத்

தோடு தமிழ் தொழிலாளர்களும் உழைக்கும் மக்களும் முதலாளித்துவத்தை எதிர்த்து நடாத்திச் செல்லும் போராட்டத்தை முன்னெடுத்து, இரண்டறப் பிணைக்க வேண்டியதன் அவசியத்தைப் புரிந்து கொள்ள வேண்டிய காலம் தற்போது உதயமாகியுள்ளது. சோஷலிஸத்துக்காக நடத்தும் போராட்டத்துக்குத் தலைமை தாங்கும் தொழிலாளர் வர்க்கம் தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளை வென்றெடுக்கும் போராட்டத்திற்கும் தலைமை தாங்க வேண்டும்.

இலங்கை இன்று எதிர் நோக்கியுள்ள அடிப்படை சமூக - பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதனுலேயே தேசியப் பிரச்சினைக்குப் பயனுள்ள தீர்வொன்றைக் காணமுடியும். இனவாத முதலாளித்துவ வர்க்கப் பிரிவினர் தமிழ் மக்களுக்கும் ஏனைய சிறுபான்மையோருக்கும் எதிராக விதித்துள்ள கட்டுப்பாடுகளை அதே முதலாளி வர்க்கம் தளர்த்தி விடுமென நாம் எதிர்பார்ப்பதற்கில்லை. எனினும் தொழிலாளர் வர்க்கத்தின் தலையாய கடமை தமது குரலை மிக உச்ச தொனியில் ஒலிக்கச் செய்வதாகும். விசேடமாக தேசிய அடக்குமுறைக்கு எதிராகத் தமது வெறுப்பைத் தெரிவிக்கும் போது சிங்களம் பேசும் தொழிலாளர்களின் குரல் மிகப் பலமாகவே ஒலிக்க வேண்டும்.

★ எந்தவோர் இனத்துக்கோ மொழிக்கோ விசேட சலுகைகள் வேண்டாம்!

★ சகல இனங்களுக்கும் முழுமையான சமத்துவம்!!

★ சகல இனங்களையும் சேர்ந்த தொழிலாளர்களின் ஒற்றுமை!!!

எமது கோரிக்கைகள் இவையே.

# பின்னுரை

முன்னர் சிங்கள மொழியில் வெளிவந்த இந்த நூல் இப்பொழுது தமிழ் மொழியில் வெளியாகிறது. இந்த இடைப்பட்ட காலத்தில் நம் நாட்டில் பல்வேறு சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. தேசிய அரசுப் பேரவையில் புதிய அரசியல் அமைப்புச் சட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த புதிய அரசியல் அமைப்புச் சட்டம் முன்னர் ஐக்கிய முன்னணியினரால் நிறைவேற்றப்பட்ட அரசியல் அமைப்பு சட்டத்தைப் போன்று மொழி, சமயம், ஆகிய விடயங்களில் நாட்டின் தேசிய சிறுபான்மை இனங்களை இரண்டாந்தரப் பிரஜைகளாக்கியுள்ளது.

இன, மொழி வேறுபாடுகளின் மூலம் முதலாளித்துவத்தைப் பேணிக் காப்பதிலே ஈடுபட்டுள்ள முதலாளித்துவ வர்க்கத்திடமிருந்து - அவ்வர்க்கம் தமிழராய் இருந்தால் என்ன, அல்லது சிங்களவராய் இருந்தால் என்ன - இதைவிட வேறு எதனையும் எதிர்பார்ப்பதற்கில்லை. தேசிய இனப் பிரச்சினை புரட்சிகர சோஷலிஸ அமைப்பில்தான் தீர்வு காணப்படும் என்பது வரலாற்று ரீதியான உண்மையாகும். தேசிய இனப் பிரச்சினை பற்றியோ, அல்லது சமூக பொருளாதார பிரச்சினைகள் பற்றியோ பேசுகின்ற புரட்சிவாதியை - மார்க்ஸிஸ - லெனினிஸ வாதியை, அல்லது மங்கிய லெனினிஸ இயக்கத்தில் அங்கம் வகிக்கின்றவரை போதனைகளால் அன்றி அவரின் செயல்பாடுகளை வைத்துத்தான் கணிக்க வேண்டும். இவ்வரலாற்று உண்மையை புரிந்துகொண்டு இலங்கையின் பாட்டாளி வர்க்க இயக்கத்தில் உண்மையான தொழிலாளர் வர்க்க இயக்கத்தின் உண்மைகளையும் கோரிக்கைகளையும் எவர் முன்வைத்தாலும் அல்லது எந்த இயக்கம் முன்வந்தாலும் மக்கள் தொகையின்படி நோக்குமிடத்து, நமது நாட்டின் சிறுபான்மை இனத்தவரின் உரிமைகளை, கோரிக்கைகள் என்பனபற்றி தீர்மானிப்பது யார் அல்லது எந்த இயக்கம் என்பது குறித்து முடிவெடுக்க நமது நாட்டின் தொழிலாளருக்கு சிறந்த சந்தர்ப்பமும் சூழ்நிலையும் இன்று உருவாகியுள்ளது,

தமிழ் பேசும் மக்களின் அடிப்படை மனித உரிமைகள் பற்றியும் அவர்களின் தேவைகள் நெருக்கடிகள் பற்றியும் சிங்களத் தொழிலாளர்களுக்கு எடுத்துரைக்கும் பணியில் மக்கள் விடுதலை முன்னணி ஈடுபட்டுழைக்க முன்வந்து இன்னும் அதிக நாட்களாகிவிடவில்லை. மக்கள் விடுதலை முன்னணி தமிழ் பேசும் மக்கள் மத்தியில் சென்று பணி புரிவதைக் காணும் சந்தர்ப்பவாத அரசியல் வாதிகளும் தொழிலாளர் வர்க்கத் துரோகிகளும் தமக்குள்ள இடம் பறிபோகும் ஆபத்தை உணர்ந்து முன்னணி பற்றி தமிழ் பேசும் மக்கள் மத்தியில் அவதூறுப் பிரசாரத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

செந்தமிழர் இயக்கத்தால் நடாத்தப்பட்ட மகாநாட்டில் தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை இருப்பதை ஏற்றுப் பேசிய வாசுதேவ, தர்மசேகரா போன்றோர் இலங்கை ஆசிரியர் சங்கம் காலியில் நடாத்திய 21-வது வருடாந்த பிரதிநிதிகள் மகாநாட்டின் போது தமிழ் மக்களுக்குரிய "சுயநிர்ணய உரிமையை அங்கிகரிக்க வேண்டும்" என்ற தீர்மானத்திற்கு எதிராக வாக்களித்துள்ளனர்.

இதிலிருந்து என்ன புலனாகின்றது? வகுப்பு வாதத்தை முன்வைத்து தொழிலாளர் வர்க்கத்தை மொட்டை அடிப்பதற்கு வாசு, தர்மசேகரா போன்றோர் முயன்று வருகின்றனர். இந்த மாக்சிஸ - லெனினிஸ வாதிகள் பேசுவது என்ன, செய்வது என்ன என்பது பற்றி மக்கள் புரிந்து கொள்வதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

சமீப காலத்திலென்றாலும் சரி, மக்கள் விடுதலை முன்னணியின் சமீப கால வரலாற்றில் என்றாலும் சரி, சரி - பிழைகளை உணர்ந்து முற்போக்குப் பாதையால் அணி திரண்டு செல்வது மக்கள் விடுதலை முன்னணிதான் என்பதை மக்கள் அறிந்துள்ளனர்.

தொழில் புரியும் மக்களது பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் விதத்திலும் தேசிய இனப் பிரச்சினைகளுக்கும் நிரந்தர தீர்வு காணும் பொருட்டும் சரியான கொள்கைகளை வகுத்து திட்டங்கள் தீட்டி புரட்சிகர சோஷலிஸ பாதையில் வெற்றிகரமாக மக்கள் விடுதலை முன்னணி அணி வகுத்துச் செல்கின்றது,

இன்றே வாங்கி படியுங்கள்!

# மக்கள் விடுதலை முன்னணியின் புரட்சிகர கொள்கை பிரகடனம்

"நியமுவா" வெளியீடு

விலை ரூபாய் 1/25


---


எமது அடுத்த வெளியீடு

# 1971-ம் ஆண்டு ஏப்பிரல் இலங்கையை திரும்பி பார்க்கிறோம்

## மக்கள் விடுதலை முன்னணியின் ஓர் சுய விமர்சனம்

எல்லா விபரங்களுக்கும்:

லயனல் போபகே

மக்கள் விடுதலை முன்னணி,

14, சே. சிறில் சி. பெரேரா மாவத்தை, கொழும்பு-13.

"வெவ்வேறு இனங்களைச் சேர்ந்த முதலாளிகள்
கூட்டு நிறுவனங்களின் அதிகார சபைகளில்
முழுமையான கருத்தொற்றுமையோடு
ஒன்றுகப் பணியாற்றுவதை நாம்காண்கிறேம்.
வெவ்வேறு இனங்களைச் சேர்ந்த
தொழிலாளர்கள்
தொழிற்சாலைகளில் தோளோடுதோள் நின்று
வேலை செய்கின்றுர்கள்.
எந்தவொரு பாரதூரமான,
பாரிய அரசியற் பிரச்சினையின் போதும்
கட்சிகளாகப் பிரிவது
வர்க்க அடிப்படையிலன்றி
இன அடிப்படையிலல்ல......"

— லெனின்

தேசியப் பிரச்சினை பற்றிய விமர்சனக் குறிப்புகள்
(1913 ஒக்டோபர் - டிஸம்பர்)

விலை ரூபா 3.00

---

14, கே. சிரில் சி பெரேரா மாவத்தை, கொழும்பு-13 ஐச் சேர்ந்த தோழர் லயனல் போபகேயினுல் மக்கள் விடுதலை முன்னணிக்காக 33/1, மேபீல்ட் ரோட்டிலிருக்கும் மேபெயார் அச்சகத்தில் அச்சிட்டு இப்பிரசுரம் வெளியிடப்பட்டது